இதழ் 232

# மண்

ஜேர்மனி / 2025
ஆடி - ஆவணி / Jul - Aug





## வாழும்பொழுதுகளில் வாழ்த்தி மகிழ்வோம்

பத்திரிகைத் துறையில் பொன்விழா (50) கடந்து
பவளவிழா (80) கண்ட மூத்த தமிழ் ஊடகவியலாளர்
திரு எஸ் கே காசிலிங்கம் - பிரான்ஸ்






ஐரோப்பாவில் வசிக்கும் பழைய மாணவர்கள் இலங்கையில் வசிக்கும் தமது ஆசிரியரின் பிறந்தநாளுக்காக துணுக்காய் ஒளிரும் வாழ்வக மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோக்கு உணவு வழங்கல் 26.05.2025




யேர்மனியில் வசிக்கும் எமது வாசகர் திருமதி பிங்கலை செந்திலன் அவர்களின் தாயாரின் நினைவாக மன்னாரிலுள்ள சாந்தோம் முதியோர் இல்லம் முதியோருக்கு உணவளித்தல் 31.05.2025




யேர்மனியில் வசிக்கும் எமது வாசகர் திரு சின்னையா வேலும்மயிலும் அவர்களின் பிறந்தநாளில் மாங்குளம் “நல்லாயன் சிறுவர் இல்லம்” சிறுவர்களுக்கு உணவளித்தல் 05.06.2025

# உள்ளே

- எங்கள் கருத்து
- சிறுவர்வட்டம்
- வினாவிடைப்போட்டி
- சிறுவர்போட்டிகள்
- குறளும் பொருளும்
- கவிச்சோலை
- இலக்கியச் சாரல்
- சிறுகதை, கட்டுரை
- குறுக்கெழுத்துப்போட்டி
- சுகாதாரக்குறிப்புகள்
- செய்திக்கண்ணோட்டம்
- ஆதரவற்றோர் உதவிநிதி

**முகவரி:** V. Sivarajah
Am Windhoevel 18a
47249 Duisburg
Germany

**தொலைபேசி:** 0203/8073898

015254799233

**மின்னஞ்சல்:** v.sivarajah@arcor.de

**வங்கிவிபரம்:** Mann (Erde) Verein e.V. Duisburg
Stadtsparkasse Duisburg
Kontonummer: 225 000 421
Bankleitzahl: 350 500 00
IBAN-Nr.: DE41 3505 0000 0225 0004 21
SWIFT-BIC: DUISDE33XXX

# ஆசிரியர் பக்கம்...

அனைவருக்கும் வணககம்!...

நமதுநாட்டிலுள்ள தற்போதய அரசாங்கம் ஊழலை ஒழித்தல் மற்றும் குற்றவாளிகளை கண்டுபிடித்து சட்டத்தின்முன் நிறுததுதல் என்னும் விடயத்தில் தொடர்கிறது. அந்த வகையில் முன்னைய ஆட்சியில் இருந்த ஊழல்வாதிகளை கைது செய்யும் செயற்பாட்டில் துணிந்து செயற்படுவது இந்த அரசாங்கம்தான். பாராட்டுக்குரிய விடயமாகும். ஆனால் இதுவரை கைதுசெய்யப்பட்டவர்கள் பெரும் புள்ளிகளல்ல. இந்தப் பெரும்புள்ளிகள் மீது அரசாங்கம் கை வைக்குமா?.. இதற்குரிய தற்துணிவு இந்த அரசாங்கத்திடம் இருக்கிறதா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்..

அடுத்தது ஈஸ்டர் தாக்குதல் விடயமாக விசாரணைகள் தொடர்கின்றன. அதிரடியாகப் பல அரசியல் வாதிகள் கைது செய்யப்படுவதுடன் பல உண்மைகள் வெளிவரக்காத்திருக்கின்றன. மறுபுறம் வனவளத் திணைக்களம், மகாவலித்திணைக்களம், இராணுவம், பொலிஸ் படைகளின் அத்துமீறல்களால் காணி பிடிப்பு உட்படப் பல பிரச்சனைகளை மக்கள் எதிர்கொண்டுள்ளனர். அரசாங்கத்தின் எதிர்கால நடவடிக்கைகள் தமிழர் பிரச்சனைகளில் எவ்விதமான சாதகமான விளைவுகளைத் தரும் என்று பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இதற்கிடையில் ஈஸ்டர் குட்டுத்தாக்குதல், யாழ்-செம்மணி விவகாரம் பூதாகரமாக ஒரு பேசு பொருளாக மாறியிருக்கின்றது.. ஏற்கனவே இலங்கையில் இடம்பெற்றிருக்கும் இனப்படுகொலை, மனித உரிமை மீறல், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விடயங்களில் அரசாங்கம் இதுவரை பெரியளவில் தீர்வை எட்டவில்லை என்பது உண்மையே. இன்றைய நிலையில் பல நெருக்கடிகளையும் சவால்களையும் எதிர்கொண்டு வரும் அரசாங்கம் குற்றம் சாட்டப்படும் பெரும் புள்ளிகள் மற்றும் அரசியல்வாதிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கத் தயங்குவதும் வெட்டவெளிச்சமாகத் தெரிகின்றது. என்ன செய்ய முடியும் பதவி ஏற்று ஒரு வருடம்கூட முடிவடையாத நிலையில் எல்லாவற்றையும் தீர்க்கவேண்டும் என எதிர்பார்ப்பதும் தவறுதான். ஆகவே பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

அடுத்த நெருக்கடியாக செம்மணி புதைகுழிவிவகாரம் மற்றும் புத்தவிகாரை விடயமும் இன்று பெரும் பிரச்சனையாக உருவெடுத்து நிற்கின்றன. விகாரையை இடித்து அழிக்க வேண்டும் என ஒருசாரர் போராட்டம் மறுபுறம் ஒரு முடியையும் எடுக்க முடியாத நிலையில் அரச தரப்பு. இதன் போராட்டமும் தொடர்கின்றது. எப்படியான முடிவு எட்டப்படும் என்பது கேள்விக்குறிதான்.

செம்மணி மனித புதைகுழிவிவகாரத்தில் 9.7.2025 வரை(23நாட்கள்) யாழ் செம்மணியில் 63 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது. 23,24,25ம் திகதிகளில் செம்மணியில் ஒன்றுதிரண்டு ”அணையாவிளக்குப்” போராட்டத்தை மக்கள் மாபெரும் நினைவஞ்சலி நிகழ்வாக நடாத்தினர். இந்த நிகழ்வில் சர்வதேச மனித உரிமைகள் தாபனத்தின் தலைவர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தியதுடன் மாலை இடம்பெற்ற கலந்துரையாடலிலும் கலந்துகொணடார். அவர் திருகோணமலை, கண்டிக்கும் சென்று மக்கள் குறைகளை அறிந்து சென்றுள்ளார். ஆனால் அவர் இலங்கையின் ஆளும்கட்சி எதிர்க்கட்சி மற்றும் தமிழர் தரப்பினர்களுடன் பேச்சு வார்த்தை நடாத்தியதன் அடிப்படையில் தற்போதுள்ள அரசாங்கத்துடன் பேச்சு நடாத்தித் தீர்வைக் காணும்படி சொல்லிவிட்டுச் சென்றிருக்கிறார்.

இந்தச் செம்மணி விவகாரத்தில்தமிழர் தரப்பிலும் பல கருத்து முரண்பாடுகள் காணப்படுகின்றன. செம்மணியில் இலங்கைப் படைகளால் அப்பாவி மக்கள் கொன்று புதைத்த புதைகுழிகளைப் போல விடுதலைப் புலிகளாலும் ஏனைய சில தமிழ் இயங்கங்களாலும் கொன்று புதைக்கப்பட்ட மனித புதைகுழிகள் செம்மணி மாத்திரமல்ல, மன்னார், கொக்குளாய், துணுக்காய், மண்டை தீவு என்று எங்கெல்லாம், மனித புதைகுழிகள் இருக்கின்றது என்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றனவோ அங்கெல்லாம், அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு உண்மைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும். மனித எச்சங்கள் மீட்கப்படுமாயின் அவை எந்தக் காலப் பகுதியில் புதைக்கப்பட்டவை என்பது கண்டறியப்பட்டு சம்மந்தப்பட்டவர்கள் யார் என்பதும் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்ற குரல்களும் ஒலிக்கின்றன.

ஒரு இனப் போராட்டத்தில் இழைக்கப்பட்ட மனிதகுல அநீதிக்கு உயிர்ப்புள்ள சாட்சியமாய் செம்மணி இருக்க வழிவகை செய்ய வேண்டியது இன்றைய இளைஞர்களின், தமிழின உணர்வுள்ள அனைத்து தமிழர்களினதும் பொறுப்பாகும்.சிலர் செம்மணியில் மீட்கப்பட்டது பயங்கரவாதிகளின் உடல் என்று வெள்ளையடிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.எமது பிரதேசத்தில் யுத்தம் நிலவிய காலத்த பல்வேறு மனிதப் புதைகுழிகள் உருவாக்கப்பட்டிருப்பதாக சொல்லப்படுகின்றது. இதில் பல்வேறு தரப்புக்கள் சம்மந்தப்பட்டிருக்கின்றன என்ற தகவல்களும் இருக்கின்றன.

செம்மணியில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின் அகழ்வுப் பணிகளும், அங்கு மீட்கப்படுகின்ற மனித எச்சங்களும், புதைகுழி விவகாரத்தினை மீண்டும் பேசு பொருளாக மாற்றி இருக்கின்றது.இந்நிலையில், இவ்விடயம் தொடர்பில் எமது மக்களிடையே நிலவுகின்ற குழப்ப நிலையை மேலும் தூண்டிவிடுவதாக சில சுயலாப அரசியல் சக்திகளின் கருத்துகளும், செயற்பாடுகளும் அமைந்து வருகின்றன.எனவே, மேற்படி விடயம் தொடர்பில் ஆய்வுகள் மற்றும் விசாரணைகளை தொடர்ச்சியான முன்கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும். அதற்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

- **ஆசிரியர்** - 10.07.2025

## சிறுவர் வட்டம்...




## ஆத்திசூடி...

### செய்வன திருந்தச்செய்:-

ஒரு காரியத்தைச் செய்ய ஆரம்பிக்கிறாய் நீ செய்யும் அக்காரியம் நல்லது. அவசியமானதும்கூட. அத்தகைய காரியத்தைச் செய்ய முற்படும் நீ எப்படிச் செயற்படவேண்டும்?..அவசரப்படாமல், தீர ஆலோசித்து, அக்காரியத்தை எவ்வாறு செய்தால் சிறப்பாக, தோல்வி இல்லாமல் செய்துமுடிக்கலாம் என்பதைத் திட்டமிட வேண்டும்.. அக்காரியத்தை முடிக்க வேண்டும் என்று அரை குறையாகச் செய்யக்கூடாது. திருத்தமாக, திட்டமிட்டு, நிதானமாகச் செய்ய வேண்டுமேயொழிய, செம்மையில்லாமல் அவசர அவசரமாகச் செய்யக்கூடாது. சீக்கிரம் முடிக்க வேண்டும் என்பதற்காக அவசரக் கோலம் அள்ளித் தெளிப்பது போலச் செய்யக்கூடாது. நீ செய்யும் எந்தக் காரியத்தையும் திருத்தமாகச் செய் என்று வலியுறுத்துகிறார் ஔவைப்பாட்டி!..

### சேர் இடம் அறிந்து சேர்:-

ஒரு குட்டிக்கதை ஒருவன் இரண்டு கிளிகளைப் பிடித்தான். ஒரு கிளியைக் கசாப்புக் கடைக்காரனிடமும் மற்றதை ஒரு குடியானவனிடமும் விற்றான். மாதங்கள் உருண்டன. கசாப்புக்கடைக் கிளி அங்கு இறைச்சி வாங்க வருவோரின் பேச்சுக்களைக் கேட்டுத் தானும் பேசக்கற்றுக் கொண்டது. எப்படி?.."வெட்டு" "கொத்து" "ஆட்டுக்கறி ஆறு ரூபாய்" இப்படியாக.. குடியானவனின் வீட்டில் வளர்ந்த கிளி வீட்டுக்கு வருவோரை "வாருங்கள்" "உட்காருங்கள்" "தாகத்துக்கு என்ன சாப்பிடுகிறீர்கள்" என்று அன்பும் மரியாதையாகக் கேட்கும். ஒரே இடத்தில் பிறந்த இவ்விரு கிளிகளின் பேச்சில் இப்படிப்பட்ட வேறுபாடு ஏன்?..அவை வளர்ந்த இடத்தின் சூழ்நிலை. ஆகவே சேரத்தகு நல்ல இடத்தை ஆராய்ந்து தேர்ந்தெடுத்துச் சேர் என்கிறார் ஔவைப்பாட்டி!..

# நல்நெறிபற்றி........

- வி நந்தகுமாரன் -

## தவறுகள் தவிர் தர்மம் தளைக்கும்

தர்மம் தேசத்திற்கு செய்ய வேண்டியதைச் செய்கிறது.
தர்மம் நல்லதை நினைத்து நன்மைகளை நிறைவு படுத்துகிறது.
தர்மம் தரித்திருக்கும் இடத்தில், துன்பம் தரித்து நிற்காது.
தர்மம் புண்ணிய காரியங்களைச் செய்து புனிதம் பெறுகிறது.
தவறுகளால் சங்கடப்படுவதைவிட, சரி செய்து வாழ்வது மேல்.
தள்ளாடும் வயதிலும் தன்னம்பிக்கை தளராமல் தெளிவாயிரு.
தவறான முறையில் தலையைக் கொடுத்து, பின் தலையைச்சொறியாதே.
தவறு செய்பவர்கள் தவறுகள் துன்பங்களை தொடக்கி வைத்து, துயரங்களை வளர்க்கிறது.
தகாத தப்பான செயலைச் செய்யும்போது, நமக்கு இயலாமை தோன்றுகிறது.
தவறுகள் தடுத்து நிறுத்தப்படும்போது, துன்மார்க்கங்கள் தூக்கி எறியப்படும்.
தவறுகளை விட்டு விலகும்போது, நீ தூய்மையான மனிதனாகிறாய்.
தவறான குணங்களும், துரோகத் தனங்களும், மீண்டும் துன்பங்களைத் திணிக்கும்.
தவறான தகவலானாலும், தயவுடன் பரிமாற்றம் செய்தல் நின்மதி நிலைக்கும்.
தவறான சிந்தனையின் தன்மை, தீய வழிக்கே இழுத்துச் சென்று இழிவடைகிறது.
தவறுகளைத் தவிர்த்து தன்னைத்தானே காப்பாற்றுவது தலை சிறந்த வாழ்க்கை முறை.
தடுக்க முடியாத கோபங்களால், உனக்குள் தவறான வார்த்தைகள் வந்து நுழைகிறது.
தகப்பன் புத்திமதிகளையும், தாயின் அன்பையும் பேணிப் பாதுகாத்துக் கொள்.
தலை நிமிர்ந்து நிற்க தங்கத்தால் முடியாது, ஆனால் ஒப்பற்ற ஒழுக்கத்தால் முடியும்.
தலைவன் இல்லாமல் தானே இயங்கும் எறும்பின் ஏற்றங்களை எண்ணிப்பார்.
தர்மம் கடமைக் காலத்தை தப்பாமல் கண்ணும் கருத்துமாக கடைப்பிடிக்கிறது.
தர்மம் பொய் பேசி புரளிகள் உண்டு பண்ணாது, உண்மை பேசி உத்தமனாய் வாழும்.
தர்மத்திற்கு தாக்கி அழிக்கும் தன்மை கிடையாது, எதனையும் தாங்கும் தன்மை உண்டு.
தர்மம், தானம் வழங்குவதில் மட்டும் இல்லை, தயவு காட்டினாலும் தர்மம் தான்.
தர்மம் பிறர் பொருளை கவராதிருத்தலும், பிறரை துன்புறுத்தாமல் இருத்தலுமேயாகும்.
தர்மங்கள் தானங்கள், வணக்க வந்தனங்கள், வாழ்க்கையை வெளிச்சமாக்குகிறது.

# ஆடிப்பிறப்பு!..

செல்வி சாமினா சிவதாசன் -எசன்- ஜேர்மனி

"ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்த மானந்தம் தோழர்களே!
கூடிப் பனங்கட்டி கூழும் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே"

இப்பாடல் ஆடிப்பிறப்பு பற்றி யாழ்ப்பாணம் நவாலியூர் சோமசுந்தரப் புலவர் பாடிய ஓர் இனியபாடல் ஆகும். ஆடிப்பிறப்பு என்ற பண்டிகை இந்து சமூகத்தில் ஒரு முக்கியமான பண்டிகையாகும். தைப்பொங்கல் மற்றும் சித்திரை வருடப்பிறப்பு போலவே ஆடிப்பிறப்பும் ஒரு மாதத் தொடக்கத்தை கூறுக்கின்றது. ஆடிப்பிறப்பு சைவத் தமிழ் மக்களினால் இந்து சமயத்தவர்களின் நாள்காட்டிப்படி ஆடி மாதம் முதலாம் திகதி கொண்டாடப்படுகின்றது.

சூரியன் வடதிசை நோக்கிச் செல்லும் தை தொடக்கம் ஆனி வரையுள்ள ஆறு மாத காலம் உத்தராயண காலம் எனப்படும். இது தேவர்களுக்கு ஒரு நாளின் பகல் பொழுதாகும். பின்னர் சூரியன் தெற்கு நோக்கிச் செல்லும் காலம் ஆடி முதல் மார்கழி வரையுள்ள ஆறு மாத காலம் தட்சணாயண காலம் ஆகும். இது தேவர்களுக்கு இராப்பொழுதாகும். தட்சணாயணத்தின் ஆரம்ப தினம் ஆடிமாத முதலாம் நாள் ஆகும். இக்காலம் கோடைகால வெப்பம் தணிந்து குளிர்மை படிப்படியாக பெருகும் இயல்புடையது.

பனங்கட்டி, தேங்காய் துண்டுகள் கலந்த மாவின் சுவை சொட்டும் கூழ், சர்க்கரையின் தித்திப்புடன் கொழுக்கட்டை இவையிரண்டும் ஈழத்தமிழர்களின் சைவமக்களின் வீடுகளில் ஆடிப்பிறப்பன்று தவறாது இடம்பிடிக்கும் உணவுகள் ஆகும். ஆன்மிக மகிழ்ச்சியோடும், சமூகவாழ்வின் ஒற்றுமையோடும் கூடிய ஒரு சிறப்பு நாளாகும். இந்நாளில் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் ஒன்றிணைந்து சிரித்து மகிழ்வதும், பாரம்பரிய உணவுகளை பகிர்ந்து உண்டலும் சமூகப்பிணைப்பை வலுப்படுத்துகின்றன.

ஆடிப்பிறப்பு நம்மை இயற்கையின் சுழற்சியையும், ஆண்டின் பருவகால மாறுதகளையும் நினைவூட்டுகிறது. இது தமிழரின் பண்பாட்டு வாழ்வியலின் ஒரு அங்கமாக, காலம் கடந்தும் தொடர்ந்து கொண்டாடப்படும் ஒரு திருநாளாக இருக்கிறது. ஆடிப்பிறப்பில் மகிழ்ச்சியுடன் அனைவரும் கூடி உறவுகளை வலுப்படுத்திக் கொள்ளும் இந்தப் பண்டிகை, நம் பாரம்பரியத்தின் அழகையும், அடையாளத்தையும் நிரூபிக்கிறது.

இந்த விழா சிறியதாகத் தோன்றினாலும், அதன் முக்கியத்துவத்தை அறிந்து, உலகெங்கும வாழும் தமிழர்களும் குறிப்பாக இந்துசமயத்தவர்களும் இதைப் போன்ற சமயம் சார்ந்த நிகழ்வுகளை கொண்டாடி, இதனை அடுத்த தலைமுறைக்கு எடுத்து செல்ல வேண்டும்.

அனைத்து மன் சஞ்சிகை வாசகர்களுக்கு ஆடிப்பிறப்பு நல் வாழ்த்துககள்!..





# முல்லாவின் கதை

## பூனை எங்கே?..

முல்லா நஸ்ருதீன் தனது நண்பர்களுக்கு விருந்தளிப்பதற்காக இறைச்சி வாங்கி, தன் மனைவியிடம் அளித்தார். சாப்பாடு தயாராகி மேஜைக்கு வந்தபோது இறைச்சியைக் காணவில்லை. முல்லாவின் மனைவி இறைச்சி முழுவதையும் சாப்பிட்டிருந்தார். முல்லா, தன் மனைவியிடம் சாப்பாட்டில் இறைச்சி எங்கே? என்று கேட்டார்.

பூனை சாப்பிட்டுவிட்டதாக முல்லாவின் மனைவி கூறினார். மூன்று பவுண்டு இறைச்சியையுமா? என்றார் நஸ்ருதீன். ”ஆமாம்” என்று சாதித்தார் அவர் மனைவி. அப்போது அங்கே தென்பட்ட பூனையைத் தூ க்கி எடைபோட்டுப் பார்த்தார். பூனை மூன்று பவுண்டுகள் எடை இருந்தது.

”இது பூனையின் எடை என்றால், இறைச்சி எங்கே?” என்று கேட்டார் முல்லா. ” இது வெறும் இறைச்சியின் எடைதான் என்றால் பூனை எங்கே” என்று கோபத்துடன் கேட்டார் முல்லா.....

........................................................................................................

## பொன்மொழிகள்..

- புத்தகம் இல்லா வீடு ஆன்மா இல்லாத கூடு..
- இன்ப வாழ்வுக்கு வழி அமைதியான வாழ்க்கை முறை..
- கோபத்தை வெற்றிகொள்வதற்கு ஒரே வழி அதைத் தாமதப்படுத்துவது.
- அதிஸ்டம் வீரனைக்கண்டு அஞ்சுகிறது.கோழையைக்கண்டு திறனடிக்கிறது.
- ஒரு நூலகத்தையும் ஒரு தோட்டத்தையும் வைத்திருக்கும் ஒருவனுக்கு வேறேதும் தேவையில்லை.

# வேற்றுமை...

1) வேற்றுமை என்றால் என்ன?
- பெயர்ச்சொல்லின் கருத்தினை வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமை எனப்படும்.

2) வேற்றுமை எத்தனை வகைப்படும்?
- வேற்றுமை எட்டு வகைப்படும்.

3) முதலாம் வேற்றுமைக்கு உருபு உள்ளதா?
- முதலாம் வேற்றுமைக்கு உருபு இல்லை.

4) உருபு இல்லாத வேற்றுமைகள் எவை?
- முதலாம் வேற்றுமையும் எட்டாம் வேற்றுமையும் உருபு இல்லாத வேற்றுமைகள் ஆகும்.

5) முதலாம் வேற்றுமையை எவ்வாறு அழைப்பார்?
- முதலாம் வேற்றுமையை எழுவாய் வேற்றுமை என்றும் அழைப்பர்.

6) இரண்டாம் வேற்றுமையின் உருபு என்ன?
- இரண்டாம் வேற்றுமையின் உருபு ஐ ஆகும்.

7) இரண்டாம் வேற்றுமையின் பொருள் யாது?
- இரண்டாம் வேற்றுமையின் பொருள் செயப்படுப்பொருள் ஆகும்.

8) வேற்றுமை தமிழ் மொழிக்கு அவசியமானதா?
- ஆம், வேற்றுமை இல்லாமல் நாம் சொற்களை இணைத்து வசனங்களை அமைக்க முடியாது.

9) எட்டாம் வேற்றுமையின் பொருள் என்ன?
- எட்டாம் வேற்றுமையின் பொருள் விழிப்போருள் ஆகும்.

10) இடப்பொருளில் வருவது எத்தனையாம் வேற்றுமை?
- இடப்பொருளில் வருவது ஏழாம் வேற்றுமை ஆகும்.

**தொகுத்தவர்**
**செல்வி ஆரபி நாகராஜா**
**எசன் தமிழ்க் கலாச்சார பாடசாலை.**

# .நகுலின் தகவல்கள் - 11

## சுப்பிரமணிய பாரதியார்.

1) பாரதியார் சிறந்த தமிழ் புலவர்.
2) புரட்சிக் கவிஞன், விடுதலைக் கவிஞன், முண்டாசுக் கவிஞன் என அழைக்கப்பட்டவர்.
3) இவர் இந்தியாவின் தமிழ்நாட்டில் உள்ள எட்டய புரத்தில் பிறந்தார்.
4) இவர் பற்பல கவிதைகள் எழுதி உள்ளார்.
5) இந்திய நாட்டின் விடுதலைக்காக பெரும் புரட்சிக் கவிதைகளை தந்திருக்கின்றார்.
6) சிறுவர்களுக்காக ஓடி விளையாடு பாப்பா, அச்சமில்லை போன்ற பாடல்களையும் தந்திருக்கின்றார்.
7) சின்னச்சாமி ஐயருக்கும் இலக்குமி அம்பாளுக்கும் 11.12.1882 இல் பிறந்தவர்.
8) இயற்கை மீது ஆசையும், குருவிகள் மீது இரக்கம் உடையவர்.

**செல்வன் நகுல் துரையரங்கன்**
**எசன் – தமிழ்க் கலாச்சாரா பாடசாலை.**

# அறிங்து கொள்வோம்

01- ஆறுகள் இல்லாத நாடு - வத்திகான் சிற்றி

02- தலைநகர் இல்லாத நாடு - நவுறுதீவு

03- இரவில்லாத நாடு - நோர்வே

04- கோவில்கள் இல்லாத நாடு - சவுதிஅரேபியா

05- நுளம்பு, பாம்பு இல்லாத நாடு - ஐஸ்லாந்து

06- தேசியகீதம் இல்லாத நாடு - சைபிரஸ்

07- பிரதமமந்திரி இல்லாத நாடு - அமெரிக்கா

08- தொடரூந்து இல்லாத நாடு - ஆப்கானிஸ்தான்

# மண் சஞ்சிகையின் 35 வது ஆண்டு நிறைவுப் போட்டி...

**18 - 19 வயதுப்பிரிவு மாணவர்களிடையே நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் 1 வது பரிசு பெற்றது...**



## திருக்குறளின் சிறப்பு...

தமிழில் உள்ள அற நூல்களிலே சிறந்தது திருக்குறளாகும். இது திருவள்ளுவரால் எழுதப்பட்டது. திருக்குறளில் ஆயிரத்து முந்நூற்றி முப்பது குறள்கள் உள்ளன. இது நூற்றி முப்பத்தி மூன்று அதிகாரங்களைக் கொண்டுள்ளன. ஒவ்வொரு அதிகாரத்திலும் பத்துக் குறட்பாக்கள் உள்ளன. திருக்குறள் ஏழு சீர்களால் ஈரடிகளில் உலகத் தத்துவங்களைக் கூறுவதால் இது ஈரடிநூல் என்று அழைக்கப்படுகின்றது.

திருக்குறள் மனித வாழ்வின் முக்கிய அங்கங்களாகிய அறம், பொருள், இன்பம் பற்றிக் கூறுவதால் இதனை முப்பால் என்றும் அழைப்பர். திருக்குறள் திருவள்ளுவரால் எழுதப்பட்டிருந்தாலும் இதில் தமிழ் என்றோ, தமிழர் என்றோ ஒரு சொல்லும் பயன்படுத்தப்படவில்லை. திருக்குறள் சமயங்களைக் கடந்த அறநூலாகும். இது எக்காலத்துக்கும் நல்வழி காட்டக்கூடியதே. இக்காரணங்களால் இந்நூல் உலகப்பொதுமறை என்ற பெயரையும் பெற்றுள்ளது. மேலும் இது திருவள்ளுவம், தமிழ்மறை, பொய்யாமொழி போன்ற பெயர்களாலும் அழைக்கப்படுகின்றது.

"திறமான புலமை எனின் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்" என்னும் பாரதியாரின் கூற்றிற்கேற்ப வெளிநாட்டவராலும் புகழ்ந்து போற்றும் பெருமை பெற்றது திருக்குறள்.

தமிழர்களின் விருந்தோம்பல்ப் பண்பு உலகம் அறிந்த ஒன்று. இதனைத் திருவள்ளுவர் "இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு" எனும் குறள் மூலம் விளக்குகிறார். யேர்மனிய அறிஞரான அல்பேர்ட் சுவைட்சர் பல்வேறு சமய, அறநெறி நூல்களையும் ஒப்பிட்டுத் திருக்குறளைப் பாராட்டியுள்ளமை திருக்குறளின் சிறப்பை எடுத்துக்காட்டுகின்றது.

குறள் கூறும் கருத்துக்கள் மாந்தர்குலம் முழுமைக்கும் பொருந்துபவை. இக்காரணங்களால் உலகளாவிய மாந்தர் குலத்தின் பொதுச் சொத்தாகத் திகழும் இந்நூலைக் கற்று நாம் பயன்பெறுவோம்!...

**செல்வி மீனுஜா ரவீந்திரன்**
**முன்ஸ்ரர் - யேர்மனி**

**16 - 17 வயதுப்பிரிவு மாணவர்களிடையே நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் 2 வது பரிசு பெற்ற கட்டுரை...**

## எனது தாய்நாடு இலங்கை

இலங்கை நான்கு பக்கங்களாலும் கடலால் சூழப்பட்ட ஒரு தீவாகும். இதன் அருகிலுள்ள நாடு இந்தியா. இது ஆசியாக்கண்டத்தைச் சேர்ந்த நாடாகும். இலங்கைக்குச் சிலோன், சைலோன், இரத்தினதூபம், சிறீலங்கா என்னும் பெயர்களும் உண்டு. இயற்கை வளங்கள் நிறைந்த நாடு .இதனால் இங்கு அதிகமான உல்லாசப் பயணிகள் சென்று வருகிறார்கள்.

இலங்கையின் சனத்தொகை கிட்டத்தட்ட இருபத்திரண்டு மில்லியன் பேராகும். அங்கே நான்கு இன மக்கள் வாழ்கிறார்கள். சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள் மற்றும் பறங்கியர் ஆகியோராவர். பௌத்தம், இந்து, கிறீஸ்தவம், இஸ்லாம் சமயங்களை வழிபடுகிறார்கள். மிக அதிகமான சனத்தொகை கொண்டவர்களாக 75வீதம்பேர் சிங்களவராவர். சிங்களம், தமிழ், ஆங்கிலம் அரச மொழிகளாக இருந்து வருகின்றன.

இலங்கையின் தலைநகரம் கொழும்பு ஆகும். 9 நிர்வாக மாகாணங்களும் 25 மாவட்டங்களும் உள்ளன. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் பேசுவோர் கூடுதலாக வாழ்கிறார்கள். தேயிலை, இறப்பர், வாசனைத் திரவியங்கள், இரத்தினக் கற்கள் போன்றவை பிரதான ஏற்றுமதிப் பொருட்களாக விளங்குகின்றன. வெளிநாட்டு உல்லாசப் பயணிகளின் வருகையால் நாட்டுக்குப் பெரும் வருவாய் கிடைத்துவருகின்றது.

இலங்கையின் தேசியக்கொடியில் சிவப்பு, பச்சை, மஞ்சள், போன்ற நிறங்கள் உள்ளன. இலங்கையின் தேசிய மிருகமாக சிங்கத்தின் படமும் பொறிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் தேசிய மலர் நீலோற்பலமும் தேசிய மரமாக நாகமரமும் உள்ளன.

இலங்கை ஒரு குடியரசு நாடாகும் ரூபா, சதம் நாணயப் புழக்கத்திலுள்ளன. நாட்டின் அதிகாரம் கூடிய தலைவராக ஜனாதிபதி ஆட்சியும் பாராளுமன்ற முறையும் உள்ளன. தற்போதய ஜனாதிபதியாக அனுரகுமார திஸநாயக்கா விளங்குகின்றார்.

எனது தாய்நாடு மலைவளம், நிலவளம், கடல்வளம் நிறைந்தே காணப்படுகின்றன. விவசாயம், மீன்பிடி, கைத்தொழில், தோட்டத்தொழில் போன்ற பல்வேறு தொழில் முயற்சிகள் நடைபெறுகின்றன. சகல துறைகளிலும் பொன்விளையும் நல்நாடாகவே நமது தாய்நாடு சிறந்து விளங்குகின்றது!...

**செல்வி அனுஸ்கா ராகவன் - எசன் - யேர்மனி**

# சுடுக்கோ புதிர்ப்போட்டி இலக்கம் - 50

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 2 | | | | | 4 |
| 5 | 6 | | | | | | | |
| | | 4 | | 8 | 7 | 1 | | |
| | | | | 5 | | | | |
| | | | | 2 | 4 | 6 | | 9 |
| 7 | | 6 | | | | | | 2 |
| 3 | 8 | | | | | | | |
| 9 | 2 | | | | | | | 8 |
| | | | | | 3 | | 1 | |

# சிறுவர் குறுக்கெழுத்துப் போடி 143
## ( ஆடி - ஆவணி 2025 )

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

இவ
01-03 தமிழர்கள் உயிர் மூச்சாகக் கருதுவது.
06-08 நம்நாட்டில் இனிப்பான பழம்தரும் மரம்.
வ-இ
04-03 சிலர் இது எழுதுவதில் வல்லவர்கள்.
16-13 தானியவகை உணவுப்பொருள்.
கீ-மே
10-06 வீட்டுப்பிராணி (குழம்பியுள்ளது)
16-08 நேரப்பொழுது ஒன்று.
மே-கீ
01-13 இனிப்பான தடி.
07-11 மீன் பிடிக்கப் பயன்படுவது.

முயற்சித்துப் பாருங்கள். விடை தெரியாவிடின் பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்.

# இயற்கை.....

- **அனுஸ்கா ராகவன்** -

இயற்கையில் அடங்கும்
பஞ்சபூதங்கள்
அவற்றின் இயல்பு
அதிசயமே
இவற்றின் பெறுமதி
உணர்ந்து
அழிவிலிருந்து இதனை
பாதுகாப்போம்.
மூவிடுதலையின் அடிமைமூ
விண்ணை நோக்கி பறந்த பறவை,
அந்த நிமிடத்தில் தான்
தனக்கு வானம் கட்டுப்பாடு
என்று உணர்கிறது.
ஓர் கடலின் அகலத்தில்
இளைப்பாறும் கப்பல்,
இடையின்றி செல்லும் பாதையில்
திசையின் தேவையை புரிகிறது.
நான் ஒரு சுதந்திர மனிதன்
என்று எண்ணும் போது,
என்னுடைய தேர்வுகளும்
என்னை கட்டி வைக்கின்றன.
விடுதலை
ஒரு தேடல் இல்லை.
அது ஒரு சுவரின் பெயர்,
நாம் உருவாக்கிய சிறைக்குள்
அழகாக உறங்கும்.
ஒரு சூரியன் கூட!...

# *Sklave der Freiheit*

- Nithusha Aseervatham -
(Essen Tamil School)

Der Vogel, der zum Himmel ßiegt,
erkennt im selben Moment,
dass der Himmel selbst eine Grenze ist.
Ein Schiff, das ruht im offenen Meer,
versteht erst auf freier Fahrt
die Notwendigkeit des Kurses.
Wenn ich denke: „Ich bin ein freier Mensch“,
sind es gerade meine Entscheidungen,
die mich fesseln.
Freiheit – ist keine Suche.
Es ist der Name einer Mauer,
in einem Gefängnis, das wir selbst gebaut haben.
Sogar die Sonne,
die in Schönheit schläft,
ist ein Sklave ihres eigenen Lichts. -

## யார் ?....காரணம்...

- நிலம் வளமிழப்பதற்கு யார் காரணம் - மனிதன்
- நீர் நாசமாவதற்கு யார் காரணம் - மனிதன்
- காற்று மாசாவதற்கு யார் காரணம் - மனிதன்
- காடு அழிவதற்கு யார் காரணம் - மனிதன்
- உயிரினங்களின் அழிவிற்கு யார் காரணம் - மனிதன்
- புவி வெப்பமாவதற்கு யார் காரணம் - மனிதன்
- காலநிலை மாற்றத்திற்கு யார் காரணம் - மனிதன்
- பூகம்பம் வருவதற்கு யார் காரணம் - மனிதன்
- பனிக்கட்டி உருகுவதற்கு யார் காரணம் - மனிதன்
- வறட்சி ஏற்படுவதற்கு யார் காரணம் - மனிதன்
- மொத்தத்தில் பூமி சீரழிவிற்கு யார் காரணம் - மனிதன்

## பேசு என்னும் வார்த்தைக்கு தொல்காப்பியர் கொடுத்துள்ள சொற்கள்...

- பேசு, பகர் - ஆதாரத்துடன் பேசு
- செப்பு - பதில் தெரிந்து பேசு
- கூறு - வரிசைப்படி பேசு
- உரை - அர்த்தத்துடன் பேசு
- நவில் - நயமாகப் பேசு
- இயம்பு - இசைபடப் பேசு
- பறை - வெளிப்படையாகப் பேசு
- சாற்று - அங்கீகரித்துப் பேசு

## வாழ்க்கையில் பயனற்ற சில...

- கடலில் பெய்யும் மழை பயனற்றது
- பகலில் எரியும் தீபம் பயனற்றது
- வசதியுள்ளவனுக்குக் கொடுக்கும் பரிசு பயனற்றது
- நோயுள்ளவனுக்குக்குக் கொடுக்கும் அறுசுவை உணவு பயனற்றது
- முட்டாள்களுக்குக் கூறும் அறிவுரை பயனற்றது.
- கணக்கில்லாமல் செய்யும் உதவி பயனற்றது
- அன்பில்லாமல் கொட்டும் கண்ணீர் பயனற்றது
- விளையாத நிலத்துக்குப் பாய்ச்சும் நீர் பயனற்றது
- கெட்டவர்களின் சகவாசம் பயனற்றது
- அளவுக்கு அதிகமாகப் பேசுவது பயனற்றது

## தமிழில் மனைவி என்பதற்கு 62 வகையான பெயர்கள்...

01- துணைவி
02- கடகி
03- கண்ணாடி
04- கற்பாள்
05- காந்தை
06- வீட்டுக்காரி
07- கிருகம்
08- கிழத்தி
09- குடும்பினி
10- பெருமாட்டி
11- பாரியாள்
12- பொருளாள்
13- இல்லத்தரசி
14- மனையுறுமகள்
15- வதுகை
16- வாழ்க்கை
17- வேட்டாள்
18- விருந்தனை
19- உல்லி
20- சானி
21- சீமாட்டி
22- சூரியை
23- சையோகை
24- தம்பிராட்டி
25- தம்மேய்
26- தலைமகள்
27- தாட்டி
28- தாரம்
29- மனைவி
30- நாச்சி
31- பாவை

**32 – 62 அடுத்த இதழில் தொடரும்**

## ஒலி வேறுபாட்டுச் சொற்கள்

அலை - கடல்அலை, அலைந்துதிரிதல்
அளை - தயிர், பிசை, பற்று
அழை - கூப்பிடுதல்

அலகு - பறவையிக் மூக்கு
அளகு - பெண்பறவை,காட்டுக்கோழி
அழகு - வனப்பு, அலங்காரம்

இலை - முற்றியதளிர்
இளை - மெலிந்துபோதல்
இழை - செய், நூலிழை

உலை - நீர் உலை, வருந்து
உளை - பிடரிமயிர், சேறு
உழை - உழைத்தல், மான், பக்கம்

ஒலி - ஓசை
ஒளி - வெளிச்சம், பதுங்குதல்
ஒழி - அழித்தல், நீக்கல்

கலை - வித்தை, கலைந்துபோதல்
களை - வேண்டாதபயிர், புல்
கழை - மூங்கில், மிகுதி

கிலி - அச்சம், பயம்
கிளி - ஒரு பறவை
கிழி - துண்டாகக்கிழித்தல்

## அர்த்தமுள்ள தமிழ்ப் பழமொழிகள் சில....

1. தங்கச் செருப்பானாலும் தலைக்கு ஏறாது.
2. தீயில் இட்ட நெய் திரும்ப வராது.
3. நாடு கடந்தாலும் நாய்க்குணம் போகாது.
4. தேரோடு போச்சுது திருநாள். தாயோடு போச்சுது பிறந்தகம்.
5. தெய்வம் காட்டுமே தவிர ஊட்டாது.
6. செத்த பிணத்திற்கு அருகே இனி சாகும் பிணம் அழுகிறது.
7. கறந்தப் பால் காம்பில் ஏறாது.
8. கடலைத் தாண்ட ஆசையுண்டு, கால்வாயை தாண்ட கால் இல்லை.
9. கரும்பு கசப்பது வாய்க்குற்றம்.
10. கடன் வாங்கிக் கடன் கொடுத்தவனும் கெட்டான். மரம் ஏறி கை விட்டவனும் கெட்டான்.
11. காட்டிலே செத்தாலும் வீட்டிலே தான் தீட்டு.
12. கூப்பாட்டால் சாப்பாடாகுமா?
13. எரிகிற வீட்டை அவிக்க கிணறு வெட்ட நாள் பார்த்தது போல, கும்பிட்ட கோயில் தலை மேல் இடிந்து விழுந்தது போல, சில்லரைக் கடன் சீரழிக்கும்.
14. சொப்பனங்கண்ட அரிசி சோற்றுக்கு ஆகுமா?
15. உறவு போகாமல் கெட்டது, கடன் கேளாமல் கெட்டது. (எத்தனை பெரிய உண்மை. போய் வந்து கொண்டிருந்தால் தான் உறவு நிலைக்கும். கொடுத்த கடனைக் கேட்டுக் கொண்டே இருந்தால் தான் திரும்பக் கிடைக்கும்).

.............................................................................................................................

## வாழ்க்கைத் தத்துவங்கள் சில...

- அழிவைத்தருவது - ஆணவம்
- ஆபத்தைத் தருவது - கோபம்
- இருக்கவேண்டியது - பணிவு
- இருக்கக்கூடாதது - பொறாமை
- உயர்வுக்கு வழி - உழைப்பு
- கண்கண்ட தெய்வம் - பெற்றோர்
- செய்ய வேண்டியது - உதவி
- செய்யக்கூடாதது - துரோகம்
- நம்பக்கூடாதது - வதந்தி
- நழுவவிடக்கூடாதது - வாய்ப்பு
- நம்முடன் வருவது - புண்ணியம்
- பிரியக்கூடாதது - நட்பு
- மறக்கக்கூடாதது - நன்றி
- மிக மிக நல்லநாள் - இன்று
- மிகப்பெரிய தேவை - அன்பு
- மிகக் கொடிய நோய் - பேராசை
- மிகச் சுலபமானது - குற்றம் காணல்
- மிகப்பெரிய வெகுமதி - மன்னிப்பு
- விலக்க வேண்டியது - வாதம்
- வந்தால் போகாதது - பழி
- போனால் வராதது - மானம்



**இப்படத்திலுள்ள புள்ளிகளைத்தொடர்புபடுத்தி வர்ணம்தீட்டிப்பாருங்கள் ஒரு படம் உருவாகும்..**

# தண்ணீர்?...தண்ணீர்?....

## உலகிலுள்ள நாடுகளில் தண்ணீர் விலைகூடிய நாடுகள்

1 லீற்றர் விலை - இந்திய ரூபாவில்

| | | |
|---|---|---|
| 01- | சிங்கப்பூர் | - 140 |
| 02- | கோஸ்டரிக்கா | - 110 |
| 03- | பிலிப்பைன்ஸ் | - 108 |
| 04- | உருகுவே | - 98 |
| 05- | அயர்லாந்து | - 87 |
| 06- | பின்லாந்து | - 80 |
| 07- | அவுஸ்திரேலியா | - 78 |
| 08- | பொஸ்வானா | - 77 |
| 09- | கொங்கொங் | - 71 |
| 10- | சுவீஸ்லாந்து | - 63 |



# குறளும் பொருளும்...

**படைமாட்சி..**

761 - உறுப்பமைந் தூறஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையு ளெல்லாந் தலை.

762 - உலைவிடத் தூறஞ்சா வன்கண் டொலைவிடத்துத்
தொல்படைக் கல்லா லரிது.

763 - ஒலித்தக்கா லென்னா முவரி யெலிப்பகை
நாக முயிர்ப்பக் கெடும்.

764 - அழிவின் றறைபோகா தாகி வழிவந்த
வன்க ணதுவே படை.

765 - கூற்றுடன்று மேல்வரினுங் கூடி யெதிர்நிற்கு
மாற்ற லதுவே படை.

766 - மறமான மாண்ட வழிச்செலவு தேற்ற
மெனநான்கே யேமம் படைக்கு.

767 - தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த
போர்தாங்குத் தன்மை யறிந்து.

768 - அடற்றகையு மாற்றலு மில்லெனினுத் தானை
படைத்தகையாற் பாடு பெறும்.

769 - சிறுமையுஞ் செல்லாத் துனியும் வறுமையு
மில்லாயின் வெல்லும் படை.

770 - நிலைமக்கள் கால வுடைத்தெனினுந் தானை
தலைமக்க ளில்வழி யில்.

# குறளும் பொருளும்...

## படையினது நன்மை...

761- நால்வகைப் படையுடன் போருக்கு அஞ்சாமல் பகையை வெல்லும் படையே அரசனுக்குச் சிறந்த செல்வமாகும்.

762- போரில் சீர்குலைவு வந்து வலிமை குறைந்தாலும் அவ்விடையூறுக்கு அஞ்சாமல் நின்று தாங்கும் வலிமை மூலப்படைக்கன்றி முடியாது.

763- எலிக்கூட்டம் கடல்போலக் கூடிஒலித்தால் நாகம் மூச்சு விட்டாலே அவை அழியும். அது போலப் பலமற்றவர் பலர் திரண்டு ஒரு வீரனை எதிர்த்தால் அப்பலரும் கெடுவர்.

764- போரில் அழியாமல் பகைவரின் வஞ்சனைக்கு அகப்படாமல் தொன்றுதொட்டு வந்த அஞ்சாமை உடையதே படையாகும்.

765- எமனே சினந்து எதிர்த்துவந்தாலும் ஒன்றுதிரண்டு எதிர்த்து நிற்கும் ஆற்றலுடையதே படை.

766- வீரம், மானம், சிறந்தநடை, தலைவனின் நம்பிக்கை ஆகிய நான்கு பண்புகளுமே படைக்குச் சிறப்பாகும்.

767- மாற்றார் வகுத்து வரும் போர்ப்படையின் ஆற்றலைத் தாங்கும் நிலை அறிந்து செல்வதே கொடிப்படைக்கு வலிமையாகும்.

768- போர் வீரமும் எதிர்ப்பைத் தாங்கும் ஆற்றலும் இல்லை என்றால் படையின் அணிவகுப்பினால் பெருமை உண்டாகும்.

769- தன் செல்வ அழகு சிறிதாகத் தேய்தலும் தலைவரிடம்நீங்காத வெறுப்பும் வறுமையும் இல்லாது இருக்கும் படையே வெல்லும் படையாகும்.

770- நிலையான போர் வீரர்கள் பலர் இருந்தாலும் படைத்தலைவன் இல்லாத படை நிலைத்து நிற்காது.

# காசிஆனந்தனின் சிந்தனைகள்...



## பார்வை...

தரிசு நிலம்..குப்பைகளும் கூழாங்கற்களும் குவிந்து கிடந்தன. ”உதவாத குப்பைகள் கூழாங்கற்கள்” என்று உலாத்தலுக்கு வந்த நாய் கண்களை மூடி உரக்கக் குரைத்தது. படுத்துக் கிடந்த மாட்டுக்கு இது பிடிக்கவில்லை. ”குப்பைதானே பெறுமதியான எருவாகிறது. கூழாங் கல்லைத்தானே தெருவாகப் போடுகிறார்கள்” என்றது மாடு. ”நன்றாகப் பார்...எதிலும் ஏதோ இருக்கிறது” மாடு தொடர்ந்தது...

**” குப்பையை எருவாய்ப்பார் கூழாங்கல்லைத் தெருவாய்ப் பார்”**

## மதிப்பு...

”வாழ்ந்தால் குயிலைப் போல வாழவேண்டும்” என்றது பட்டாம் பூச்சி. இன்னொரு பட்டாம் பூச்சி கேட்டது.. ஏன்?.. ”அதே பார் மா மரத்தில் பாடுகிறது குயில். மா மரத்துக்காகத்தான் அது பாடுகிறது. பின்பு மாங்கனியைச் சாப்பிடுகிறது... பறக்கிறது.. ”புரியவில்லையே” ”யாருக்கும் கடமைப்படக்கூடாது” கொடுத்துப் பெறு தங்கி வாழாதே!..”ஓ இப்போது புரிறது” என்றது இரண்டாவது பட்டாம் பூச்சி. தனக்குள்ளேயே அது சொல்லிக் கொண்டது...

**” மரத்துக்கு ஒரு பாட்டு குயிலுக்கு ஒரு பழம் ”**

# குறுக்கெழுத்துப்போட்டி-206
## (ஆடி - ஆவணி 2025)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

இ-வ
01-06 வல்லரசு நாடுகள் இதை வைத்துக்கொண்டு உலகைப் பயமுறுத்துகின்றன
08-10 பனையில் பெறப்படும் இனிப்பான பொருள் ஒன்று.
33-35 ஆடுகள் கட்டி வைக்கும் இடம்.
43-45 வீட்டுப் பாவனைப் பொருள் (குளம்பியுள்ளது)
46-49 மன்னன் ஒத்தசொல்.
வ-இ
13-10 இதன் கையில் பூ மாலைகொடுத்தால்..
19-16 மேடை ஒத்த சொல்.
28-26 ஒற்றுமைக்குப் பெயர்போன பறவை.
42-39 கொடைக்குப் பெயர் போனவன்.
கீ.மே
25-04 ஒருவகை நோய்.
27-13 வாசனைப் பொருள் இது.
42-14 மணிக்கூடு ஒத்தசொல்.
44-23 யாழ்குடாநாட்டின் பெரிய மனித புதைகுளி உள்ள இடம்.
46-25 பழங்களில் ஒன்று.
மே-கீ
01-43 இலங்கையில் சரித்திரப் பிரசித்தி பெற்ற இடம்.
07-28 உணவு என்று பொருள் (குளம்பியுள்ளது)
10-38 திருமணமான பெண்களின் அடையாளச் சின்னம்.

**(விடைகளை கண்டு பிடியுங்கள். முடியாவிடின். பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்)**

# இன்னும் விடியவில்லை இவள் வானம்!

- **கீதா பரமானந்தன்** -

தன்னலமே அறியாத தரணியின் சுகந்தமவள்
தளர்வின்றே சொரிவதெல்லாம் தளராத பாசத்தை
இன்னலைப் போக்குகின்ற இனிமைத் தாய்மடியாய்
இல்லத்தின் உள்ளத்தின் இன்பத் தாலாட்டு
வன்முறைக் கொடுமையிடை வாடுகின்ற மலரினமாய்
வழிதேடித் தொடர்கின்றாள் வகையற்ற உலகிடையே.·.
பொன்னாகும் பொழுதெல்லாம் பூவனமாய்ச் சொரிந்தாலும்
பூமியிலே தேய்பிறையாய் புரட்டிடுதே துன்பம்!

காலங்கள் கடந்தாலும் கார்முகிலாய்ப் பொழிந்தாலும்
பாரங்கள் குறையவில்லை பாரினிலே இவளுக்கு.·.
சீலத்தின் பெயர்சூட்டி சிந்தனைக்குக் கடிவாளம்
சிறகுகளை நறுக்கிவிட்டு சீராட்டும் அலங்காரம்!
பாலரும் மிஞ்சவில்லைப் பாவிகள் அரசினிலே
பச்சோந்திக் கூட்டமுமே பலகதைகள் பேசிநிற்கும்!

ஞாலத்தின் பாதையெங்கும் நகர்தலும் சுமையாக்கி
நறுமலர்ச் சுகந்தமும் நசுக்கியே சருகாக்கும்!
எட்டிவைக்கும் அடிகளெல்லாம் இழுபறியாய் எப்போதும்
தொட்டுவிடும் முனைப்புகளைத் தட்டிவிடும் அதிகாரம்!

கட்டிவைத்த கோட்டைகளும் கள்ளிகளாய் நிறைந்திருக்க
முட்டுவதும் மோதுவதும் முப்போதும் வெறுமைக்குள்!
பட்டங்கள் ஆண்டிருந்தும் சட்டங்கள் படித்திருந்தும்
பண்பாட்டின் பேர்சொல்லி கழுத்தறுக்கும் பூலோகம்!
வெட்டியவ ளெழுந்திட்டால் வெகுமதியாய் அவமானம்
சிட்டவளின் சிந்தையெலாம் வேதனையே உருவாக்கம்!

விஞ்ஞானம் வளர்ந்தாலும் மெஞ்ஞானம் உயர்ந்தாலும்
சிந்தையினைத் தீட்டாது மந்தைகளாய் உலவுகின்ற
அஞ்ஞானம் கொண்டோரின் ஆணவக் கறைகளினால்
பிஞ்சினிலும் மூப்பினிலும் பெறுவதெல்லாம் சாட்டைகளே!
தண்மதியாய் அணைக்கின்ற தளர்விலா அன்புருவம்

எண்ணற்ற தழைகளுடன் இழுபறியாம் வேதனையில்!
கண்ணுக்கு ஒளிதேடிக் கருந்திரைக்குள் எந்நாளும்
விண்ணுக்குச் சென்றாலும் விரிகதிரா யானாலும்
மண்ணிலே மங்கையவள் மனச்சுமையின் செக்குமாடாய்
இன்னும் விடியவில்லை இவள் வானம்!...

**மண் சஞ்சிகையின் 35 வது ஆண்டு நிறைவு விழாவை யொட்டி வாசகர் களிடையே நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியில் 3 வது பரிசு பெற்ற கவிதை...**

**வாழ்த்துகள்!...**

**மண் சஞ்சிகையின் 35 வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி வாசகர்களிடையே நடாத்தப்பட்ட சிறுதைப் போட்டியில் 3 வது பரிசு பெற்றது. வாழ்த்துகள்!...**

# மிரளாதவள்!..

**(திருமதி கெங்கா ஸ்ரான்லி)**

கிணற்றடியில் பானை சட்டி கழுவிக் கொண்டிருந்த பார்வதி , படலையடியில் நின்று கூப்பிடும் அன்னத்தின் குரல்கேட்டு அவசரமாக்க் கையைச் சீலைத்தலைப்பில் துடைத்துக் கொண்டு என்னக்கா என்றபடி வந்தாள். அன்னம் கையில் பையுடன்நின்றாள். என்ன பார்வதி சந்தைக்கு வரவ்வில்லையா? 10 மணி ஆகிறது சாமான் விற்றுமுடிந்திடும், வா கெதியாய் போட்டு வருவம், என்று சொல்ல பார்வதியும் இதோ என்று உடைமாற்றிக் கொண்டு சந்தைக்குபோனார்கள், போகும் வழியில்வேறு சிலபெண்களும் சேர வேடிக்கைப் பேச்சு, பகிடியுடன் சந்தையை அண்மித்தனர். ஒரே கூட்டம் காய்கறி விற்பனையாளரின் சத்தம். சந்தை என்றால் சத்தம்தானே கேட்கவா வேண்டும்.

சரியென்று பேரம்பேசி சாமான்களை வாங்கிக் கொண்டு வீட்டிற்கு வந்தனர். பார்வதி வீட்டிற்கு வந்ததும் உடையை மாற்றிவிட்டு பரபரக்கசமையலைச் செய்தாள் .பிள்ளைகள்பாடசாலையால் வந்துவிடுவார்கள் என்ற வேகம் அதனால் பரபரப்பு.பார்வதிக்கு இரண்டு பெண்பிள்ளைகள் கலா, மாலா கணவன் முரளி சவுதியில் வேலை செய்கிறான். அளவான சிறியவீடு அக்கம்பக்கம் அயலவர்கள் நல்லவர்கள். வறுமைக் கோடும் அல்ல விஜபியும் அல்ல சாதாரண நடுத்தர வாழ்க்கை.

எல்லோரும் மகிழ்ச்சியாக வாழும் காலம். நீ நான் என்ற போட்டியில்லைஈகோ பிரச்சனை இல்லை அழகிய சிறு கிராம்ம் ஆனந்தமான வாழ்க்கை. இப்படி இருக்கும்போது மூத்தவள் கலா பருவமடைந்து விட்டாள், அதையொரு சின்ன சடங்காக செய்வதற்கு ஆயத்தம் செய்ய முரளியும் வந்துவிட்டான்

எல்லோருமாக சேர்ந்து சடங்கு விமரிசையாக ஆடம்பர மின்றி நடந்தது. முரளியும் திரும்ப சவுதிக்குப் புறப்பட்டான். பிள்ளைகளுக்குச் சரியான கவலை, பார்வதிக்கும் தான். முரளி சொன்னான் பொறுத்த நீங்கள் இன்னும் இரண்டு வருடம் பொறுங்கள், எனது கொன்றாக்ற் முடிய எனது வண்ட்மணியை எடுத்துக்கொண்டு வந்து இங்கிருந்து தொழில் செய்யலாம், என்று சொல்லிவிட்டுப்போனானான்.

காலச்சக்கரம் சுழல்கிறது, முரளியும் இருவருடம் முடித்து கையில் ஒருதொகையுடன் வீட்டிற்கு வருகின்றான். பிள்ளைகள் மனைவிக்கு பெரிய மகிழ்ச்சி. முரளி கொண்டுவந்த பணத்தைநான்காகப் பிரித்து பிள்ளைகள் மனைவி பெயரில் வங்கியில் சேமிப்பில் போடுகிறான்.மனைவி கேட்டாள் எனக்கெதற்கு பிள்ளைகள் பெயரில் போட்டால் காணும்தானே, அதற்கு முரளி உன்கையிலும் காசு இருக்க

வேண்டும் உனக்கு இப்ப புரியாது பிறகு புரியும் என்றான் பார்வதியும் சரியென்று விட்டாள்.மிகுதி நாலா வது பங்கில் ஒருசிறிய கடையைப் போட்டு அதை நடத்தி வந்தான். வெளியிலிருந்து சாமான்களை எடுத்து விற்றான். வியாபாரமும் நன்றாகவே நடந்தது.

பிள்ளைகள் படிப்பில் படுசுட்டிகளாக இருந்தனர். முரளி ஒருஓட்டோ வாங்கி அதை ஓடுவதற்கு பார்வதிக்கும் பழக்கி விட்டான். பார்வதியும் பிள்ளைகளைப் பாடசாலைக்கும் அயலவர் தேவைக்கும் ஓடித் திரிவாள். இப்படி மகிழ்ச்சியாக வாழ்க்கை ஓடிக்கொண்டிருந்தது. ஒருநாள் திடீரென முரளிக்கு நெஞ்சுவலி ஏற்பட்டது பார்வதி உடனே வைத்தியசாலைக்குக் கூட்டிச் சென்றாள். மருத்துவர் சோதித்து விட்டு light heart attack என்று சொல்லி மருந்து கொடுத்து அங்கே மறித்து விட்டார்.

முரளியும் எனக்கு இப்ப கொஞ்சம் சுகமாக இருக்கு பிள்ளைகள் தனிய நீபோய்விட்டு நாளைக்கு வா என்று சொல்ல பார்வதி அரைமனத்துடன் அவனை விட்டு வீட்டிற்குப் போ-னாள். அடுத்த நாள் அவனை வீட்டிற்கு கூட்டிப் போகலாம் என்று சொல்ல வீட்டிற்கு கூட்டி வந்து அவனை ஒருவேலையும் செய்ய விடாமல் கவனமாகப் பார்த்தாள். கடையையும்பார்வதியே பார்த்தாள். இந்தநிலையில் கலா டாக்டருக்குப் படிக்க பல்கலைக்கழகத்திற்கு எடுபட்டிருந்தாள். மகள் டாக்டர் ஆகப் போகிறாள் என்று முரளிக்கும் பார்வதிக்கும் சரியான சந்தோசம்.

திடீரென ஒருநாள் முரளி ஹாட்அட்டாக் வந்து இறந்துவிட்டான். பார்வதி தவித்துவிட்டள்.இரண்டு பெண்பிள்ளைகள் என்ன செய்வது, அயலவர்கள் தான் ஆறுதல் சொல்லி அவளைத் தேற்றினார்கள். என்னதான் ஆறுதல் சொன்னாலும் மனம் தாங்கவில்லை . தற்கொலை செய்யலாமா என ஒருகணம் நினைத்தாள் மறுகணம் பிள்ளைகள் அனாதையாகி விடுவார்களே என விட்டு விடுவாள். இப்படியே மன அழுத்தத்தால் கொஞ்ச நாள் சென்றது.

பின் மனதை ஒருவாறு தேற்றிக் கொண்டு தனது வேலைகளைச் செய்தாள் , இப்பொழுதுஅவள் மனதில் ஒருதுணிவு வந்தது. கடையி ல் ஒருபையனை வைத்து கடையை நடத்தினாள். கலாமெடிஷி ன் செய்கிறாள். மாலா லோயருக்குப் படிக்கிறாள். இருவர் படிப்புச் செலவும் பார்வதிதான் பார்க்கிறாள்.கடையும் சுமாராகத்தான் ஓடிக்கொண்டிருந்தது. அவள் வெளியிலிருந்து திரும்ப சாமான்களை எடுத்து விற்பனை செய்தாள்.

அவளுக்கும் சிலரால் பல தொல்லைகள் வந்தது . அவளும் பெண்தானே அதைத்தனது புத்தி சாதுரியத்தால் காத்துக் கொண்டாள். எதிலும் தற்காப்புடனே இருந்தாள். தனக்குதவிக்கு ஒரு பாட்டியம்மாவை. வீட்டில் வைத்துக் கொண்டாள். இரண்டு நாய்கள் வளர்த்தாள். புத்திசாலியிவள்.இப்படி இருக்கும்போது கடையில் வேலைசெய்த பையன் பணம் திருடிவிட்டான். இதைக் கவனித்த பார்வதி அவனிடம் உனக்குப் பணம் தேவையென்றால் என்னிடம் கேட்டுருக்கலாமே! ஏன் இப்படிச் செய்தாய் என்று கண்டித்து விட்டு இனிமேல் இப்படி செய்யக் கூடாது எனக்கூறினாள். பின் நாலுபெரிய மனிதரைக் கூப்பிட்டு அவரகள் முன்னால் அந்தப் பையனுக்கு சிறுதொகைப் பணம் கொடுத்து பத்திரத்தில் கையெழுத்து வாங்கினாள். அப்பொழுது அவள் கூறியது இவர் எங்கள் கடையில்

வேலைசெய்தபடியால் அவருக்கு அனுபவம் கிடைத்திருக்கும் அதனால்அவர் இனித் தனியாகத் தொழில் செய்து. பிழைக்கட்டும் என்று வாழ்த்தி அனுப்பினாள். தம்பி எப்போதும் நீ செல்லும் வழி நேர் வழியாக இருக்கட்டும். அவனும் சரியக்கா எனத் தான் செய்த பிழைக்கு மன்னிப்பு கேட்டுவிட்டுச் சென்றான்.

காலம்கடுகதியாக ஒருநாள் அந்தப்பையன் ஒருபெண்ணுடன் பார்வதி முன்னால் நின்றான், அத்துடன் நாலுபெரியவரகளைக் கூப்பிட்டு தான் அக்கா செய்த உதவியால் இன்று நன்றாக இருக்கின்றேன், எனக்குத் திருமணமாகி விட்டது. பாரு அக்கா என்னை நல்வழிப் படுத்தியதால் எனக்கு இப்படி ஒரு நல்ல வாழ்க்கை அமைந்தது. அவ்வுக்கு எனது நன்றி எனக்கூறித் தான் கொண்டு வந்த பணத்தை அவளிடம் கொடுத்தான். அத்துடன் அவள் காலில் விழுந்து ஆசீர்வாதமும் பெற்றான்.

அவளுக்கு மகிழ்ச்சியாக இருந்தது தன்னால் ஒருவன் முன்னேறியதையிட்டு, அப்பொழுது பாரு தம்பி வாழ்க்கையில் தப்பு செய்யாதவர் யாருமில்லை, நாம் தப்பு செய்தால் அதைத் திருத்தி ஒழுக்கமாக வாழ்ந்தால் எல்லாமே வெற்றிதான். என்றாலும் என்னை நீங்கள் நல-வழிப் படுத்தியதற்கு நன்றியக்கா எனக்கண்ண்ணீர் விட்டான் . அதன் அர்த்தம் பாருவிற்கும் அவனுக்கு மட்டுமே தெரியும் அவன் திருடியதை அவள் சொல்லவில்லை அந்தக் கண்ணீர் தான் நன்றி நவின்றது.

தமது இப்படி நாடகள் சென்றன. இன்று பாருவின் வாழ்வில் பெரியசாதனையான நாள், அவளுடை-டய இரண்டு மகள்களும் படித்து முடித்து பட்டமளிப்பு விழா. கலா டாக்டராகவும் மாலா லாயராகவும் படித்து முடித்தனர்.

இருவரும் தங்கள் தாயாரைக் கூட்டுக்கொண்டு போனார்கள், அங்கே அந்தப் பெருவிழாவில்தனது இரு பிள்ளைகளும் பட்டத்தைப் பெற்றுக் கொள்ளும்போது தாயாக மிகவும் மகிழ்ச்சி யடைந்தது கருவறை. அவள் பட்ட கஷ்டம் வேதனைக்கு ஒத்தடம் கொடுத்தது போல அவள் மனமும் குதூகலித்தது. அத்தருணம் இதைப்பார்க்க முரளியில்லையேஎனக்கவலைப் பட்டது மனம்.

இருந்தாலும் அவனது ஆத்மா மேலேயிருந்து அவர்களை வாழ்த்தும் என ஆறுதல் படுத்தியது மனம். விழாவின் முடிவில் பேராசிரியர் வந்து பார்வதியைப் பாராட்டி அப்பா இல்லாவிட்டாலும் தனியொரு பெண்ணாக இவர்களை இவ்வளவு நன்றாகப் படிக்க வைத்த சாதனைப் பெண்ணாகப் பார்ப்பதாகக் கூறியபொழுது பார்வதி அழுதேவிட்டாள் . பிள்ளைகள் இருவரும் அவளைக் கட்டியணைத்து முத்த மழை பொழிந்தனர், அந்த மழையில் நனைந்து ஆனந்தம் அடைந்தாள்.

இப்பொழுது அவள் மனதில் தோன்றியது தான் இன்னும் நிறைய சாதனை செய்ய வேண்டும்எதற்கும்மிரளக்கூடாது , துணிந்து செயல்பட வேண்டும். கணவன் கற்றுக் கொடுத்தது, ஊக்கப்படுத்தியது இவைதான் அவள் மிரட்சியைப் போக்கி மிரளாதவள்!...

(முற்றும்)

**மண் சஞ்சிகையின் 35 வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி வாசகர்களிடையே நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் 3 வது பரிசு பெற்றது. வாழ்த்துகள்!...**

# கணினி உலகம்

**- செல்வி சாமினா சிவதாசன் -**

மனிதன் தோன்றிய ஆரம்பக் காலங்களில் இயற்கையை மட்டுமே நம்பி வாழ்ந்து வந்தான். தன்னைச் சுற்றிய உலகை ஆராய்ந்து, விவசாயம் மற்றும் கைத்தொழில் செய்து வளர்ந்தான். ஆனால் காலப்போக்கில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியால் மனித வாழ்வில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. தனக்குத் தேவையான அடிப்படைப் பொருட்களை தானே உருவாக்கிய காலம் மாறி, தன் உள்ளம் கையிலேயே உலகத்தை அடக்கி ”கணனி உலகம்” என்ற ஒரு காலப்பகுதியில் வாழ்ந்து கொண்டு இருக்கின்றான். இன்றைய உலகில் தகவல் பரிமாற்றம், வேலை வாய்ப்புகள், கல்வி, வணிகம், உறவுகளின் தொடர்பு என மனித வாழ்வின் பெரும்பாலான செயற்பாடுகள் கணனியின் மடியில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

இன்று முக்கியமான ஒரு சாதனமாக மாறிய கணனி தனது வரலாற்றில் பல்வேறு பரிமாணங்களைகடந்து வளர்ந்தது. ஆரம்பத்தில கணனிகள் பெரிதாகவும், குறைந்த செயல் திறன்களுடனும் அமைந்து, கூடுதலாக கணக்கீடு செய்ய மட்டுமே பயன்படுத்தப்பட்டன. ஆனால் 20ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் தொழில்நுட்ப வளர்ச்சியால் கணனியின் வடிவமைப்பில் மிகப்பெரிய முன்னேற்றம் ஏற்பட்டு ஆரம்பக்காலத்துடன் ஒப்பிடும் போது கணனிகள் சிறியதாகவும், வேகமாகவும் மற்றும் திறமையாகவும் மாறின. கணனிதொடர்ந்து மேம்படுத்தப்பட்டு இன்று இன்னும் புதிய நவீனமான செயல்திறன்களை வழங்கி வருகிறது. இன்று நம் வாழ்வில் கணனி பல வடிவங்களில் அமைந்துள்ளது. மடிக்கக்கடிய வடிவத்தில் மடிக்கணனியாகவும் (டுயிவழி), இலகுவாக கொண்டு செல்லக்கூடிய மெல்லிய வடிவத்தில் டேப்லெடாகவும் (வுயடிடநவ), மனித கைகளில் அடக்கக்கூடிய வடிவத்தில் செல்லிடதொலைபேசியாகவும் (ளுஅயசவிாழநெ) பல வடிவங்களில் காணப்படுகின்றன. இப்படி கணினியின் வடிவத்தில் மட்டுமல்லாமல், அதன் பயன்பாட்டிலும் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன.

இன்று எமது அன்றாட வாழ்வில் கணனி இன்றியமையாத சாதனமாக அமைந்துள்ளது. வணிகம், அறிவியல், கல்வி, மருத்துவம், தொலைத்தொடர்பு, விண்வெளி, பாதுகாப்பு எனப் பல துறைகளுக்கும் கணனி பயன்படுகின்றது. ஓரிடத்தில் நடைபெறும் நிகழ்வுகளை உடனுக்குடன் உலகெங்கும் பார்ப்பதற்கும், கேட்பதற்கும் தகவல் தொடர்பு சாதனமான கணனி முக்கிய இடத்தை வகிக்கிறது .குறிப்பாக உலகெங்கும் வாழும் உறவுகளைஇணைக்கும் உறவுப்பாலமாகவும் கணனி தொழில்ப் படுகின்றது.

உதாரணமாக போர்ச் சூழல் காரணமாக எமது பெற்றோர்கள் புலம்பெயர்ந்த காலப்போக்கில் தமது உறவுகளுடன் தொடர்புகொள்வது மிகவும் கடினமாக இருந்தது. தாய்நாட்டில் வாழ்ந்துகொண்டு இருந்த உறவுகள் தமது உறவுகள் சுகமாக செல்ல இருந்த இடத்தை அடைந்துவிட்டார்களா இல்லையா என்று தெரியாமலே வாழ்ந்தார்கள். அக்காலத்தில் தொடர்புகொள்வதற்கு ஒரே ஒரு வழியாக கடிதம் மட்டுமே அமைந்திருந்தது. ஆனால் நாம் இன்று எங்கு சென்று என்ன செய்கின்றோம் என்று நேரடியாக மட்டுமல்லாமல் பதிவு செய்து பின்பு கூட காட்டலாம். மாணவர்கள் உலகின் எந்தப் பகுதியிலிருந்தும் இலகுவாக கல்வியைப் பெற முடிகிறது .

இதே போல் பெரும்பாலான பணியாட்களும் தமது வேலைகளை வீட்டில் இருந்தே செய்வதற்கும் கூட கணனி பெரும் பங்கு வகிக்கின்றது. குறிப்பாக உலகத்தையே சோதித்த கொரோனா நோய் காலத்தில் இந்த இரண்டும் மிகவும் உதவியாக இருந்து இன்னும் வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கின்றது. மேலும் வீட்டிலிருந்தே வேலை செய்யும் வசதியால், முன்பு குடும்பத்தையும் குழந்தைகளையும் கவனித்துக் கொண்டிருந்த பெண்களுக்கும் தற்பொழுது வேலை செய்யும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

அதாவது இன்றைய காலத்தில் குடும்ப வாழ்க்கையையும் தொழிலையும் ஒரே நேரத்தில் செய்வதற்கும் கணனி உறுதுணையாக இருக்கின்றது. இன்றைய வணிக உலகில் கணனி மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இணையவழிக் கடைகள், மின்னனு வர்த்தகம், வங்கிச் சேவைகள் என அனைத்து வசதிகளும் சர்வதேச வணிக வளர்ச்சியை மேன்மைப்படுத்துகின்றன.

மேலும் கணனி பொழுது போக்கிலும் முக்கிய பங்கு வகிக்கின்றது. திரைப்படங்கள், இசை, ஆன்லைன் விளையாட்டு க்கள் போன்றவற்றை அனைத்து நேரத்திலும், எல்லா இடத்திலும் இருந்து அனுபவிக்க முடிகிறது. மருத்துவத்துறையிலும் கணனி மிகவும் அவசியமானதாக மாறியு ள்ளது. நோயின் பரிசோதனைகள், மருத்துவ தகவல் பரிமாற்றம், மருத்துவக் கருவிகளின் கணனி கட்டுப்பாடு, தொலை மருத்துவம் போன்றவை நோயாளிகளுக்கு விரைவான சிகிச்சையைவழங்கு கின்றன.

உதாரணமாகத்தொலை நோய் மருத்துவம் (Telemedicine) மூலம் எல்லா இடங்களிலும் இருந்து கொண்டே மருத்துவர்களுடன் பேசி ஆலோசனை பெறமுடிகிறது. மேலும் செயற்கை நுண்ணறிவின் (Artificial Intelligence) ஆதரவுடன் சிகிச்சைகள் இலகுவாகவும் துரிதமாகவும் வளர்ச்சி அடை கின்றன.இப்படி கணனி எமது அன்றாட வாழ்க்கையில்மிகப் பெரிய மாற்றத்தையும், வசதியை யும் வழங்கியுள்ளதோடு, சிலதீமை களையும் கொண்டு வந்துள்ளது.

தற்பொழுது பெரும் சவாலாக இருக்கும் விடயங்களில் ஒன்று தனியுரிமை இழப்பு ஆகும். சமூக ஊடகங்கள் மற்றும்தகவல்ச் சேவைகள் எமது விபரங்களை திரட்டுகின்றன. எமது தனிப்பட்ட தகவல்களை எடுத்து எங்கள் விருப்பங்களுக்கு ஏற்ப விளம்பரங்களை காட்டி எங்கள் மனநிலையை தமக்கு சாதகமாக பயன்படுத்தி ஒரு குறிப்பிட்ட பொருள் அல்லது சேவையை வாங்குவதற்கு ஊக்கப்படுத்து கிறார்கள். உதாரணமாக, பயணத்தை விரும்பும் ஒருவருக்கு,

அவர் சமூக ஊடகங்களில் அல்லது இணைய தேடல்களில் பயணம் தொடர்பான தகவல்களைப் தேடும் போது, விமானச்சேவைகள், சுற்றுலா இடங்கள் மற்றும் விடுதி வசதிகள் பற்றிய விளம்பரங்கள் காண்பிக்கப்படும். இது அந்த நபரின் பயணத்திற்கான ஆர்வத்தை தூண்டுகின்றது.

மேலும் இந்த கணனி உலகில் மனிதர்கள் தொழில்நுட்பத்தின் அடிமைகளாக வாழ்கின்றனர். தினசரி வேலைகளைச் செய்யும் போது நாம் அதிக நேரத்தை கணனியில் செலவழிக்கின்றோம். இதனால் மன அழுத்தம், உடல் சோர்வு, கண் வலி போன்ற உடல் மற்றும் மனநிலை பிரச்சனைகளை ஏதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றன. இருப்பினும் சமுதாயத்தில் தற்போது தினசரி வேலைகளான வங்கி தொடர்பான வேலைகள், மின்னணு வணிகம், தபால் சேவைகள், அரசு துறைகளின் செயல்முறைகள், கல்விப்பதிவு மற்றும் மருத்துவ ஆலோசனைகள் போன்றவை ஆன்லைன் வழியில் செய்வதற்கு திணிக்கப்படுகின்றது.

இது மட்டுமல்லாமல், ஆன்லைனில் செய்வதற்கு எதிர்ப்பு தெரிவிப்பவர்களுக்கு நீண்ட காத்திருப்பு நேரங்கள், அதிக சேவை கட்டணங்கள், போன்ற சிரமங்களை சந்திக்க வேண்டிய சூழல் உருவாக்கப்படுகிறது. இது ஒருவகையில் மக்கள் ஆன்லைன் முறையைக் கட்டாயமாக ஏற்கும் சூழலை உருவாக்கும் மனநிலை அழுத்தமாக எடுத்துக்கொள்ளலாம். இதனால் வயோதிபர்கள், படிப்பறிவு அற்றவர்கள், ஆர்வம் மற்றும் அக்கறை இல்லாதவர்கள் பெருமளவில் பாதிக்கப்படுகின்றனர்.

இணைய வழியாக செய்யப்படும் குற்றங்களின் எண்ணிக்கையும் அதிகரித்து தீமையான விளைவுகளை சந்திக்கின்றோம். சமுதாயத்தையே பாதிக்கும் விதத்தில் பாடசாலைகள்,பல்கலைக்கழகங்கள், மருந்தகங்கள், மற்றும் மருத்துவ மனைகள் போன்ற அமைப்புகளில் சைபர் தாக்குதல்கள் அதிகரித்து தீவிரமான விளைவுகளைகொண்டு வருகின்றன.அதாவதுசைபர் தாக்குதல் என்பது வலைத்தளங்களின் பாது காப்பை உடைத்து, தனிப்பட்ட அல்லது நிறுவனங்களின் விவரத்தை திருடுவது அல்லது அவற்றை சேதப்படுத்துவது ஆகும்.

மேலும் தானியக்க இயந்திரங்கள்(Automatic) மற்றும் செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence (AI)) போன்றன கணனியின் செயற்பாட்டிற்கு உட்பட்டமையினால் மனிதர்களின் வேலைகளில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. மக்கள் வேலை வாய்ப்புக்களை இழந்தும்,குறைந்த வேலை நேரம் மற்றும் வேலை கிடைக்காமை போன்ற பல பிரச்சனை களுக்கு முகம் கொடுக்கின்றனர்.

மேலும் கணனி மற்றும் அதன் உபகரணங்கள், அதற்கான மின்சார நுகர்வு போன்றவை சுற்றுச்சூழலில் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன. மொத்தத்தில் கணனி உலகம் மனித வாழ்வில் வசதிகளையும், முன்னேற்றங்களையும் கொண்டு வந்தாலும், அதே வேளையில் தீவிரமான விளைவுகளையும் ஏற்படுத்தியுள்ளது. கணனியின் உதவியால் இன்று நாம் எளிமையாகவும், வேகமாகவும் பல செயல்களைச் செய்ய முடிகின்றது.

கல்வி, வேலை, வணிகம், பொழுதுபோக்கு, மருத்துவம் என பல துறைகளில் கணனியின் பயன்பாடு பல நன்மைகளை தருகின்றது. அதே வேளையில் தனியுரிமை இழப்பு, தொழில்நுட்ப அடிமைத்தனம், உடல் மற்றும் மனநல பிரச்சனைகள் போன்ற விளைவுகளையும் ஏற்படுத்துகின்றன.

எனவே கணனியின் பயன்பாட்டில் ஏற்படும் நன்மைகளை அனுபவித்தாலும், ஏற்படும் விளைவுகளையும் நுணுக்கமாகக் கவனித்து கணனி உலகத்தின் தொழில்நுட்பப் பயணத்தில் தொடர்ந்து பயணிப்போம்!.....

(முற்றும்)

## அன்னை திரேசா...

அன்னை என வணங்கும் அகிலத் தாய்
மனித நேயம் படைத்த மாசற்ற அன்னை
மண்ணுலகம் கண்ட மாந்தர் குல விளக்கு
நாடு விட்டு நாடு வந்து தெருவோர ஏழைகட்கு
தெய்வமென ஆன அன்னை உருக மனம்
நித்தம் ஓம்பியவர் காத்தவள்
அருவருப்பு இன்றி அரவணைத்து நின்றவள்
இரக்கம் எனும் புண்ணியம்
இவள் வடிவம் எடுக்கும்
இனம் மதம் நாடு எதுவுமிவள் அறியாள்
மக்கள் பணியே மகேசன் பணியென
தினமும் வாழ்ந்த தெய்வம்பணம்
பொருள் விருது பற்றில்லா கன்னியாஸ்திரி
சமாதான நோபல் பரிசு பெற்று
சரித்திரம் படைத்தவள்அன்னை இவள் போல
உலகில் யாருமில்லையென
இன்று மின்னும் இவள் வாழ்க்கை
மாபெரும் காப்பியம் பதித்த பெயரானாள்
1979 ல் அமைதிக்கான நோபல் பரிசினையும்
1980 ல் இந்தியாவின் பாரத ரத்னா
விருதையும் பெற்றவர்
திருத்தந்தை இரண்டாம் அருளப்பர்
சின்னப்பரால் முக்தி பேறு அடைந்தவராக
கல்கத்தாவின் அருளாளர்
பட்டம் சூட்டப்பட்ட அன்னை திரேசா!..

**– ஜெயா நடேசன் –**

**பிறந்தநாள் வாழ்த்துகள்**



28.08.1910 - 05.09.1997

**அன்பை மட்டும்
கடன் கொடுங்கள்
அது மட்டுமே
அதிக வட்டியுடன்
திரும்பக் கிடைக்கும்**

**- அன்னை திரேசா -**

## முட்டாளின் மௌனம்....

புத்திசாலியாக இரு
முட்டாளாய் நடி அதில்
வாழ்க்கையின்
உள்மன ரகசியங்களைக்
கற்றுக் கொள்ளும்
தருணமாக நிறைந்திருக்கும்...
நுண்ணறிவை
மௌனமாய்க் கட்டி வை
அறியாதவன் போல
கேள்வி கேட்காமல் நில்
உலகம் உன்னிடம் மறைத்த
வாசகங்களைப் பகிரும்...
விவேகமாய் விலகிச் செல்
முட்டாளின் சாயலில்
கண்களால் சுவாசிக்கக்
கற்றுக் கொள்
அதைப் போல்
மூடப்பட்ட சாளரங்கள்
வார்த்தைகளால் திறக்கும்..
விவேகியின் பாடம்
முட்டாளின் மௌனத்தில்
ஒளிந்திருக்கும்
அதைக் கண்டறிய
நீ சிரிக்கும் நடிப்பு
தேவையானது...
புத்திசாலியின்
அடையாளமாய் இரு
ஆனால்,
முட்டாளின் சுயமூலம்
உன் மாயக் கதவுகளைத்
திறக்கும் சாவி!
நடிப்பு இல்லாத ஒரு
நாடகம்தான் வாழ்க்கை..!

**சத்யா பிரான்சிஸ் -மலேசியா-**

## சோறு போடும் பூமி...

‘சோறு போடும் பூமி
சோர்ந்து போனதில்லை
என்றார் பாட்டி
காலம் கழிந்தாலும்
கைவிட்டதில்லை
கருப்பை போலவே
காப்பாற்றியது
உழவன் நெஞ்சம்
நனைந்த மண்
உழைக்கத்
துணிந்தால்
துணை நின்றது
பசியைப் போக்கியும்
பாசத்தைக் கொட்டியும்
வாழ்ந்தது
விலை பேசாத
நெற்கதிர்
விழி நீர் துடைக்கும்
மருத்து நாசி உறையும்
வாசனை நம்
நாட்டின் மூச்சுஅது
சொத்தெல்லாம்
விற்கப்பட்டாலும்
சொந்தமாய்
நிலம் இருக்க
அதில் ஒரு ஓரமாவது
இருந்தால் அதுவே
வாழ்வின் அடித்தளம்
சோறு போடும் பூமி
சோர்ந்து போனதில்லை
அது நம்
எண்ணங்களில்
இன்றும் ஒரு
வரமாகவே உள்ளது

**கலை - மலேசியா -**

# கறுப்பு யூலை...

**- வசந்தா ஜெகதீசன் -**

வேகாத நினைவுகளில்
வெற்றுத்தாள் ஒத்தடம்
காலத்தின் கறைபடிந்த
கலங்கரையின் நாடகம்
கறுப்பு யூலையெனும்
அசுரர்களின் தாண்டவம்
தமிழினத்துப் பேரழிவே
தரணியில் யாசகம்
ஆடி இருபத்தி மூன்று
அவலத்தின் அடித்தளம்
கறுப்பு யூலையாய்
கருக் கொண்ட போர்மழை
வேரோடு எம்மினத்தை
வீழ்த்திய படுகொலை
எண்ணற்ற உயிர்களை
காவு கொண்ட கறுப்புயூலை
அழிவுகளின் அரிச்சுவடி
வீரத்தை வீரியமாய்
வீறுகொள்ள வைத்தது
வீழ்தலிலே பல உயிரை
காவு கொண்டு புதைத்தது
ஆடிக் கலவரமாய்
அனல்கொண்டு எரிந்தது
அழியாத கோலமாய்
அடிமனதில் நிலைத்தது
சிறுபான்மை இனமென்ற
சித்திரவதைக்குள்
சிதைந்து சிக்குண்டோம்
சீரழிந்து சிதையுண்டோம்
ஜீவனற்ற நாதிகளாய்
எங்குமே ஏதிலியாய்
அல்லுற்று அகதியானோம்
அனுதினமும் உயிர்ப்பலிகள்
ஆகோரத்தின் உயிர்வதைகள்
புதையுண்டே பூத்தெழுந்தோம்
புன்னகைக்க தான் மறந்தோம்
மறக்கத் தகுமா கறுப்பு யூலையாய்!
மனதின் ரணமே கறுப்பு யூலையாய்!

..............................................................

## சங்கம்!...

பெயர் தமிழ்ச் சங்கம்
அழைப்பிதழும் வரவேற்பும்
விருதுகளும் சான்றுகளும்
ஆங்கிலத்தில்... தமிழ் வளர்ச்சி?..

## தேசியம்!...

உண்மை பேசினால்
எழுதினால்
தேசத்துரோகி என்பர்
பொய் பேசினால் எழுதினால்
தேசியவாதி என்று
சமூகம் அழைக்கும்!..

## அரசியல்!..

மேற்குலக நரிகளை நம்பி
சமாதானத்தின் பக்கம் சென்றால்
அழிவுகளும் பிளவுகளும்
துக்கமும்தான் மிஞ்சும்!..

**- சிவா -**

# கறுப்பு யூலை....

மணியம் - டோட்முண்ட்

ஆதிக் குடிகளாய்
ஆண்ட பரம்பரையை
அகதியாய் வந்தவன்
அடித்துதைத்த தினம்
ஆடிக் கலவரம்.
கறுப்பு யூலை

அஞ்சி அஞ்சி வந்து
அரச பரம்பரைக்குள் புகுந்து
ஒட்டி உறவாடி
ஒட்டகக் கதைபோல்
ஆட்சியை வசமாக்கி
ஆதிக்க வெறியேறி
ஏகாதிபத்திய நோக்கில்
இலங்கை எங்கும் பரவி
தன்னினம் மிகுந்தெழ
தமிழினத்தை அடக்கி ஒடுக்க
சிங்களவன் கையாண்ட கலவரம்
ஆடிக் கலவரம்
கறுப்பு யூலை.

ஐக்கிய தேசியம் பேசிய
இனத்துவேசிகளும் சிங்கள
அரசாங்க இயந்திரமும்
ஆயுதப் படையும் காவல்படையும்
காடையர்களும் அணிசேர்ந்து
கலவரத்தை ஏற்படுத்தி
அப்பாவித் தமிழரை
அடித்துதைத்த தினம்
ஆடிக் கலவரம்
கறுப்பு யூலை.

சிங்கள இன வெறியன்
சிறில் மத்தியூ
தமிழர் தோலைச்
செருப்பாய்த் தைப்பேன் எனச்
சீறிப்பாய்ந்து சபதம் போட்டு
இனத்துவேச நெருப்பை
எங்கும் மூட்ட
குழுக்குழுவாய்ச் சேர்ந்த
குளுப்பிடித்த காடையர்கள்
கத்தி, வாள். கோடரிகளுடன்
வெடிகுண்டுகள் சகிதம்
தமிழரைத் தாக்கி, அடித்து,
வெட்டிக் காயப்படுத்தி
உடல்களைச் சிதைத்து
சின்னாபின்னமாக்கி
அடித்தும் எரித்தும்
படுகொலை செய்யப்பட்ட தமிழர்
மூவாயிரதத்திற்கு மேல்
படுகாயப் பட்டவர்கள்
இருபத்தையாயிரத்திற்கு மேல்
நீதி விசாரணைகள்
ஏதுமில்லா நிலையில் மீண்டும்
படுகொலைகள் தொடர
முள்ளி வாய்க்கால்
தமிழினப் படுகொலை
உச்சம் தொட்டு நின்றபோதும்
உலகம் கண்மூடிக் கிடக்க
நீதி கிடைக்கா நிலையில் தமிழன்...

# ஆதவன் வரவால் . . .!

- இரா . சம்பந்தன் -

காலை மலரக்
கதிரவ னெழுகையில்
கடலது கவினுறப்
பொட்டணிந்து பூவையாய்ப்
பொலிவுறத் தோன்றும் .

ஒளிக்கதிர்கள் பரவிட
பூமகளும் பூரிப்பில் . . . .
பார்மகளின் பல்லுயிர்கள்
பகலவனால் வாழ்வுபெறும் .

பசுமைதனை வார்த்தே
பயனளிக்கும் கதிரவன்போல்
பாருக்காய் பணிசெய்து
பயணிப்போர் உலகினிலே . . . .

உதயத்தில் சூரியன்
இருள்கிழிக்க எழுவதுபோல்
உலகின் இருள்கிழிக்க
புத்தன் , யேசு , காந்திபோல்
மாந்தநேயங் கொண்டவர்
மண்ணிலே பிறப்பதுண்டு . . . .

பல சூரியப் புதல்வர்கள்
அவ்வப்போது பூமியில் பிறந்தாலும்
கருமேகங்க ளிடையே
கதிரவன் மறைவதுபோல்
கண்மறைந்து போவதுண்டு . . . .

பகலவன் வரவால்
புத்துயிர்ப்புக் கொள்ளுகின்ற
மானிடர் உதடுகளில்
புன்னகைப் பூ பூப்பதுண்டு !

கதிரவன் கைவீசி
நடக்காத தேசங்களில்
மனவழுத்தம் முற்றி
மனநோய்கள் படர்வதுண்டு . .

ஆதவன் தருகின்ற
அற்புத சக்தியை உடலது
உள்வாங்காவிடில் எலும்புகளின்
தேய்மானம் தோன்றலாம் !

வெப்பவலய நாடுகளை நோக்கி
வெள்ளையர் செல்வதெல்லாம்
பணத்தைக் கொடுத்தே
ஆரோக்கியத்தோடு ,
மகிழ்சியதையும்
கொள்வனவு செய்திடவே !

திங்கள் கூட
தினகரன் தன்னிடம்
கடன்வாங்கித் தானே
கவினுற விளங்குகின்றது !

உதயத்தில் தொடங்கி
ஊர்கோலம் செல்லும் பகலவன்
உழைப்பவர் ஓய்வு
கொள்வதுபோல்
அந்தியிலே கண்ணுறக்கம் !

மரஞ்செடி , கொடிகளோடு ,
மானிடர்க்கும்
ஔடதமாய் ஒளிரும் ஆதவன்
சுட்டெரிக்கும் காலங்களில்
விடமாக மாறுவதுண்டு
பாலைவனப் பிரதேசங்களில் !






## மண் சஞ்சிகை இதழ்-231 அட்டைப்படக் கவிதை:

கண்கொள்ளாது வழிந்த காலச்சுழல்வின் சாட்சிகள்
கலை கலாச்சார நிகழ்வுக் களிப்பின் நீட்சிகள்
மண்மங்கை மலர்வில் மகிழ்வான மாட்சிகள்
மனதுக்கு நெருக்கமாய் மதுரமான முயற்சிகள்
பண்பாட்டு விழுமியத்தின் பதிவான ஆட்சிகள்
பல்சுவை விருந்தாயான பண்பட்ட காட்சிகள்

இளையோரின் திறமைகளால் இளைத்திட்ட வியப்பு
எடுத்தாண்ட விதத்தினிலே இணைந்திட்ட திகைப்பு
முளைவிட்ட பயிர்களால் முத்தமிழில் இலையிப்பு
முப்பாலும் தோற்றுநின்ற முனைப்புகளின் பெயர்ப்பு
மழையாகப் பொழிந்திட்ட மகிழ்ச்சியின் இழைப்பும்
மதுசுரந்த மலர்களினால் மகுடம்சூட்டிய மலைப்பு

முப்பத்தாறா வதகவை முகிழ்ந்துநின்ற மகிழ்ச்சி
மூப்பெதுவும் தெரியாத முயற்சியின் வளர்ச்சி
செப்பிநிற்கும் செயலிலே செம்மையின் திகழ்ச்சி
சேவையொடு மனிதத்தை செம்மையாக்கும் நெகிழ்ச்சி
தப்பிதமே நிகழாவண்ணம் தடம்பதிக்கும் முயற்சி
தரணியில் தனித்துவமாய் தலைநிமிர்ந்த எழுச்சி

**-அம்பலவன்புவனேந்திரன்..**



# எரிக்கின்ற ஆடிமாத இரவுகள்

ஆடிப்பாடி மகிழ்ந்திருந்த அழகிய தீவினுக்குத்
தேடியே வந்துயிர் தின்றதே- ஆடி 27
பொசுக்கிய உடல்களையும் பெண்புரசு பிஞ்சுகளையும்
நசுங்கியதே கறுப்பு நாள்

கூடியபல காடையர்கள் குரல்வளை அறுத்தெடுக்கப்
பேடிகள் விழிகளைத் தோண்டினரே- மாடியில்
சிங்களத் தலைமைகள் செருக்கினில் குதிக்கையில்
வங்கமே மூடியது வாய்

ஓடிமறைந்த உறவுகளின் உயிரினைப் பறிக்கையில்
மூடிடாவிழிகளுள் முட்கள் முளைத்ததே- நீடிக்கும்
கவலைகளில் உழன்றே கன்றிய நாட்களிளெல்லாம்
அபலையாய் அலைந்ததே ஆவி

நாடியே வந்திருக்கும் நல்லவர்களின் பணிகளெலாம்
வாடியேன் கிடக்கிறதே வழியில்- கூடியே
வாழ்ந்திட்ட காலங்கள் வற்றியிங்கு போனதால்
தாழ்வரோ தமிழர் தான்

வாடிடும் வாழ்வதனை வளமாக்கிட இயற்கையும்
சூடிடும் நல்வழிகளைச் சுருக்கியது- ஜோடியாம்
இனங்களில் பிணக்கினை இல்லாது நீக்கிடும்
மனங்களில் மலரட்டும் மாண்பு

மூடியகதவுகள் எல்லாம் முழுவதுமாய்த் திறந்திட்டால்
நீடியதாய் ஒற்றுமையும் நிலைக்குமே- கோடியில்
குன்றாய் உயர்ந்திடக் குவலயத்திற் செழுமையில்
நன்றாமே நமது நாடு...

**அம்பலவன்புவனேந்திரன்..**

## விடியல் என்றோ?...

- கீத்தா பரமானந்தன் -

தோண்டும் நிலங்கள் எங்கணுமே
தோன்றும் எலும்புக் கூடுகளே!
நீண்டே செல்லும் அவலத்தில்
நிலமே காடாய்க் கிடக்கிறது!
ஆண்டு பலவாய்த் தேடுகின்றார்
அவல முடனே உறவுகளைக்
கூண்டோடழித்தசதிகாரர்குழிக்குள்
உயிராய்ப் புதைத்திட்டார்!
அரக்கத் தனத்தின் மிகுஉச்சம்
ஆட்சி செய்த கொலைகாரர்!
இரக்க மற்று நடந்ததெலாம்
இப்போ எங்கும் எலும்புகளாய்!
மிரண்டே உலகும் விழிக்கிறது!
மீட்கும் வழிகள் அறியாமல்!
உரமாய்த் தமிழர் நிமிர்ந்ததனால்
உரிமை முழக்கம் ஒலித்ததுவே!
கொலை வெறியின் உச்சமென
கூடி அணைத்த கூடுகளாய்
இலையே எங்கும் இந்தநிலை
ஈழத் தமிழர் தலைவிதியாய்
வலையில் வீழ்ந்த மீன்களென
வழியே இல்லா அழிவுநிலை
சிலையாய் உலகோர் பார்த்திருக்க
சிதிலம் ஆயே துடிக்கின்றோம்!
அப்பா அண்ணன் தம்பிகளும்
அத்தைகளும் அக்கா சித்தி
இப்போ எங்கே இருப்பாரோ?
தேடல்கள்! இன்றும் ஏக்கத்
தப்பா வேதும் செய்ததில்லை
கீத்தா பரமானந்த
தமிழாய் அவர்கள்
தலைநிமிர்ந்தார்!
எப்போ விடியும் தாய்த்தேசம்
ஏங்கி நாளும் வாடுகிறோம்!

------------------------------------------------------------

## ஆடியின் அறுவடையே...

ஆண்டுகள் பல உருண்டோடினாலும்
ஆடிக்கலவரமே நினைவில் வரும்
ஆயிரம் ஆயிரம் அழிந்ததேஉயிர்கள்
ஆடியின் அறுவடையின் சுவடுகள்!...

ஆடியில் நடந்த கொடுமைகள்
தேடியே தீயிட்டுக் கொழுத்தியது
ஓடியே அலைந்தனர் அகதியாய்
நாடியே முகாம்களில் அடைக்கலம்!..

தமிழ்மண்ணில் சுகமாய் களித்தோம்
தேடி வந்ததோ ஆடியில் கலவரம்
வாழ்வும் வளமும் அழிந்ததே அன்று
எண்ணிலா உயிர்களும் மாண்டனவே!.

புண்பட்டு மக்கள் புகலிடம் இன்றியே
அலைந்து உலககெல்லாம் சென்றனர்
ஆடியின் அறுவடையால் தமிழினம்
உலகப் பந்தெல்லாம் தமிழினம்!...

- இராஜேஸ்வரி சிவராசா -

# மண்!......

- ப பசுபதிராசா -

பிறக்கும் ஒவ்வோர் உயிருக்கும் உரிமை கொள்வது மண் மட்டுமே
மண்ணில் பிறந்தாலே மறுபடி மண்ணுக்கு மீண்டும் இரைதானே
வந்துபோன மானிடம் ஒவ்வொன்றும் கண்டறிந்த கடைசி உண்மை
மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் மறந்தால் முற்றாய் வீழலாம்!..

மண்ணில் வளம் அனைத்து உயிர்களுக்குமான உயிர் உடமை
மறந்தும் கை வைப்பதென்பது சகல உயிர்கள் மீதான துரோகம்
மண் வளம் குறைந்து போனாலும் மானிடம் அதை நிவர்த்தி செய்யலாம்
நிலவளம் எங்கும் சமமற்று இருப்பது பகிர்ந்து உண்ணும் மானிடப் பண்பே!..

மண் வளத்தைப் பயன்படுத்தி அணு ஆயுதம் தூக்குவது துாரதிஸ்டமே
அறிவாயுதம் விடுத்து அணுவாயுதம் ஏந்த வளம்தரும்மண்ணே அழியும்
பலன் தரும் செயற்பாட்டை மண் முற்றுமுழுதாக இழந்துவிடக்கூடும்
கருணைகொண்டது மண் என்பதற்காகவே அதைநாம் தாய்நாடு என்கிறோம்!..

மனிதனுக்குப்பேராசை ஏற்பட்டுவிட்டால் அதைப்பூர்த்தி செய்யமண்ணால்முடியுது
ஆனால் எத்தனை நீதிச்சட்டம் வந்தும் வளத்திற்கான சங்கடமே நீழ்கிறது
பூமியில் இத்தனை வளம் இருக்கும்போது வறுமை என்றால் புவி சிரிக்கும்
சோதிடத்தைப் பாா்ர்பதும் சோம்பேறியாக இருப்பதும் பூமிக்குப் பிடிக்காது!..

மண்ணில் பிறந்த உயிர்க்குலமும் மண்ணுக்குக் கட்டாயம் உதவுகிறது
மறு உயிர்களின் உதவியின்றி மனிதனால் வாழவோ வசிக்கவோ முடியாது
வளமும் உயிர்க்குலமும் மனிதனுக்காய் வாழ்ந்தும் மதிப்பவன் எவருமில்லை
கண்ணுக்குத்தெரியாத உயிர்க்குலமே மனிதனை மண்ணில் கட்டுப்படுத்துவது!..

வானம் நிறைந்து கிடக்கும் அணு ஆயுத குப்பை மண்ணை அழிக்கிறது
கடலில் கொட்டப்படும் நெகிளிதான் கடல் உயிரைஅடியோடு பறிக்கின்றது
தொழில்வளம் என்றபெயரில் நச்சுக்காற்று சூழலை அசுத்தப் படுத்துகின்றது
மண் கோபித்தால் மண்ணே மனிதனுக்கு முடிவுரை எழுதுகின்றது!..

# யேர்மனிய தமிழ்ப்பெண் எழுத்தாளர்கள் விபரம்...

**- தொகுப்பு சாந்தினி துரையரங்கன் -**

## யேர்மனிய தமிழ்ப்பெண் எழத்தாளர்கள் ...தொடர்ச்சி - 35



## திருமதி வேணி கிருபாகரன்

பிறப்பு :- மட்டுவில் கிழக்கு சாவகச்சேரி - ( 20.01.1973 )
பெற்றோர்:- சின்னத்தம்பி (ஆசிரியர் ) - செல்வக்கிளி
கல்வி - ஆரம்பக்கல்வி - யாழ் மட்டுவில் வடக்கு அ.த.க. பாடசாலை
இடைநிலைக்கல்வி -யாழ் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம்
உயர்கல்வி - யாழ் சாவகச்சேரி இந்துக் கல்லூரி
பல்கலைக்கழகம்: - யாழ்ப்பாணம்
பட்டம்: - தமிழ் சிறப்பு கலைப்பட்டதாரி.
தொழில் :- ஆசிரியர்
புலப்பெயர்வு - 2004
வாழ்விடம் - Oldenburg in Holstein.
கணவர்- கிருபாகரன் (சமூகச்செயற்பாட்டாளர்)
பிள்ளைகள்: சேயோன். இனியா
எழுத்துத்துறை:- சிறுகதை ,கட்டுரை
படைப்பு :- அப்பாவும் அம்மாவும் (ஆவண நூல்)
தற்போதைய தொழில் - சிறுவர் பராமரிப்பு உதவியாளர்( Integration Helferin)

ஈழத்தில் பள்ளிக் காலத்தில் நடைபெறுகின்ற தழிழ்திறன் கவிதை,கட்டுரை, சிறுகதை, போட்டிகளில் கொத்தணி, கோட்ட, மாவட்ட மட்டரீதியில் வெற்றிபெற்று பல பரிசில்களை பெற்றவர். சிறுவயதில் இருந்தே



எழுத்தாளர்கள் ஜெயகாந்தன், செங்கையாழியன், டானியல், வரதராஜன் போன்றவர்கனின் கதைகளை வாசிக்கும் ஆர்வம் மிக்கவர். இதனால் எழுத்துத்துறையில் ஆர்வத்துடன் இயங்கியவர். தமிழ் மீது அதிக நாட்டம் உள்ளமையால் உயர்தரத்தில் கலைத்துறையை தெரிவு செய்து பல்கலைக்கழகத்திலும் சிறப்புப் பாடமாக தமிழை கற்றவர். மாக்ஸிச கொள்கைகளில் அதிக நாட்டம் இருந்தமையால் நாவல் ஆசிரியர் கணேசலிங்கம் அவர்களின் நாவலில் உள்ள மாக்ஸிஸக் கொள்கைகள் என்ற தலைப்பில் பட்டப்படிப்பு ஆய்வினை மேற்கொண்டவர். ஈழத்தில் சுதந்திரப்பறவை, வெளிச்சம் என்பவற்றில் சில சிறுகதைகள் எழுதியவர். யாழ் மட்டுவில் வடக்கு அ.த.க. பாடசாலை, முல்லைத்தீவு உடையார்கட்டு மகாவித்தியாலயம் என்பவற்றில் 6 வருடங்களாக ஆசிரியர் பணியாற்றியவர்.

புலப்பெயர்வின் பின் 2006 இல் இருந்து யேர்மனியில் வெளிவந்து கொண்டிருக்கின்ற மண் சஞ்சிகையில் பல ஆக்கங்கள் எழுதினார். சமூக, கல்வி பணியாக 12 வருடங்களாக தனிப்பட்ட முறையில் பல பிள்ளைகளுக்கு தமிழ் மொழியை கற்பித்து வருகின்றார். இவர் வாழும் இடத்தில் தமிழ் மக்கள் மிகக்குறைவு என்பதால் தமிழ் கற்க விரும்பும் மாணவர்களுக்கு தன் வீட்டில் வைத்தே சேவை மனப்பான்மையுடன் கற்பித்து வருகின்றார். மாணவர்களிடையே பேச்சு, கவிதை, கட்டுரை போட்டிகளை நடாத்தி வருகின்றார். சரஸ்வதிபூசை , கலைவிழாக்கள் நடாத்தி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளை ஊக்கப்படுத்தி வருபவர்.

2023 ம் ஆண்டு தான் பிறந்த மட்டுவில் ஊரில் ”அப்பாவும் அம்மாவும்” என்ற ஆவணநூலை வெளியிட்டுள்ளார். தற்போது தான் எழுதிய சிறுகதைகளை தொகுத்து ஒரு நூலாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். இவரின் பணிகள் தொடர நாமும் வாழ்த்தி மகிழ்கின்றோம்.

**மண் சஞ்சிகை ஆசிரியரின் குறிப்பு:-**

திருமதி வேணி கிருபாகரன் அவர்கள் மண் சஞ்சிகைக்குப் பல சிறுகதைகள், கட்டுரைகளை எழுதிவந்திருக்கின்றார்.சஞ்சிகையின் ஆண்டுவிழாப் போட்டிகளில: நடைபெற்ற சிறுகதை, கட்டுரைப் போட்டிகளில் பல தடவைகள் பரிசுகளையும் பெற்றிருக்கிறார்.

இவரின் எழுத்துக்கள் யாதார்த்தங்களை தொட்டுநிற்பதுடன் சமூக மாற்றத்திற்கான நல்லதொரு எழுத்தாளராகவே கண்டுள்ளோம்!.. எழுத்து, கல்வி, சமூகப்பணிகள் தொடர வாழ்த்துகள்!... - ஆசிரியர் -

# நான்தான்!... மதவடி மயிலன்!...

நான்தான் மதவடியான் மீண்டும் வந்திருக்கிறன்... வணக்கம்!...வணக்கம்!... எல்லாரும் சுகம் என்று நினைக் கிறன்.. இனி கோடைகாலத்தில் பலபேர்தாய் நாட்டுக்குப் போக ஆயத்தங்கள் செய்துகொண்டிருப்பியள்,சிலர் போய்க்கொண்டுதான் இருப்பியள் என எண்ணுகின்றான் இந்த மயிலன் அங்கு போன பலர் கண்ட தெல்லாததையும்திண்டு கொழுத்து நிறைகூடியும்விடுவீர் கள் முன்கூட்டியே அவதானம் செலுத்துங்கோ. சொல்வழிகேட்கா விட்டால் பிறசர், சீனிவருத்தம் கொலஸ்ரோல் என டாக்குத்தர் மாரிடம் மாறி..மாறிச் செல்ல வேண்டியதுதானே...

ஊருக்குச் சென்று அங்கு பந்தா காட்டி, தண்ணியடித்து கூழும் கும்மாளமும் அடிப்பவர்கள் தமது பிள்ளைகளுக்குச் சாமத்தியச் சடங்கு கலியாணம் என தமது சாதி, சமயம் பார்த்துச் செய்து வைத்தவர்கள்,10.20.30, 40, 50, 60, 70, 80 எனப்பிறந்தநாள் கொண்டாடுபவர்கள் பல ரகத்தினர் செய்யும் அட்டகாசங்களோ கண் கொண்டு பார்க்க முடியாது. அந்தளவுக்குக் கொண்டாட்டங்கள் களைகட்டும் என எதிர்பார்க்க வேண்டியதுதான்...

நம்மட நாட்டில பொருளாதாரப் பிரச்சனையால் பெரும் நெருக்கடி. இதனால் நாட்டைவிட்டுத் தப்பி வெளிநாடுகளுக்கு எப்ப ஓடலாம் என்று பல்லாயிரக் கணக்கானோர் படாத பாடுபடுகுதுகள் பாருங்கோ.. வேலை வெட்டி ஒன்றும் இல்லாமல் வெளிநாடுகளில் இருந்து வரும் பணங்களை நல்லாய் அனுபவிக்கும் கூட்டத்தினர் மிக அதிகம் பேர்.



அது அப்படி இருக்கையில் கடும் வெப்பம் ஏற்பட்டு நாடு முழுவதும் ஒரே அல்லோம்தான் வறுமையால் பெருந்தொகையான நமது உறவுகள் பெரும் துயரப் படுகிறார்கள் என்பது உண்மையாகும். அரசாங்கமும் பல தொண்டு நிறு வனங்களும் நல்ல பணிகளைச் செய்கிறார்கள். இவர்களை வாழ்த்த வேணும் பாருங்கோ.

இதில் என்ன செய்தி என்றால் நிவாரணத்தைக் காட்டி நம்மட ஆட்கள் பல மோசடிகளிலும் ஈடுபடுவது வெட்கக் கேடான விடயமாகும். ஏழைமக்களுக்குக் கொடுக்கும் நிவாரண உதவிகளிலும் மோசடி செய்கிறார்கள் என தகவல் இருக்குது பாருங்கோ.

அடுத்தது எழுபது வருடங்களுக்கு மேற்பட்ட கள்ளரையும் கொள்ளைக்காரரையும் லஞ்சக்காரரையும் பிடித்து மறியலில் அடைப்பதே புதிய அரசாங்கத்தின் வேலையாகிவிட்டது பாருங்கோ.. அந்தளவுக்கு நாடு சீரழிந்து கிடக்கிறது. வந்து ஆறு, ஏழு மாதம்கூட ஆகவில்லை எல்லாத்தையும் தா என்பவர்களும் அரசாங்கம் ஒன்றும் செய்யவில்லை என்பதும் கேள்வி கேட்பதும் சுலபமாகிவிட்டது. ஆனால் இந்தக் கள்ளரைப் பிடித்து அடைப்பது எவ்வளவு கடினம்பாருங்கோ..

சரி..சரி.. இனி விசயத்துக்கு வருகிறேன்.. அப்ப வெளிநாடுகளிலிருந்து படை எடுத்து தாய் தேசத்துக்குச் சென்றவர்களின் அட்டகாசமங்கள் பல பாருங்கோ.. காணி வேண்டுபவர்கள், வீடுகளை ஆடம்பரமாகக் கட்டுபவர்கள், கோவில் கோபுரங்களைப் போட்டிக்குக் கட்டி எழுப்புபவர்கள் எனப் போட்டா போட்டிக்குக்குப் பெரும் கோடிக்கணக்கான செலவில் நடக்குது.

இனி வெளிநாட்டுக்காரர்களின் படை எடுப்பால் அங்குள்ள கோவில்களில் நடைபெறும் திருவிழாக்களில் கோடிக்கணக்கான பணத்தைச் செலவழித்து திருவிழாக்கள் பூசைகள் அது இது என நடைபெறுகின்றன. ஐயர்மார்கள், குருக்கள், பூசாரிகள், மேளக்காரர்கள், சோடினை அலங்காரக்காரர்கள் என ஒரே போட்டியும் வியாபாரமாகவும் இன்று வழிபடும் ஸ்தலங்கள் மாற்றமடைந்துவிட்டன பாருங்கோ..

இப்ப தமிழகத்திலிருந்து பாட்டு, சின்னமேளம், சினிமாக்காரர்களுக்குக் கோடிக்கணக்கான பணத்தைக் கொடுத்து இறக்குமதி செய்து பொழுதைப் போக்குவதும் பாஷனாகிவிட்டது. இது மட்டுமா கேரளா, மற்றும் நமது நாட்டின் சிங்களப் பகுதிகளிலிருந்து யானைகளை வரவழைத்து திருவிழாக்கள் நடத்துவதும் பாஷன்தான்..எல்லாம் ”சந்தணம் மெத்தினால்” என்ன செய்யலாம் என்ற நிலைதான் பாருங்கோ.

இப்படியாக வகை, தொகை தெரியாமல் செலவுகள் செய்யும் பெரும் வள்ளல்கள் யாராவது நாட்டிலுள்ள வறுமைப்பட்ட பிரதேசங்களில் ஒரு தொழிற்சாலையைக்கட்டி ஏழைமக்களுக்கு தொழில் வாய்ப்பை அளிப்பதும். போரால் பாதிக்கப்பட்டு நிர்கதியாகத் தவிக்கும் முன்னாள் போராளிகள் மற்றும் கணவன்களை இழந்த பெண் தலைமைத்துவ குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த உதவுகிறார்களா. கிடைக்கவே கிடையாது.

ஒரு சிலர் சில மனிதநேய உதவிகளைச் செய்கிறார்கள் அது பாராட்டப்படவேண்டிய விடயமாகும். ஆனால் பலர் இந்தப் பக்கம் திரும்பியே பார்க்கமாட்டார்கள். தான், தனது மனைவி, பிள்ளைகள், உறவுகள் என்னும் சுயநலத்துடன் வாழ்கிறார்கள். அயலவன் ஊரவன் செத்தாலென்ன இருந்தாலென்ன என்ற நிலைதான். ஆனால் கோவிலுக்கு உதவிகேட்டால் தாராளமாக அள்ளி இறைப்பார்கள். நாங்கள் எல்லோரும் வழிபடும் கடவுள்கள் அனைவரும் உதவுக் கரங்களைத்தான் எதிர்பார்க்கின்றார்கள் இரு கரம் கூப்பி விழுந்து, விழுந்து வழிபடும் கரங்களையல்ல என்பதை நாம் சற்று புரிந்துகொள்ள வேண்டும் என இந்த மயிலனும் நினைக்கின்றான்.

வெளிநாடுகளிலும் பலர், ஊர், உறவு, பாடசாலை, கோவில், விளையாட்டு, கழகம், சங்கம் எனப்பல்வேறு சங்கங்களை உருவாக்கித் தாயகத்தக்கு ஒரு சில நற்பணிகளை மேற்கொள்வது நல்ல விடயம்பாருங்கோ... ஆனால் பல அமைப்புகள், சங்கங்கள், மன்றங்கள் இன்றும் அரசியல் தேசியம், தமிழ், விளையாட்டு, மகாநாடு, கலைவிழா அது, இது

எனப் புழைப்பு நடாத்திபுலம் பெயர்ந் தோரை மூளைச்சலவைசெய்து பணம் பறித்து உழைக்கும் கூட்டத்தினரும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

இவைமட்டுமா?.. மன்றங்கள் சங்கங்கள், கழகங்கள், கோவில்கள், அமைப்புகள் எவையும் புலம்பெயர் தேசங்களில் கணக்குக் காட்டுவது கிடையாது. இதனால் இன்று புலம்பெயர் தேசங்களில் இவைகளில் பல காணாமல் போயுள்ளன. சில நகரங்களில் பிளவுபட்டு பல சங்கங்கள் மன்றங்கள் போயிருக்கின்றன. "ஆற்றிலை போட்டாலும் அளந்து போடுதல் வேண்டும்" என்ற பொன்னான பொன்மொழியைப் பின்பற்றாததனால்தான் இத்தனை முரண்பாடுகளும் சீரழிவுகளும்தான் பாருங்கோ..

நாட்டில் இந்தக் கோடைகாலத்தில் கலியாணம், பூப்புனித நீராட்டு விழா, வீடுகுடிபுகிர்தல், ஆண்டுவிழா, கோவில் விழா, வாசிகசாலைவிழா என்று பல விழாக்கள் களைகட்டும். இதற்கும்மேலாக பழைய மாணவர்கள், நண்பர்கள், யூரிப்பர்கள், ஊரவர்கள் எனப் பல்வேறு ஒன்று கூடல்களுக்கும் குறைவிருக்காது. தண்ணியடித்து, போதைப்பொருள் உண்டு, செலவு கூடிய சாப்பாடுகள், ஆடம்பரச் செலவுகள் என ஆடம்பரக் கொண்டாட்டங்களும் கட்டுக்கடங்காத செலவில் நடைபெறும். காசைக் கரியாக்கும் சம்பவங்கள் நிவேறும் என்றுதான் இந்த மயிலன் சொல்லுவான் பாருங்கோ.

இப்படியாககப் புலம்பெயர்ந்த நாடுகளில் இருந்து சென்றவர்களும் தாயகத்தில் வசிக்கும் பலராலும் கோடைகாலத்தில் நாட்டுக்குப் பல கோடி ரூபா வருமானம் பெருகும். ஆடம்பரப் பொருட்கள், உடைகள், உ ண வு ப் பொ ரு ட் க ளி ன் வி லை அதிகரிக்கும். குடிவகைகள், மாமிச உணவுகள் அதிகமாக விலைப்படும்.

இதனால் தாயகத்தில் வாழ்வோரின் வாழ்வியலிலும் மாற்றங்கள் ஏற்படும். வெளிநாட்டவர்களைப்போல பணப்புழக்கத்துக்கும், போதை, மது, ஆடம்பரஉடை, ஆடம்பர உணவு நடுநிசிக்களியாட்டம் போன்ற பழக்கவழக்கங்களுக்கு ஆளாவார்கள். போதை, களியாட்ட நிகழ்வுகளுக்கு அடிமையாவார்கள். இதனால் கல்வி, சமூக பழங்கங்கள் , வழிபாடு, ஒழுக்க வாழ்வு, கட்டுப்பாடான வாழ்க்கை முறைகளிலிருந்து மாறுபட்டுப் பல சமூகச் சீர்கேடுகளுக்கு ஆளாகி உளவியல் ரீதியில் பல இன்னல்களைச் சந்திப்பார்கள் என்று இந்த மயிலன் கூறுகிறான்.

ஆகவே புலம்பெயர்ந்த நாடுகளிலிருந்து தாயகத்துக்குச் சென்றுவருபவர்களே!.. சற்று சிந்தியுங்கள்.., ஆடம்பரங்கள் வேண்டாம். எழைகளுக்குக் கொடுங்கள் தப்பில்லை. ஆனால் வேண்டாத செலவுகளுக்குக் கொடுக்க வேண்டாம். ஏனெனில் நீங்கள் கொடுக்கும் மிதமிஞ்சிய பணத்தால் அங்குள்ள இளைய சமுதாயம் மட்டுமல்ல முழுச் சமூகத்துக்கும் பாதிப்பு ஏற்படும் என்பதை மறந்துவிடாதீர்கள் என்று இந்த மயிலன் உங்களிடம் வாஞ்சையுடன் கேட்கிறான்.."அள்ளிக் கொடுக்க வேண்டாம் கிள்ளிக் கொடுங்கோ" அப்ப வாறன் மீண்டும் அடுத்தமுறை இன்னொரு விடயத்தோட வாறன். எல்லாரும் சுகமாய் இருங்கோ!...

## சிறுவர் குறுக்கெழுத்துப்போட்டி முடிவு

| | | | |
|---|---|---|---|
| க | ல் | வி | க |
| ரு | நா | வ | ல் |
| ம் | ய் | லை | க |
| பு | ப் | ரு | ப |

## குறுக்கெழுத்துப்போட்டி முடிவு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அ | ணு | க் | கு | ண் | டு | ஆ |
| நு | ங் | கு | ங் | ர | கு | ம் |
| ரா | கு | ங் | ர | அ | டு | ர |
| த | ணி | கு | சி | ம் | க | கா |
| பு | ம | ம | னா | ப | ட் | டி |
| ர | ம் | ம் | ன் | ண | ர் | க |
| ம் | செ | பு | அ | ர | ச | ன் |

## சுடோக்கோ போட்டி முடிவு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 7 | 9 | 2 | 3 | 6 | 5 | 8 | 4 |
| 5 | 6 | 8 | 9 | 4 | 1 | 7 | 2 | 3 |
| 2 | 3 | 4 | 5 | 8 | 7 | 1 | 9 | 6 |
| 4 | 9 | 2 | 6 | 5 | 8 | 3 | 7 | 1 |
| 8 | 1 | 3 | 7 | 2 | 4 | 6 | 5 | 9 |
| 7 | 5 | 6 | 3 | 1 | 9 | 8 | 4 | 2 |
| 3 | 8 | 1 | 4 | 7 | 2 | 9 | 6 | 5 |
| 9 | 2 | 7 | 1 | 6 | 5 | 4 | 3 | 8 |
| 6 | 4 | 5 | 8 | 9 | 3 | 2 | 1 | 7 |







# ஐரோப்பிய பெண்கள் கால்பந்தாட்ட போட்டி - 2025

ஐரோப்பிய பெண்கள் கால்பந்தாட்டப் போட்டி "ஐரோப்பிய கால்பந்து சங்கங்களின் ஒன்றியத்தின் " (UEFA European Football Championship) கட்டுப்பாட்டில் ஐரோப்பிய தேசிய பெண்கள் அணிகளுக்கிடையே நடாத்தப்படும் போட்டி ஆகும்.

1984ஆம் ஆண்டு முதல் 1997ஆம் ஆண்டு வரை இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறையும், 1997ஆம் ஆண்டில் இருந்து நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறையும் இப்போட்டி நடைபெறுகின்றது. அதுவும் ஆண்களின் கால்பந்தாட்டப் போட்டி நடைபெற்ற அடுத்த ஆண்டு நடைபெறுவது வழக்கமாக உள்ளது.

இவ்வாறு கடந்த ஆண்டு 14ஆம் திகதி ஆனி மாதம் முதல் 14ஆம் திகதி ஆடி மாதம் வரை ஜேர்மனியில் ஐரோப்பிய ஆண்கள் கால்பந்தாட்டப் போட்டி வெகு சிறப்பாக நடைபெற்றது. அப்போட்டியில் இறுதி சுற்றில் ஸ்பானியா (Spain) மற்றும் இங்கிலாந்து (England)போட்டியிட்டு, ஸ்பானியா வெற்றிபெற்றது.

இதனை தொடர்ந்து இவ்வருடம் ஆனி மாதம் 2ஆம் திகதி முதல் ஆனி மாதம் 27ஆம் திகதி வரை 14 வது ஐரோப்பிய பெண்கள் கால்பந்தாட்டப் போட்டி சுவிட்சர்லாந்தில் (Swiss) நடைபெறவுள்ளது. இப்போட்டியானது Basel, Bern, Genf, Luzern, Sion,Thun, St.Galle மற்றும் Zürich என 8 நகரங்களில் 31 போட்டிகளாக நடைபெறவுள்ளன. இம்முறை தொடக்கப் போட்டியும், இறுதிப் போட்டியும் Basel நகரில் நடைபெறவுள்ளன..

இவ்வருடப் போட்டியின் அதிகாரபூர்வமான சின்னம் ஒரு நாய்க்குட்டி (Saint Bernard Puppy) ஆகும். இதற்கு மட்லி (Maddli) என்னும் பெயர்

சூட்டப்பட்டுள்ளது. இந்த சின்னத்தின் பெயர் பெண்கள் கால்பந்தாட்ட முன்னோடிகளில் ஒருவராக கருதப்படும் சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த மட்லேன் பொல் (Madeleine Boll) என்பவரை நினைவுகூற வைக்கப்பட்டுள்ளது. இவர் தான் சுவிட்சர்லாந்தின் முதல் கால்பந்து லைசன்ஸ் பெண் வீராங்கனை (first licensed woman) ஆவார்.

எமது ஜேர்மனி பெண்கள் கால்பந்தாட்ட வீராங்கனைகளும் 16 அணிகளில் ஒன்றாக போட்டியிட இருக்கிறார்கள். இவர்கள் C அணியில் (Group C) Poland, Denmark மற்றும் Sweden உடன் முதலில் ஆனி மாதம் 4ஆம், 8ஆம் மற்றும் 12ஆம் திகதிகளில் போட்டியிடுவார்கள் (Groupstage). இதில் வெற்றிபெறும் 2 அணிகள் இறுதி சுற்றுகளில் (round of 16 quarterfinals> semifinals, final) பங்கேற்பார்கள். இது வரை நடைபெற்ற 13 ஐரோப்பிய பெண்கள் கால்பந்தாட்டப் போட்டிகளில் எமது ஜேர்மன் அணி 7 தடவை வெற்றி பெற்று இருப்பது ஓர் குறிப்பிட்டத்தக்க விடயமாகும்.

இதுவரை இடம்பெற்ற போட்டிகளில் வெற்றிபெற்ற நாடுகள்..

| | | |
|---|---|---|
| 2022 | இங்கிலாந்து - யேர்மனி | 2 - 1 |
| 2017 | நெதர்லாந்து - டென்மார்க் | 4 - 2 |
| 2013 | யேர்மனி - நோர்வே | 1 - 0 |
| 2009 | யேர்மனி - இங்கிலாந்து | 6 - 2 |
| 2005 | யேர்மனி - நோர்வே | 3 - 1 |
| 2001 | யேர்மனி - சுவீடன் | 1 - 0 |
| 1997 | யேர்மனி - இத்தாலி | 2 - 0 |
| 1995 | யேர்மனி - சுவீடன் | 3 - 2 |
| 1993 | நோர்வே - இத்தாலி | 1 - 0 |
| 1991 | டென்மார்க் - இத்தாலி | 2 - 1 |
| 1989 | யேர்மனி - நோர்வே | 4 - 0 |
| 1987 | நோர்வே - சுவீடன் | 2 - 1 |
| 1985 | சுவீடன் - இங்கிலாந்து | 4 - 3 |

இதுவரை இடம்பெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற நாடுகளை நோக்கினால் 13 போட்டிகளில் யேர்மனிய அணிதான் 7 தடவைகள் வெற்றி பெற்றிருக்கின்றது. அதன் விபரம் கீழே

| | |
|---|---|
| யேர்மனி | - 7 தடவைகள் |
| நோர்வே | - 2 தடவைகள் |
| இங்கிலாந்து | - 1 தடவை |
| நெதர்லாந்து | - 1 தடவை |
| சுவீடன் | - 1 தடவை |
| டென்மார்க் | - 1 தடவை |

இப்போட்டியானது வெறும் கால்பந்து விளையாட்டுப் போட்டி அல்ல. இது உலகளவில் பெண்களின் சமத்துவ உரிமைக்கும், முக்கியமான ஒன்றாக கருதப்படுகின்றது. இந்நிகழ்ச்சி பெண்கள் தங்களின் திறமை மற்றும் வீரத்தை சமூகத்தினால் வைக்கப்படும் தடைகளை தாண்டி அவர்கள் முன்நோக்கிப் பயணிக்கக்கூடிய வழியாகவும் அமைகின்றது. அந்த வகையில் உலகமக்கள் அனைவரும் பெண்கள் ஐரோப்பிய கால்பந்தாட்டப் போட்டிகளின் முடிவுகளை மிகுத்த ஆவலுடன் எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

**செல்வி சாமினா சிவதாசன் – எசன் ஜேர்மனி**




UEFA – Champions League – Foot ball Finals- 2025

**முதற்தடவையாக வெற்றிபெற்ற பிரான்ஸ் சென்ற் ஜேர்மைன் கழகம்**
**ஐரோப்பிய கழகங்களின் உதைபந்துப் போட்டி 2024-2025**
**70.000 ரசிகர்கள் கண்டுகளித்த யோர்மனி விளையாட்டரங்கு**

31.05.2025 அன்று ஐரோப்பிய நாடுகளின் உதைபந்தாட்டக் கழகங்களுக்கிடையே நடைபெற்ற இறுதிப்போட்டியில் இத்தாலி Inter Mailand கழகமும் பிரான்ஸ் - பாரிஸ் Paris Saint Germain கழகமும் மிகவும் விறுவிறுப்பாக மோதிக்கொண்டதில் 5 - 0 என்ற கோல் கணக்கில் பாரிஸ் சென்ற் ஜேர்மைன் கழகம் வெற்றிவாகை சூடி வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டது. இந்தக் கிண்ண வரலாற்றில் பாரிஸ் கழகம் வெற்றி பெற்றது இது முதற்தடவை என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

70 வருடங்கள் கடந்து 31.5.2025 அன்று யோர்மனி பயன் முன்ஸன் விளையாட்டரங்கில் 70.000 பேர்வரையிலான ரசிகர்கள் கண்டுகளிக்க உலகம் முழுவதும் கோடிக்கணக்கான விளையாட்டு ரசிகர்கள் தொலைக்காட்சிகளில் கண்டு மகிழ்ந்தனர்.

1955-1956 ஆண்டளவில் ஐரோப்பிய கழகவெற்றிக்கிண்ணப் போட்டியாக உருவெடுத்து 1992-1993ம் ஆண்டுதான் ஐரோப்பிய நாடுகளின் கழகங்களுக்கிடையிலான போட்டியாக மாற்றமடைந்தது. 2024-2025 போட்டிகளாக ஐரோப்பிய நாடுகளிலுள்ள முன்னணிக்கழகங்கள் தெரிவுப்போட்டிகள் இடம்பெற்று (09.07.2024 - 31.05.2025) 36 கழகங்கள் தெரிவாகி பின்பு குழுக்களாக மோதிக் கொண்டுதான் இறுதிப்போட்டிக்கு இந்த அணிகள் தெரிவாகின.

இந்த 2024-2025 போட்டிபற்றிப் பார்த்தால் 189 போட்டிகள் இடம்பெற்றன. 618 கோல்கள் அடிக்கப்பட்டன. கூடுதலான கோல்களை அடித்த தனிநபர் என்று பார்த்தால் யோர்மனி டோட்முண்ட் அணியின் வீரரும் பார்ஸலோனா அணி வீரரும் 13 கோல்களை அடித்து முன்னணியில் வந்தனர். விளையாட்டில் 693 மஞ்சள் காட், 14 மஞ்சள்-சிவப்புக்காட், 17 சிவப்புக்காட் என கொடுக்கப்பட்டன.

சற்று வரலாற்றைப் பார்த்தால் மொத்தமாக 36 தடவைகள் நடைபெற்ற இப்போட்டியில் ஸ்பெயின் றியல்மட்றிட் அணி 15 தடவைகள் வெற்றி பெற்று முதலிடம் பிடித்துள்ளது. 2வது இடத்தில இத்தாலியின் மைலண்ட் அணி 7 வெற்றிகளும் 3வது இடத்தில் யோர்மனி பயான் அணியும் பிரித்தானியா லிவர்பூல் அணியும் தலா 6 வெற்றிகளுடன் உள்ளன.



# ஒரே ஒரு முறைதான்!...

ஒருமுறை குற்றாலத்திற்கு வந்திருந்த காமராஜர் அருவியில் குளிக்க ஆசைப்பட்டார். அதன் பேரில் காவல்துறையினர் சிலர் முன்னதாக அருவிக் கரைக்குச் சென்றனர். அடுத்த சில நிமிடங்களில், காமராஜர் அருவியை நோக்கிச் சென்றார். அங்கே அவர் கண்ட காட்சி விசித்திரமாக இருந்தது.

குளித்தும் குளிக்காமலும் இருந்த பொதுமக்கள் - அருவிக்கரையில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டு - பாதையின் ஓரமாக நிறுத்தப்பட்டிருந்தனர். ஒதுங்கி நின்றவர்களைப் பார்த்ததும் விஷயம் விளங்கிற்று அவருக்கு. அங்கிருந்த காவலரை பார்த்து "இதுக்குத்தான் நீ எனக்கு முன்ன ஓடி வந்தியா... இவங்களோட நான் சேந்து குளிச்சா ஒனக்கு என்னான்னே?" என்று சத்தம் போட்டுவிட்டு,

ஒதுங்கி நின்ற மக்களை பார்த்து, "இப்படி ஒதுங்கி நின்னா எப்படின்னேன்?.. வாங்க எல்லாரும் சேந்து குளிப்போம்".. என அன்புடன் அழைத்தார்.

உண்மையான ஏழைப் பங்காளனை நேரில் பார்த்த களிப்பில், மக்கள் ஆரவாரத்துடன் அருவியில் குளித்தனர்... அன்று குற்றால அருவியே, ஓ.. என்று மகிழ்ச்சியுடன் ஆர்ப்பரித்ததாம்..

அதற்கு முன்னும் பின்னும் எந்த முதலமைச்சரும் மக்களுடன் சேர்ந்து குளித்ததாக வரலாறு இல்லை...

## இஸ்ரேல் - ஈரான் அணு, ஆயுத, படைப்பலம்...




## உலக நாடுகளில் மிக அதிகமான அணுசக்தி, போர்க்குண்டுகளை வைத்திருக்கும் நாடுகள்...






# இஸ்ரேல் - ஈரான் யுத்தம்

3 வது உலகப்போர் வந்துவிடும் என உலகம் எதிர்பார்த்த வேளையில் இரு நாடுகளுக்குமிடையில் சமாதானம் எட்டப்பட்டிருப்பது உலகம் வாழ் மக்களுக்குச் சிறு ஆறுதலாக உள்ளது. இருந்தும் இரு நாடுகளுக்குமிடையே "நீறு பூர்த்த நெருப்பாக" பகமை காணப்படுகின்றது. பதினைந்து நாட்கள் வரை நீடித்த போரால் ஆயிரக்கணக்கான மக்கள் படைத்தரப்பினர் கொல்லப்பட்டனர். கட்டிடங்கள், குடியிருப்புகள் பலத்த சேதம் அடைந்திருக்கின்றன.

காஸாவில் மக்கள்படும் துன்ப துயரங்களை இஸ்ரேல்நாடு நன்கு உணர்ந்திருக்கும். தொடர்ச்சியாக இஸரேல் காஸா பலஸ்தீன மக்களை இனவழிப்பு செய்துவருவதை உலக வல்லரசு நாடுகள்கூடப் பார்த்துக்கொண்டு இருக்கின்றன. ஐக்கியநாடுகள் சபை மற்றும் மனிதஉரிமைகள் சபை என்பனவும் கையாலாகாத நிலையியிலேயே இருந்து வருகின்றன.

இப்படியான போர்களால் கொல்லப்படுவது அப்பாவிப் பொதுமக்கள்தான்.. ஆகவே உலகில் போர் வேண்டாம்..பசிபட்டினி வேண்டாம். சமாதானம் தேசங்கள் எங்கும் கிடைக்க வேண்டும்!..

# மனதுக்கு இன்பம் தருவது சுற்றுலா!...

(பயணக்கட்டுரை) திருமதி கலைவாணி ஏகானந்தராசா





சென்றஇதழ் தொடர்ச்சி........

ஆஸ்திரேலியா பூமியில் ஆறாவது பெரிய நாடாகும். ஏழரை மில்லியன் சதுர கிலோமீட்டர் நிலப்பரப்பைக் கொண்டது.ஆஸ்திரேலியாவின் வினோதமான காலநிலைபற்றி கூற மறந்துவிட்டேன்.அதிகாலை எப்பொழுதும் மெல்லிய பனிக்குளிர் இருக்கும் .அது எமக்கு பெரிய குளிராகத்தெரிவதில்லை. ஆனால் அங்கு வாழ்பவர்கள் காலையில் மெல்லியதாக குளிர் பாதுகாப்பு உடைகளை அணிந்திருப்பார்கள். மதியமாக வெய்யில் ஏறிக்கொண்டுபோகும்.

30 பாகை வரை செல்லும் .நாம் அங்கு நின்றபோது 30 இலிருந்து 40 பாகை வரை வெப்பம் இருந்தது. ஆனால் வெப்பம் கூடியநாட்களில் மாலை நிச்சயமாக மழையை எதிர் பார்க்கலாம். உடன் வெப்பநிலை குறைந்துவிடும். சிட்னியின் காலநிலை எப்போதும் மாறிக்கொண்டே இருக்கும். ஆஸ்திரேலியாவின் வித்தியாசமான காலநிலை வெப்பநிலை மற்றும் ஈரப்பதம் தாவரங்களுக்கு ஏற்ற சுவாத்தியமாக அமைகிறது. அதனா ல் பார்க்குமிடமெல்லாம் பசுமையாக காணப்படும்.

யாழ்ப்பாணத்தில் நாம் பார்த்த மரங்கள் செடிகளையெல்லாம் அங்கு பார்க்கக் கூடியதாக இருந்தன. மரக்கறிவகைகள் பழமரங்கள் யாவற்றையும் அங்கு காணக்கூடியதாக இருந்தன. என் சிநேகிதியின் வீட்டுத்தோட்டத்தை பார்த்து என் கணவர் மிகவும் சந்தோஷத்துடன் ஓடி ஓடி படம் எடுத்தார். வீட்டுத்தோட்டங்களில் வாழை, மா, முருங்கை, தேசி, கொய்யா போன்ற மரங்களுடன் வெண்டி, கத்தரி, பாவை, புடோல்,பயிற்றை,,மிளகாய்,,கறிவேப் பிலைச்செடி போன்றவை நன்றாக விளைந்திருந்தன. அனேகமான வீடுகள் எமது தாயகத்தில் போல பெரிய நிலப்பரப்புகளுடன் கூடிய தனித்தனி வீடுக-ளாகவே காணப்பட்டன. அவை செயற்கை பதார்தங்களால் செய்யப்பட்ட

பொருத்து வீடுகளாகவே காணப்பட்டன. பெரிய கட்டடங்கள் தொடர்மாடிகள் தற்போது செங்கல் கருங்கல் கொண்டு சீமெந்து கட்டிடங்களாக உருவாகி வருவதையும் காணக்கூடியதாக இருந்தது.

ஆஸ்திரேலியா கனிமப்பொருட்கள் கொண்ட ஒரு விவசாய நாடு. பெரும்பாலான நிலப்பரப்பில் விவசாயம் செய்கின்றனர். ஆடு, மாடு கால்நடை வளர்ப்பில் கவனம் செலுத்துவதால் பால் இறைச்சி தோல் பாதணி ரத்தினகற்கள் நகைகள் என்பவற்றுடன் கடல் உணவுகளையும் மற்றும் இயந்திரங்கள் மின்சாரப் பொருட்களையும் உற்பத்தி செய்து தன்னிறைவு காண்கிறது. நாம் ஒரு நாள் முந்திரிகை செய்கை செய்யும் இடத்துக்கு சென்றிருந்தோம்.(Huntervalli) என்றழைக்கப்படும் பள்ளத்தாக்குகள் கொண்ட இடத்தில் பெரும் வயல்களும் பல ஏக்கர் நிலப்பரப்பில் முந்திரிச் செடித் தோட்டங்களும் நிறைய காணக்கூடியதாக இருந்தன. அத்துடன் பழரசம் தயார்படுத்தும் தொழிற்சாலைகளும் காணப்பட்டன. எமக்கு தேவையான பழங்களை நாமே வெட்டிஎடுத்தோம் அவற்றை வெட்டும்போது பல இன பழங்களை சுவைத்தோம். வேண்டிய அளவு பழங்களை உண்டு மகிழ்ந்தோம். வீட்டுக்கு எடுத்துவந்த பழங்களுக்கு மட்டும் பணம் கொடுத்தால்போதும்.

சற்று மலைப் பிரதேசமாக இருந்ததால் இயற்கை அழகை ரசித்தோம். அன்று வெள்ளிக்கிழமை. சிட்னியில் அமைந்துள்ள முருகன் ஆலயத்துக்கு சென்றோம். வழமையாகவே மக்கள் கூட்டம் அதிகமாக இருக்குமாம். வெள்ளிக்கிழமை மிக அதிகமான இலங்கைத் தமிழரும் இந்திய நாட்டுமக்களுமாக கோவில் நிறைந்திருந்தது. அதைவிட அதிகமான மக்கள் உணவுச்சாலையில் நிறைந்து நின்றனர். ஒரு நாளில் ஆயிரம் உணவுக்கான டோக்கன்கள் விற்பனையாவதை பார்த்து வியந்தோம். உண்மையை சொன்னால் உணவின் விலையோ மிக குறைவு. தரமான சுவையான உணவுங்கூட.

தோசை, இட்லி, பூரி, சப்பாத்தி மேலும் வடை, சமோசா, போன்ற சிற்றுண்டி வகைகளும் அத்துடன் மசாலா தேநீர், கோப்பி, சர்பத் என்று விதம் விதமான இந்தியத் தயாரிப்புகள். மிக ரசித்து உண்டோம். மீண்டும் மீண்டுமாய் பலதடவைகள் சென்றோம். அடுத்த நாளில் மிக அற்புதமான இடத்துக்கு சென்றோம். சிட்னியில் மிக பெயர்போன சுற்றுலாத் தலம். (Katoomba Skyline and Blue Mountain)காட்டோம்பா என்ற இடத்தில் அழகான பெரிய நீர்வீழ்ச்சி (கட்டும்பா நீர்வீழ்ச்சி) ஒன்று உள்ளது. ( Blue Mountain) இருக்கும் பிரதேசம் 2, 680 கிலோ மீற்றர் பரப்பளவாகும்.

இங்கு 1000 வருடங்களுக்கு முன்னர் (Oborigines) ஆபரிஜீனஸ் என அழைக்கப்பட்ட பழங்குடி இனத்தவர் கரி அகழ்வு செய்து ஏற்றுமதி செய்ததாக சரித்திரம். மிகவும் ரசிக்கக்கூடியவகையில் உயர்ந்த மலை களும் அதனை சுற்றி நீலமேகமும் அதன் மேற்பகுதியில் செயற்கையாக வரைந்ததுபோல மெல்லிய நீலமேகமும் புகை மூட்டங்களுமாக அழகா ன வர்ணனையை அங்கு ரசித்தோம்.மிக முக்கியமாக மூன்று சகோதரிகள் (Three sisters) என்று அழைக்கப்படும் மூன்றுமலைகள் அந்த இடத்தில் பிரபல்யமானவை. பழங்குடியினர் அவற்றுக்கு பெயரும் வைத்துள்ளனர். (Meehni, Gunnedoo, Jasmisan) மேகினி, குணாடு, ஜஸ்மி என்றழைக்கப்படும். இந்த மூன்று சகோதரிகளுக்கும் ஒரு சுவரஷ்யமான கதை உண்டு.

**அடுத்த இதழில் தொடரும்........**

## மனித உடல் பற்றிய பொது அறிவு..

01- மனிதன் ஒரு அடி எடுத்து வைக்கச் சமார் 200 தசைகள் தேவைப்படுகின்றன.
02- நாம் சுவாசிக்கும் ஒட்ஸிசனில்20 சதவீதம் நம் மூளைக்குச் செல்கின்றது.
03- நமது உடல் எடை 14 சதவீதம் எலும்புகளால் ஆனது.
04- நமது உடலிலுள்ள மின்சாரத்தின் அளவு 25 வாட்.
05- நமது இதயம் ஒரு நாளைக்கு 1.03.689 முறை துடிக்கின்றது.
06- நமது நாக்கில் 3.000 சுவை அறியும் செல்கள் உள்ளன.
07- மனித மூளையில் 6 கிராம் தாமிரம் (இரசாயனப் பதார்த்தம்) உள்ளது.
08- மனித முகத்தில் 14 எலும்புகள் உள்ளன.
09- நுரையீரல் ஒரு நாளைக்கு 23.040 முறை சுவாசத்தை உள்ளெடுத்து வெளியே செலுத்தும்
10- நமது உடலில் உள்ள நரம்புகளின் மொத்த நீளம் சுமார் 72 மீட்டர்.
11- நமது இரத்தம் ஒரு நாளில் 30 கோடி கிலோமீட்டர் பயணம் செய்கின்றது.
12- ஒவ்வொரு சிறுநீரகமும் 1 மில்லியன் வடிகட்டிகளைக் கொண்டுள்ளன.

## தினமும் உடற்பயிற்சி செய்வதால் பல நன்மைகள்....

01- எடை (நிறை) குறைக்க உதவுகின்றது.
02- நுரையீரல் திறனை அதிகரிக்கின்றது
03- இதய ஆரோக்கியத்தை மேம்படுத்துகின்றது.
04 நாட்பட்ட நோய்களை குறைக்கின்றது.
05- மனநிலையை மேம்படுத்துகின்றது.
06- புற்றுநோய் வராமல் தடுக்கின்றது.
07- வயதான காலத்தில் இயலாமையைத் தடுக்கின்றது.
08- முதுமையைத் தாமதப்படுத்துகின்றது.
09- சுருள் சரை நாளங்களை மேம்படுத்தும்.
10- இரத்த அழுத்தத்தைக் குறைக்கும்.
11- நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும்.
12- பெண்களுக்குப் பக்கவாதம் ஏற்படும் ஆபத்தைக் குறைக்கின்றது.
13- செரிமானத்தைத் துரிதப்படுத்துகின்றது.
14- சர்க்கரை நோயின் தாக்கத்தைக் குறைக்கின்றது.
15- சில நோய்களின் ஆபத்தைக் குறைக்கின்றது.

## ஓர் மனிதன் உயிரிழந்தால் உயிரோடு இருக்கும் உறுப்புகள்....

01- கண் - 30 நிமிடங்கள்

02- மூளை - 10 நிமிடங்கள்

03- கால் - 4 மணித்தியாலங்கள்

04- தசை - 5 நாட்கள்

06- இதயம் - 4 - 6 மணித்தியாலங்கள்

07- நுரையீரல் - 4 - 6 மணித்தியாலங்கள்

08- கல்லீரல் - 8 - 12 மணித்தியாலங்கள்

09- கணையம் - 24 - 36 மணித்தியாலங்கள்

10- சிறுநீரகம் - 24 - 35 மணித்தியாலங்கள்

## முதுமையிலும் இளமையாக வாழ!..

அ - அன்றாடம் உடற் பயிற்சி செய்.

ஆ - ஆசைப்பட்டது எல்லாவற்றையும் உண்ணாதே.

இ - இலைக்கறி வகைகளை அதிகமாக உண்.

ஈ - ஈரழுத்தப் பல் தேய், நாக்கைச் சுத்தம் செய்.

உ - உப்பு, காரம் அதிகம் உண்ணாதே.

ஊ - ஊளைச் சதையை குறைத்துவிடு.

எ - எண்ணெய்ப் பண்டம் தவிர்த்துக்கொள்.

ஏ - ஏழைபோல என்றும் உண்ணப் பழகு.

ஐ - ஐம்பது நெருங்கினால் இதயத்தைக் கவனி.

ஒ - ஒழுக்கம் பேணி வாழ்ந்துகொள்.

ஓ - ஓயாத பேச்சைக் குறைத்துவிடு

ஔ- ஔவை வயதானாலும் இளமையை நினை.

ஃ - எ.்.கு போல மன உறுதி கொள்.



# எஸ். கே. காசிலிங்கம் அவர்களின் அமுதவிழா..!

ஈழத்திலும் ஐரோப்பாவிலும் நீண்ட காலம் பத்திரிகைத் துறையில் பணிபுரிந்த, மூத்த பத்திரிகையாளர் “ஈழநாடு” எஸ். கே. காசிலிங்கம் அவர்களின் அமுதவிழா பாரிஸ் மாநகரில் கடந்த மாதம் 25 -ம் திகதி ஞாயிற்றுக்கிழமை (25 - 05 - 2025) மாலை சிறப்பாக நடைபெற்றது.
பிரான்ஸ் நாட்டில் வாழும் மூத்த எழுத்தாளர் வி. ரி. இளங்கோவன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், கலை இலக்கியப் பத்திரிகைத் துறையினர், சமூக நிறுவனங்களின் பிரிதிநிதிகளெனப் பெருந்தொகையானோர் குடும்பத்துடன் கலந்துகொண்டனர்.

பிரித்தானியா, சுவிஸ், ஜேர்மனி, கனடா ஆகிய நாடுகளிலிருந்தும் விழா நாயகனின் உறவினர்கள், நண்பர்கள் வருகைதந்து சிறப்பித்தனர்.
சுவிஸ் - லவ்சான் நகரசபையின் மூத்த உறுப்பினரும், “குத்துவிளக்கு” திரைப்பட நாயகனுமான தம்பிப்பிள்ளை நமசிவாயம், மொழிபெயர்ப்பாளர் நிஷா பீரிஸ், எழுத்தாளர் முகுந்தன், நாடக நேசர் எம். அரியநாயகம், மனித உரிமைச் செயற்பாட்டாளர் ச. வி. கிருபாகரன், பத்திரிகையாளர் என். கே. துரைசிங்கம், எஸ். சஸ்பாநிதி, நடிகர் கே. பி. லோகதாஸ், “தமிழாலயம்” சி. பாலச்சந்திரன், செ. ஸ்ரீபாஸ்கரன், மஞ்சுளா சுந்தரலிங்கம் ஆகியோருட்படப் பல சமூக நிறுவனங்களின் பிரதிநிதிகள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் வாழ்த்துரைகளை வழங்கினர்.

வெளிநாடுகளிலிருந்து பத்திரிகைத்துறை நண்பர்கள் பலர் காணொளி மூலம் வழங்கிய வாழ்த்துரைகளும் காண்பிக்கப்பட்டது.

கலை இலக்கியப் பத்திரிகைத்துறையினர், நண்பர்கள் வழங்கிய கட்டுரைகள், படங்கள் அடங்கிய, அதிக பக்கங்கள் கொண்ட, அழகிய அமுதவிழா மலரும் வெளியிடப்பட்டது.

அமுதவிழா மலரை விழாத் தலைவர் வி. ரி. இளங்கோவன் வெளியிடச் சிறப்புப் பிரதிகளை த. நமசிவாயம், இரா. சிறிதரன், சி. பாலச்சந்திரன், இரா. குணபாலன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

கவியரங்கம், வயலின் கச்சேரி, நடன நிகழ்ச்சி ஆகியனவும் விழாவில் இடம்பெற்றன.

உலகத் தமிழ்க் கலையகம் ஒழுங்குசெய்த இவ்விழாவினை ஊடகவியலாளர் எஸ். கே. ராஜன் தொகுத்து வழங்கினார்.

**- ஆனந்தி..**










# 1983 யூலை 23 கலவரம்...

**- வேதநாயகன் தபேந்திரன் -**

**எழுத்தாளர் - இலங்கை**

1983 யூலை 23 இல் இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான இனவழிப்பு நாடு முழுவதும் ஆரம்பித்தாக சமூக வலைத் தளங்களில் பரவலாகப் பதிவிடப்படுகிறது.

அது தவறு.

யூலை 24 முதல் 31 ஆம் திகதி வரை தான் நடந்தது.

1983 யூலை 23 சனிக்கிழமையன்று இரவு யாழ் திருநெல்வேலி தபால்பெட்டிச் சந்தியில் கண்ணிவெடித் தாக்குதல் நடத்தப்பட்டது.

லெப்ரினன்ட் வாஸ் குணவர்த்தனவுடன் மேலும் 12 படையினர் கண்ணிவெடியில் அகப்பட்டும் ,விடுதலைப் புலிகளால் துப்பாக்கியால் சுடப்பட்டும் இறந்து போனார்கள்.

ஒரேயொரு படைவீரன் தப்பிச் சென்று இ.போ.ச. கோண்டாவில் டிப்போ வளாகத்துக்குச் சென்று தொடர்பை ஏற்படுத்திச் சாட்சியாகத் தப்பினார்.

அடுத்த நாள் 24 ஆம் திகதி திருநெல்வேலிப் பிரதேசத்திலும் ஆங்காங்கே சில இடங்களிலும் 51 பேர் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

கொல்லப்பட்ட 13 படைவீரர்களும் நாட்டின் பல பகுதிகளைச் சேர்ந்தவர்கள். ஆனாலும் ஜே.ஆர். அரசாங்கம் கொழும்பு பொரளையில் ஒன்றாக இறுதிக் கிரியைகளை 24 ஆம் திகதி செய்யத் திட்டமிட்டதே இனஅழிப்புக்கான ஆயத்தம் காரணமாகவே.

படையினரின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்காக வன்முறைகளைச் செய்யக் கூடிய காடையர்கள் கொண்டுவரப்பட்டார்கள்.

24 ஆம் திகதி எசல பௌர்ணமி நாள். அன்று கௌதம புத்தருக்காக சில் அனுஸ்டானங்களைச் செய்தார்கள்.

அதே வேளை பொரளை கனத்தை மயானத்தில் 13 படையினரது தகனக் கிரியை முடிய தமிழர்களுக்கெதிரான இனவழிப்பு அரங்கேறத் தொடங்கியது.

அப்போது ருத்திரா ராஜசிங்கம் எனும் தமிழர் தான் பொலிஸ்மா அதிபராக இருந்தவர். ஆனால் அவரால் ஒன்றுமே செய்யமுடியாமல் பொய்விட்டது...

அவர் நிலைமையின் விபரீதத்தை உணர்ந்து ஜனாதிபதி ஜே.ஆரின் வதிவிடத்திற்கு நேரே சென்று ஊரடங்குச் சட்டம் பிரகடனம் செய்து நிலைமையைக் கட்டுப் பாட்டினுள் கொண்டுவர உதவி கேட்டார். ஜே.ஆரும் முதல்வன் படத்தில் வரும் ரகுவரன் போலவே நடந்து கொண்டார்.நாடெங்கும் தமிழர்களுக்கு எதிராகத் திட்டமிட்ட இனவழிப்புகள் நடைபெற்றது.

சிறில் மத்தியூ, காமினி திசாநாயக்க ஆகியோர் பிரதான சூத்திரதாரிகளாக நின்றார்கள்.யூலை 25, 27 ஆகிய திகதிகளில் கொழும்பு வெலிக்கடைச் சிறையில் தமிழ் அரசியல் கைதிகள் கொடூரமாகக் கொல்லப்பட்டார்கள். அவர்கள் சிறையை விட்டு கொழும்பின் பெரு வீதிகளில் துரத்தித் துரத்திக் கொல்லப்பட்டதாகவும் நம்பத்தக்க தகவல்கள் உள்ளது.

குட்டிமணி,ஜெகன், தங்கத்துரைக்கு மரண தண்டனை தீர்ப்பு வழங்கிய போது இறுதி ஆசை என்னவென்று கேட்கப்பட்டது. அப்போது குட்டிமணி தனது கண்களைத் தமிழ் மகன் ஒருவனுக்குத் தானமாக வழங்குங்கள்.மலரப் போகும் தமிழீழத்தை அதனூடாகப் பார்ப்பேன் என்றார்.அதனால் அவரது கண்கள் தோண்டப்பட்டுக் கொல்லப்பட்டதாகவும் கூறுகின்றார்கள்.

இந்தப் படுகொலையின் சாட்சியாக டக்ளஸ் தேவானந்தா தற்போதும் உள்ளார். இலங்கையில் தமிழர்களுக்கெதிரான இனவழிப்பு நடந்த போது 28 ஆம் திகதி இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி தனது வெளிவிவகார அமைச்சர் பி.வி.நரசிம்மராவைக் கொழும்புக்கு அனுப்பி வைத்து எச்சரித்தார்.

ஆனாலும் யூலை 30, 31 ஆம் திகதிகளில் தான் இனவழிப்பு நின்றது. இக் காலப்பகுதியில் ஏறத்தாழ 4000 தமிழர்கள் கொல்லப்பட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது. 2500 வியாபாரத் தலங்கள் ,தொழிற்சாலைகள் ,பெட்டிக்கடைகள் அழிக்கப்பட்டதாகவும் மதிப்பீடு உள்ளது.

இனஅழிப்பு திருகோணமலை, பேராதனை போன்ற தமிழர் சிங்களவருடன் கலந்து வாழும் இடங்களிலும் நடந்தது. யூலை 23 ஆம் திகதி கண்ணிவெடித் தாக்குதலின் பின்னரான மோதலில் இறந்த செல்லக்கிளி அம்மானின் உடல் இரவு நேரமொன்றில் நீர்வேலியிலிருந்து கைதடி வரும் தரவைப் பாதையில் புதைக்கப்பட்டு வீரவணக்கம் செலுத்தப்பட்டதாக எங்கோ வாசித்த ஞாபகமும் உள்ளது.

1983 யூலை இனக் கலவரமென எழுதாதீர்கள். கதைக்காதீர்கள்.இனஅழிப்பு என்றே எழுதுங்கள். கலவரமென்றால் இருபகுதியும் மோதிக் கொள்ள வேண்டும். ஆனால் இங்கு தமிழினம் கையாலாகாத நிலைமையில் நிற்க அழிக்கப்பட்டார்கள். ஒன்று மட்டும் புரிகிறது பல்லின சமூக அமைப்பு உள்ளதாக இந்த அழகான நாட்டைக் கட்டியெழுப்பாமல் சிங்களவர்கள் தொடர்ந்து சீரழித்துக் கொண்டே இருக்கப் போகிறார்கள். தமது இனவெறிக்காக நாட்டை நாசமாக்கிக் கொண்டேயிருக்கிறார்கள்.

**'நமோ நமோ தாயே நம் சிறிலங்கா'...** ......

# தாயகத்தில் காணி வாங்குவோர் கவனத்திற்கு!...

## - வேதநாயகன் தபேந்திரன் - எழுத்தாளர் - இலங்கை

வெளிநாட்டிலிருந்து தர்ம நோக்கத்திற்காகத் தொழில்துறையைத் தொடங்குவதற்கு வந்த நண்பர்களுக்கு உதவியதனால் பெற்ற பட்டறிவைப் பகிர்கிறேன்.

01. பரம்பரை உறுதிக் காணியைப் பெறுவது மிக நன்று.

02. பெர்மிட் காணியைத் தவிர்ப்பது நன்று. தொழில் முயற்சிக்கு அனுமதி வழங்கும் அரச நிறுவனத்தின் சட்டதிட்டங்களுக்கு ஏற்ப இணங்குமாயின் பெர்மிட் காணி பெறலாம். பெர்மிட் காணியை வாங்கி உடனடியாக உறுதி எடுக்க முடியாது. உறுதி கூட அதன் முதல் உரிமையாளர் அல்லது வாரிசுகளுக்கே வழங்கப்படும்.

03. வெளிப்படுத்தல் உறுதி, ஆட்சி உறுதியை வைத்துக் கொண்டு உறுதிக் காணி எனச் சொல்லி ஏமாற்றும் படலமும் நடக்கின்றது. ஒரு காணிக்கு இருவர் அல்லது பலர் வெளிப்படுத்தல் உறுதியைக் கொண்டு வரலாம். வழக்குப் போடலாம்.

04. பிரிக்கப்பட்ட காணி ஆயின் வீதி அபிவிருத்தி அதிகாரசபை , வீதி அபிவிருத்தித் திணைக்களம், உள்ளூராட்சி சபைகளின் அனுமதி பெறுதல் கட்டாயமானது. உரிய அளவுத் திட்டத்தில் வீதிக்குக் காணி விடாமல் காணி பிரிப்புகளும் விற்பனையும் பரவலாக நடக்கின்றது.காணி ஒழுங்கை பிரிப்பும் உரிய சட்டப்படி நடைபெறுதல் வேண்டும்.

05. நகர அபிவிருத்தி அதிகாரசபையின் சட்ட திட்டப்படியும் காணி பிரிக்கப்படுதல் கட்டாயமானது. இது தெரியாமல் காணி வாங்கி விட்டு கட்டிட நிர்மாண அனுமதியைப் பெற முடியாமல் துன்பப்படுகின்றனர்.

06. கைத்தொழில் முயற்சி,வியாபாரமாயின் மத்திய சுற்றாடல் அபிவிருத்தி அதிகாரசபையின் அனுமதி கட்டாயமானது. கழிவகற்றல் பொறிமுறைக்கு ஏற்பக் காணி இருத்தல் வேண்டும்.

07. வன்னிப் பிரதேசக் காணி ஆயின் வனபரிபாலனத் திணைக்களம் , வனஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றின் பரிபாலனத்தினுள் வரும் காணி ஆயின் அவர்களது அனுமதி பெறாமல் கட்டிடமோ ,தொழில்முயற்சிகளையோ செய்ய முடியாது.

08. கடற்கரையோரமாயின் கரையோரம் பேணல் திணைக்களத்தின் அனுமதி கட்டாயமானது.

09. காணித் தரகர்களால் தவறாக வழிகாட்டப்பட்டு காணியின் பெறுமதியை விட இரண்டு மடங்கு காசைக் கொடுத்து விட்டு அதிக தரகும் கொடுத்து விட்டு தொழில்துறைக்கு அனுமதி இல்லாமல் அலையும் சிலருண்டு.

## கிராமமும்...நகரமும்...

01- மஞ்சள் பை வைத்திருந்தால் கிராமம். பொலித்தீன் பை வைத்திருந்தால் நகரம்.
02- சோற்றுக்குத் தண்ணீர் ஊற வைத்துக் உண்டால் கிராமம் அமேசனில் பழைய உணவு ஓடர் எடுத்து உண்டால் நகரம்.
03- நாய் வீட்டில் காவல் காத்தால் கிராமம். வீட்டில் வைத்து நாயைக் காவல்காத்தால் நகரம்.
04- உடலில் பச்சை குத்தினால் கிராமம். உடலில் ரட்ரூண் (Tatto) போட்டால் நகரம்.
05- வெற்றிலைக்குக் கிராமம். பீடாவுக்கு நகரம்.
06- கிழிந்த ஆடையைத் தைத்து அணிந்தால் கிராமம். புதிய உடையை வேண்டிக் கிழித்துப் போட்டால் நகரம்.
07- உதவிக்கு மிதிவண்டி வைத்திருந்தால் கிராமம். உடலைக் குறைக்க மிதிவண்டி வைத்திருந்தால் நகரம்.
08- கணவன் தன் மனைவியை நண்பர்களுக்கு அறிமுகப்படுத்தினால் கிராமம் மனைவி தன் கணவரை அறிமுகப்படுத்தினால் நகரம்.

## சைவ உணவுகள்...

இன்று உலகில் சைவ உணவுகளை அதிகமாக உண்ணும் பழக்கம் அதிகரித்து வருகின்றது. பொதுவாக அசைவ உணவுகளை உண்ணும் மக்கள் வாழும் நாடுகள் இல்லை என்றே கூறலாம். இருப்பினும் இன்றைய உலகப் போக்கில் சைவ உணவுகளை விரும்பி உண்போர் தொகை அதிகரித்து வருகின்றது.

இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் பிறவிச் சைவர்களாகக் கோடிக்கணக்கானோர். வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அசைவ உணவுகளால் உலகில் இன்று பல கோடி மக்கள் பலநோய்களுக்கு ஆளாகிவருகிறார்கள். இதை உணர்ந்து உலகின் பல கோடி மக்கள் இன்று சைவ உணுவுப் பிரியர்களாக மாறிவருகிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

மொத்தமாகப் பார்க்கும் போது சைவ உணவுகளால் உடலாரோக்கியம் பெருகுகின்றது. நோய்கள் ஏற்படுவது குறைவடைகின்றது. நீண்ட ஆயுள் கிடைக்கின்றது. ஆகவே நாம் சைவ உணவுகளை உண்ணப் பழகினால் நமது உடலாரோக்கியம் பெருகும். அந்த வகையில் தற்போது உலகில் சைவ உணவுகளை அதிகமாக உண்பவர்களில் முதல் பத்து இடங்களைப் பிடிக்கும் பட்டியலைப் பார்ப்போம்..

| | |
|---|---|
| 1வது - இந்தியா | 6- இஸ்ரேல் |
| 2வது - இலங்கை | 7- இங்கிலாந்து |
| 3வது - நேபாளம் | 8- அமெரிக்கா |
| 4வது - இந்தோனிசியா | 9- கனடா |
| 5வது - தாய்லாந்து | 10- அவுஸ்திரேலியா |

# தாயகச் செய்திகள் சில...

09.07.2025- இந்தநாள் வரை(23நாட்கள்) யாழ் செம்மணியில் 63 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது. 23,24,25ம் திகதிகளில் செம்மணியில் ஒன்றுதிரண்டு "அணையாவிளக்குப்" போராட்டம் மக்கள் மாபெரும் நினைவஞ்சலி நிகழ்வை நடாத்தினர். இந்த நிகழ்வில் சர்வதேச மனித உரிமைகள் தாபனத்தின் தலைவர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தியதுடன் மாலை இடம்பெற்ற கலந்துரையாடலிலும் கலந்துகொணடார்.அவர் திருகோணமலை, கண்டிக்கும் சென்று மக்கள் குறைகளை அறிந்து சென்றுள்ளார்.

30.06.2025- இவ்வாண்டு யூலை மாதத்தில் 1.38.241 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

29.06.2025- இவ்வாண்டு முதல் 5 மாதங்களில் ஊழல்க்குற்றச்சாட்டில் 31 அரச அதிகாரிகள் கைது. 2.221 முறைப்பாடுகள் கிடைத்ததாக லஞ்சத்தடுப்பு ஆணைக்குழு தெரிவித்தது.

28.06.2025- ஏப்ரல் மே மாதங்களில் 2.300 கோடீ ரூபா பெறுமதியான போதைப் பொருள்கள் கைப்பற்றல் பொலிஸ் பகுதியினர் தெரிவிப்பு.

27.06.2025- இவ்வருடம் முதல் 6 மாதங்களில் 52 துப்பாக்கிச்சூட்டுச்சம்பவங்கள் இடம்பெற்றதில் 30 பேர் பலி எனப் பொலிசார் அறிவிப்பு.

26.06.2025- இவ்வருடம் முதல் 6 மாதங்களில் வாகன விபத்துக்களால் 2.000 பேர் பலியாகியுள்ளனர்.

25-06.2025- கடந்த வருடம் யானைகள் - மனித மோதல்களில் 388 யானைகளும் 155 மனிதர்களும் பலி.35.8கோடி பெறுமதியான சொத்துக்கள் இழப்பு.2011ம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி நாட்டில் சுமார் 5.800 யானைகள் இருப்பதாகவும் வனப்பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது.

24.06.2025- கடந்த ஆண்டு மின்சாரத்தாக்குதல்களால் நாட்டில் 550பேர் பலி

20.06.2025- ஜனாதிபதி 3 நாள் விஜயமாக யேர்மனிக்கு விஜயம்செய்தார்.

19.06.2025- நாட்டிலுள்ள 15 - 21 இளவயதினர் 12வீதம்பேர் புகைப்பிடித்தல் 18 வீதம்பேர் மது மற்றும் போதைப் பொருட்களுக்கு அடிமை அரச போதைப்பொருள் கட்டுப்பாட்டுச்சபை அறிவித்தது.

18.06.2025- நாட்டில் தற்போது 356 அரச சிறவர் பராமரிப்பு நிலையங்கள் உண்டு. 9.190 சிறார்கள் பராமரிப்பு. மகளிர் விவகார அமைச்சு தெரிவிப்பு.

17.06.2025- கண்ணிவெடிகள் அகற்றும் ஹலோட் நிறுவனம் நாட்டில் 2002 தொடக்கம் 31.05.2025வரை சுமார் 3லட்சம் கண்ணிவெடிகளை அகற்றியுள்ளது.

10.06.2025- நாட்டின் பகைத்தல் பொருட்களுக்காக அரசு ஒரு நளைக்கு 52 கோடி ருபவைச் செலவிடுகின்றது. புகைத்தலால் சாராசரியாக ஒரு நாளைக்கு 20 பேர் உயிரிழப்பு சுகாதார அமைச்சு அறிவித்தது.

08.06.2025- 01.01.2025 - 31.05.2025 வரை நாட்டில் 22.245 டெங்கு நோயா-ளர்கள் அடையாளம். மேல்மாகாணம்தில் மிகஅதிகம்பேர் அடையாளம்

05.06.2025- 1.1.2025 - 31.05.2025 வரை பல்வேறு காரணங்களுக்காக 39.496 பெண்களும் 60.917 ஆண்களும் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர்.

01.06.2025- உலகின் முதலாவது தமிழ்ப் பேராசிரியரும் முத்தமிழ் வித்தகருமான சுவாமி விபுலானந்தரின் 15 அடி உயரமான கற்சிலை மட்டக்களப்பில் திறந்து வைக்கப்பட்டது (20.05.2025)

28.05.2025- மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் ஆயர் பொன்னையா ஜோசப் 20.05.2025ல் காலமானார்.

25.05.2025- 01.01.2025 - 18.05.2025வரை 944 வீதி விபத்துகளால் 1.607பேர் பலி பொலிசார் அறிவிப்பு.

21.05.2025- யாழ்ப்பாணத்தை ஆட்சிசெய்த சங்கிலி மன்னனின் 406வது நினைவுநாள் தமிழர் பிரதேசங்களில் நினைவுகூரப்பட்டது.

20.05.2025- 16 தேசிய படைவீரர்கள் தினத்தில் 12.434 படையினருக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளன.

15.05.2025- நாட்டின் மக்கள் தொகையில் 35 வீதம்பேர் இரத்த உயர் அழுத்த நோயாளிகள் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

12.05.2025- கடந்த ஆண்டில் 16 வயதிற்குட்பட்ட 304 சிறுமிகள் பாலியல் துஸ்பிரயோக வழக்குகள் பதிவாகியுள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்தில் 95 சம்பவங்கள் என கிழக்குப்பிராந்திய பொலிஸ் அலுவலகம் தெரிவித்தது.

10.05.2025- நாட்டில் இடம்பெறும் வீதி விபத்துகளால் தினமும் 7 - 10 பேர்-வரை பலியாகின்றனர். போக்குவரத்துப் பொலிஸ் தரப்பினர் அறிவிப்பு.

08.05.2025- மே மாதம் நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலையால் 21 மாவட்டங்களில் 757 குடும்பங்களைச் சேர்ந்த 10.376பேர் பாதிப்பு.

# உலகச் செய்திகள் சில...

05.07.2025- அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தில் வரலாறு காணாத மழை வெள்ளம். தொடர்ச்சியா மழைபெய்து அங்குள்ள ஆறுகளின் நீர்மட்டம் 29அடிக்கு உயர்ந்ததால் பாரிய அழிவுகள் ஏற்பட்டுள்ளன. 112 பேர் இறந்துள்ளனர். வீடுகள், கட்டிடங்கள் பேரழிவு லட்சக்கணக்கானோர் இடம்பெயர்வு. கார்கள் மற்றும் வாகனங்கள் மழைவெள்ளத்தில் அடிபட்டுச்சென்று காணாமல் போயுள்ளன.

04.07.2025- யப்பான் நாட்டிற்குச் சொந்தமான குட்டித்தீவுகளில் அண்மையில் 15.000 க்கும் அதிகமான நிலநடுக்கங்கள் பதிவாகியுள்ளன. அடிக்கடி இத்தீவுகளில் நிநடுக்கம் உணரப்படுவதால் பேரனர்த்தம் வரும் என அஞ்சி அந்தத்தீவுகளில் குடியிருக்கும் மக்கள் படிப்படியாக வெளியேற்றப்பட்டு வருகிறார்கள்

30.06.2025- 12 நாட்கள் நீடித்த ஈரான்-இஸ்ரேல் போரில் 935 ஈரானியர்கள் பலி. 3.300 பேர்வரை காயம். பல கோடிக்கணக்கான சொத்துக்களை இழந்தது இஸ்ரேல்.

29.06.2025- இல்ரேல் - காஸா போரால் 57.000 பலஸ்தீனர்கள் பலி. காஸ ாவில் உணவுதேடி அலைந்த மக்கள் 75 பேரை ஒரே நாளில் இஸ்ரேல் படுகொலை செய்தது. காஸாவில் சுமார் 50 லட்சம் மக்கள் கடும் பசி பட்டினியை எதிர்கொண்டுள்ளனர்.

25.06.2025- இந்தியாவில் விமான விபத்து 170 இந்தியர்கள் உட்பட 205 பேர் பலி. 53 பிரித்தானியர்களும் உள்ளடங்குவர்.

15.06.2025- உலகில் நடைபெறும் போர், உள்நாட்டுப்போர் போன்ற காரணங்களால் மிக அதிகமான மக்கள் உள்நாடுகளிலும் வெளிநாடுகளிலும் அகதிகளாக வாழ்வோர் தொகையை ஐக்கிய நாடுகள் அகதிகள் பிரிவு அறிவித்துள்ளது. சூடான் 1கோடி 40 லட்சம், சிரியா 1 கோடி 35லட்சம், ஆப்கானிஸ்தான் 1 கோடி, உக்ரைன் 88 லட்சம்பேராவர்.

20.05.2025- நைஜீரியாவில் மழை வெள்ளம் 700 பேர்வரை இறப்பு.

18.05.2025- பாக்கிஸ்தானில் மழை வெள்ளம் 100 பேர்வரை பலி இந்த நாட்டில் நிலவும் பஞ்சம், பட்டினியால் 11 மில்லின் மக்கள் பாதிப்பு.

17.05.2025- உலகில் அஸ்த்துமா நோயால் 1லட்சம் பேருக்கு 34 பேர் பலி உலக சுகாதார அமைப்பு அறிவித்துள்ளது.

15.05.2025- உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவில் 6 தேசியக்கட்சிகள், 58 மாநிலக்கட்சிகள், 2.763 சிறியகட்சிகள் காணப்படுகின்றன.

10.05.025- 2024ம் ஆண்டில் ஈரானில் 975 பேர் தூக்கிலிடப்பட்டுள்ளனர். மனித உரிமைகள் ஆணையம் கண்டனம் தெரிவித்துள்ளது. வருடாவருடம் உலகில் மிக அதிகமானோருக்குத் தூக்குத்தண்டனை வழங்கும் நாடு ஈரான்




## அதிசயக் குழந்தை

ஆயிரம் தமிழ்ச்சொற்களுக்கு அதன் ஆங்கில அர்த்தங்களை சாதாரணமாகக்கூறிச் சாதனை படைத்துள்ளார். சாவகச்சேரியைச் சேர்ந்த இரண்டரை வயதுச்சிறுமி அசத்தியுள்ளார். சிறுமியின் இந்த அசாத்திய திறன் கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளது.

சாவகச்சேரியைச் சேர்ந்த ஜெயகரன் தர்ஷிகா என்ற இரண்டரை வயதுச் சிறுமி காலநிலை, விலங்குகள், மின்னியல் சாதனங்கள், தொழில்கள் உள்ளிட்ட 2000 இற்கும் அதிகமான சொற்களைத் தமிழில் கேட்கும்போது அவற்றிற்கான ஆங்கில அர்த்தங்களை மிகவும் அசாத்தியமாகக் கூறுகின்றார்.

இந்தச் சிறுமியின் தந்தை ஒரு ஓட்டோ சாரதியாகவும் தாய் இல்லத்தரசியாகவும் உள்ளனர். பெரியளவிலான கல்விப் பின்புலங்கள் இல்லாத குடும்பத்தில் பிறந்த இந்தச் சிறுமி இதுவரை ஏடு தொடக்கப்படாத நிலையில் இத்தகைய அதிசிறந்த ஞாபக சக்தியைக் கொண்டுள்ளமை பெரும் வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் சிறுமியின் சாதனை தொடர்பில் தெரிவித்த பெற்றோர் யாழ் ஊடக அமையத்தில் ஊடக சந்திப்பு ஒன்றை நடாத்தி உலகறியச் செய்திருக்கிறார்கள். இந்தச் சிறுமியின் அபார திறனை ஆச்சரியத்துடன் அனைவரும் பாராட்டுகளைத் தெரிவித்து வருகின்றனர். நாமும் பாராட்டுவோம் பெற்றோருக்கும் நன்றியும் பாராட்டுகளும் உரித்தாகட்டும்!..

## உலகில் முதற்தரத்திலுள்ள பல்கலைக் கழகங்கள்...




## உலகில் கோடீஸ்வரர்களின் பட்டியலில் முதலிடம் பிடிக்கும் நாடுகள்...








## 2025ம் ஆண்டின் உலக அழகி பட்டத்தை வென்றார்

## தாய்லாந்து நங்கை ஓபல் சுசதா சுவாஸ்ரி

72வது உலக அழகிப் போட்டி இந்தியாவின் தெலுங்கானா மாநிலத்தில் கடந்த வாரம் நடைபெற்றதுஇ 108 உலக அழகிகள் போட்டியில் பங்கேற்றனர். 4 கண்டங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு கண்டங்களிலிருந்தும் 10 போட்டியாளர்கள் இறுதிச்சுற்றுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.அமெரிக்கா-கரீ-பியன், ஐரோப்பா, ஆபிரிக்கா, ஆசியா மற்றும் ஒசானியன் எனப்பிரிக்கப்பட்டு இறுதிப்போட்டி தெரிவிலேயே தாய்லாந்து அழகி ஓபல் சுசதா சுவாஸ்ரி தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார். வாழ்த்துகள்!..



# யாழ் செம்மணி!..வலிதருகிறது!....

யாழ்ப்பாணம், செம்மணி - சித்துப்பாத்தி இந்து மயானத்தின் புதைகுழி களில் குழந்தையை அணைத்தவாறாக தாய் ஒருவரதும் குழந்தையினதும் என்புக்கூடுகள் மீட்கப்பட்டள்ளன.

செம்மணி சிந்துப்பாத்தி மனிதப் புதைகுழிகள் அகழ்வுப்பணிகள் கட்டம் கட்டமாக தொடர்கையில் 9.7.2025 வரை 63 எலும்புக்கூடுகள் மிடுகப்பட்ட துயர சம்பவம் உலகத்தமிழர் மனங்களை வேதனைப்படுத்தியுள்ளது..

செம்மணி - சித்துப்பாத்தி இந்து மயானத்தில், கடந்த பெப்ரவரி மாதம் அடை யாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழியில் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய அகழ்வுப் பணிகள் இடம்பெற்றன.

மூன்று குழந்தைகளின் மனிதச் சிதிலங்கள் உட்பட 63 மனித உடற்பாகங்கள் (09.07.2025வரை- 23 நாட்களில்) மீட்கப்பட்ட நிலையில், மனிதப் புதை-குழியாக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டது.

”மனிதப் புதைகுழி“ என்ற அடையாளப்படுத்தலுக்கு அமைய இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் மீண்டும் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

இதேவேளை, யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க், செம்மணி மனிதப் புதைகுழியை நேரில் சென்று பார்வையிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

செம்மணி மனித புதைகுழிகளில் மனித எலும்புக்கூட்டு தொகுதிகளும் மேலும் சில சிதிலங்களும் அடையாளம் காணப்பட்டுள்ளன.செம்மணி மனித புதைகுழியில் இராண்டாம் கட்ட அகழ்வு பணிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றன. இதன் முடிவுகள்??????????





# உலகின் ஏழ்மையான நாடுகள்.....

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அடிப்படையில் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளதன்படி ஒவ்வொரு நாடுகளும் எவ்விடத்தில் இருக்கின்றது என்பதை பார்க்கலாம்.

1- தெற்கு சூடான் இந்த நாட்டியின் அடிப்படையில் ஏழ்மையில் முதல் இடத்தை பிடித்துள்ளது. இது சிறிய கிழக்கு ஆப்பிரிக்க நாடு. இங்கு 11.1 மில்லியன் (1.1 கோடி) மக்கள் தொகையுடன் மொத்த ஜிடிபி கூ 29.99 பில்லியனைக் கொண்டுள்ளது.

2- புருண்டி இந்த நாடு கிழக்கு ஆப்பிரிக்காவில் நிலத்தால் சூழப்பட்ட ஒரு சிறிய நாடாகும். இது உலகின் ஏழ்மையான நாட்டின் பட்டியலில் இரண்டாம் இடத்தை பிடித்துள்ளது. இதன் மொத்த உள்நாட்டு உற்பத்தி கூ 2.15 பில்லியன் ஆகும்.

3- மத்திய ஆப்பிரிக்க குடியரசு (CAR) இந்த நாட்டில் 5,849,358 மக்கள் தொகை உள்ளது. இது உலகில் மூன்றாவது ஏழ்மையான நாடாகும். இந்த நாட்டில் தங்கம், எண்ணெய், யுரேனியம் மற்றும் வைரங்கள் நிறைந்த இருப்பு இருக்கின்றன.ஆனால் அரசியல் ஸ்திரமின்மை, ஆயுத மோதல்கள், 80 சதவீத குடிமக்கள் வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் ஒரு தோல்வியுற்ற நாட-ாக அதை மாற்றியுள்ளன.

4- மலாவி இந்த நாடு தென்கிழக்கு ஆப்பிரிக்காவில் அமைந்துள்ளது. இது உலகளவில் 4வது ஏழ்மையான நாடாக உள்ளது. 21,390,465 மக்கள் தொகை கொண்ட இந்நாட்டின் ஜிடிபி கூ10.78 பில்லியன் ஆகும்.

# விவாகரத்து குறைவாக உள்ள நாடுகளின் தரவரிசை..

விவாகரத்துஉலகிலேயே மிகக் குறைந்த விவாகரத்து விகிதம் இலங்கையில்தான். 1,000 குடிமக்களுக்கு 0.15 என்ற விகிதத்தில் உள்ளது. பாலி ன சமத்துவமின்மை மற்றும் பெண்கள் தங்கள் கணவர்களை பொருளா-தார ரீதியாக சார்ந்திருத்தல் போன்ற சமூகப் பிரச்சினைகள் இங்கு கலாச்சார தடைகளாக உள்ளன. வியட்நாம் 2வது இடத்தில் உள்ளது. ஒவ்வொரு 1,000 பேருக்கும் 0.2 விவாகரத்துகள். கத்தோலிக்க தேவாலயங்கள் திருமணத்தை ஒரு தெய்வீக பந்தமாக வலுவாக மதிக்கின்றன.

3வது குவாத்தமாலாவில் 1,000 குடிமக்களுக்கு 0.2 என்ற குறைந்த விவாகரத்து விகி தம் உள்ளது. 4வது பெருவில் 1,000 பேருக்கு 0.4 என்ற விகிதத்தில் விவாகரத்து விகிதம். 5வது கத்தோலிக்க மரபுகள் காரணமாக அயர்லாந்தின் விவாகரத்து விகிதம் 1,000 பேருக்கு 0.6 மட்டுமே உள்ளது. 6வது மால்டா நாட்டின் விவாகரத்து விகிதம் 1,000 குடிமக்களுக்கு 0.6 ஆக உள்ளது.7வது போஸ்னியா மற்றும் ஹெர்சகோவினா, 1,000 பேருக்கு 0.8 என்ற விவாகரத்து விகிதமாக உள்ளது. 8- இந்தியாவில் விவாகரத்து விகிதம் 1,000 பேருக்கு 1 என்ற அளவில் உள்ளது. சமூக அழுத்தம் மற்றும் மத நம்பிக்கைகள் குறைவான விவாகரத்திற்கு காரணமாக உள்ளது.

# SEBAMALAI MARIYANNAI HOUSE OF COMPASSION
## செபமாலை மரியன்னை இரக்கத்தின் இல்லம்

டோமினிக்கன் கன்னியர் மடம்,
துள்ளுகுடியிருப்பு,
பேசாலை,
இலங்கை
023-2050095

Dominican Convent,
Thullukudiyiruppu,
Pesalai,
Sri Lanka
023-2050095

Date:15./11/2024

13.06.2025

Mann Tamil Magazine

Germany.

Dear friends in Mann Tamil Magazine,

We are very grateful to you for supporting us in various ways getting funds and donations also their charitable contributions on birthdays.

May God bless your service for the poor children.

Rev. Sr. Mary Magdaline Joseph O.P.

The Manager of the Institute

**ஒளிரும் வாழ்வு-புதுக்குடியிருப்பு பிரதேசம்**
**Olirum Vaalvu- Puthukudiyiruppu Division**

உடையார் கட்டு
கிழக்கு, உடையார் கட்டு
புதுக்குடியிருப்பு

Udaiyarkaddu east
Udaiyarkaddu
Puthukudiyiruppu

Reg No:- MU/PKI/DS/VSSO/25

**தலைவர்**
திரு.இ.அம்பிகைபாலன்
BA.Hon, Dip in coun
தொ.பே 07778491233

**செயலாளர்**
திரு.கு.அகிலன்
சமாதான நீதவான்
தொ.பே 0772049344

**பொருளாளர்**
திரு. ச.தவலிங்கம்
தொ.பே 0772890659

**உப தலைவர்**
திரு. சி.உதயகுமார்

**உப செயலாளர்**
**திருமதி வ.செல்வராணி**

**மதிப்பிற்குரிய ஐயா / அம்மா**

**திருமண பந்தத்தில் இணையும் நான்கு மாற்றுத் திறனாளிகளுக்கான உதவி கோரல்**

ஒரு தனிமனிதன் திருமணம் என்ற பந்தத்தின் ஊடாகவே தனது பூரண நிலையினை உணருகின்றான். உண்மையில் மாற்றுத்திறனாளிகளைப் பொறுத்தவரையில் திருமணம் என்பது பல சவால்களைத் தாண்டியே நடைபெறுகின்றது.

அந்தவகையில் எமது பயனாளிகள் நால்வர் திருமண பந்தத்தில் இணைகின்றனர். ந.ஜெயானந்தன் - இரண்டு கால்களும் இயலாதவர் யுத்தத்தில் காயமடைந்ததினால் இரண்டுகால்களும் பாதங்கள் பிரண்ட நிலையில் உள்ளது அவருக்கு மனைவியாக போகின்றவர் ஆ.சுபாசினி- ஒரு காலை இழந்தவர் இருவரும் மனம் விரும்பி திருமண பந்தத்தில் இணைகின்றனர்.

இதே போன்று செல்வன் ஜே. போல்தயாளன் என்பவர் இரண்டு கால்களும் பிரட்டி பிரட்டி நடப்பார். யுத்தத்தில் காயமடைந்தவர். பெண் கௌசிகா ரொனடயுடன் ஒரு காலை இழந்தவர் இருவரும் மனம் விரும்பி திருமண பந்தத்தில் இணைகின்றனர்.

இரண்டு தம்பதிகளும் பொருளாதார நிலையில் மிகவும் சிரமங்களை எதிர்கொள்பவர்களாவர். திருமண செலவுகளுடன் அவர்களது அடுத்தகட்ட வாழ்க்கையினைக் கொண்டு செல்வதற்கு போதுமான பொருளாதார வளத்தினை ஏற்படுத்த எம்மால் இயன்ற வகைகளில் முயற்சிக்கின்றோம்

அங்கம் இழந்தாலும் நெஞ்சம் தளராது தன்னம்பிக்கையோடு தமது வாழ்க்கைச் சக்கரத்தில் புதிய அத்தியாயத்தை ஆரம்பிக்கும் இத் தம்பதிகளை வாழ்த்தி அவர்களின் வாழ்வு சிறக்க இவ் நற்காரியத்தில் தங்கள் அன்புக்கரங்களையும் இணைத்து இத்தம்பதிகள் சீரும் சிறப்பும் பெற்று வாழ வழிவகை செய்திடுங்கள்.

நன்றி

இ.அம்பிகைபாலன்
தலைவர்
ஒளிரும்வாழ்வு- புதுக்குடியிருப்பு

E-mail :- olirumvaalvu@gmail.com Phone No :- 0094778491233
Web:- www.olirumvaalvu.org Face book :- olirumvaalvu puthukudiyiruppu

Pattim, Mannar.
Sri Lanka.
31 | 05 | 2025

Mr. V. Suvanayaki
Mann (Earth) foundation tamil Magazin
Germany.

Dear Sir,

The members of the 'Santhom' Home for Elde[rs] we thank you and the members of the Mann (Earth) foundaton, Tamil magazin, for the thoughtf[ul] towards us, for sending us money (150.00 Euro) 43,082 for the good meal and other need. thank you and may God bless you, we will keep y[ou] all in our prayers.

Thanking you

Sr. Consa.

Sister Incharge
[Santh]thom Home For Elders
Sisters of Charity
Pattim- Mannar.

## மனிதநேயப்பணியில் இணைந்துகொண்டவர்கள்!..

தாயகத்தில் ஆதரவற்ற சிறார்களின் வாழ்நாள் மற்றும் கல்விச்செலவுகளைப் பொறுப்பேற்று உதவும் அன்பு உள்ளங்களை நேசத்துடன் வாழ்த்துகின்றோம். எனவே நீங்களும் இந்தப்பணியுடன் இணைந்து உதவலாம். இதுவரை இத்திட்டத்தில் இணைந்து உதவிவரும் நல்லுள்ளங்களின் விபரம்....

1-3 திருமதி பிங்கலை செந்திலன் - Kitzingen - 600-00 யூரோ
ஒளிரும் வாழ்வகம் - துணுக்காய் - முல்லைத்தீவு
உதவி பெறுவோர்.. - தியாகராசா டிலினிசா (பி.தி 10.04.2014)
செல்வகுமார் சதுமிகா (பி.தி 12.11.2010)
றொனி டிலக்சனா (பி.தி 28.10.2015)

........................................................................................................................

4-5- திருமதி சிவதர்சினி பிராங்ளின் - Viersen - 480-00 யூரோ
ஒளிரும் வாழ்வகம் - துணுக்காய் - முல்லைத்தீவு
உதவி பெறுவோர்.. - றமணன் பிலோமினா (பி.தி 08.04.2012)
- மகேஸ்வரன் அர்ச்சனா(பி.தி 19.05.2009)

........................................................................................................................

6- திரு பொ மகாலிங்கம் - Oberhausenen - 480-00 யூரோ
ஒளிரும் வாழ்வகம் - துணுக்காய்
உதவி பெறுபவர் - சுரேஸ்குமார் மனோறஞ்சனி (30.08.2004)

........................................................................................................................

7- திரு திருமதி ஜெய்டா கீதன் - Oberhausenen - 480-00 யூரோ
ஒளிரும் வாழ்வகம் - துணுக்காய்
உதவி பெறுபவர் - சிவகுமார் சிரோமி (பி தி 30.08.2014)

........................................................................................................................

8-9 திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா - Bonn - 480-00 யூரோ
அமுதசுரபி அறக்கட்டளை - வவுனியா
உதவி பெறுவோர்..செல்வி சிற்பவானந்தராசா டேன்சிகா பிதி 22.07.2004
செல்வன் வில்வராசா றதீபன் பிதி 04.10.2003

10- செல்வன் பிரணவன் யோகராசா - Düsseldorf - 240-00 யூரோ
இந்து "அன்பகம்" சிறுவர் அபிவிருத்தி நிலையம் - வவுனியா

உதவி பெறுவோர்.. சிவராசா பவிதா ( பி.தி 05.09.2011 ) ..

..........................................................................................................................

11- Johannas Grüendler - Köln - 480-00 யூரோ
இந்து "அன்பகம்" சிறுவர் அபிவிருத்தி நிலையம் - வவுனியா
உதவி பெறுவோர்.. தட்சாயினி கபிசா ( பி.தி 01.09.2012)

..........................................................................................................................

12- திருமதி ஸ்ரெவ்வானி இம்மானுவல் - Essen - 480-00 யூரோ
இந்து "அன்பகம்" சிறுவர் அபிவிருத்தி நிலையம் - வவுனியா
உதவி பெறுவோர்.. அஸ்வினி சுனில்சாந்த் ( பி.தி 09.06.2012)

..........................................................................................................................

13 திருமதி அஜந்தி பத்மநாதன் - London - 480-00 யூரோ
செபமாலை இரக்கத்தின் இல்லம் - தலைமன்னார்- மன்னார்
உதவி பெறுவோர்.. - சுரேஸ் சுஜந்தினி (பிதி 23.10.2013)

..........................................................................................................................

14- திருமதி சாந்தினி துரையரங்கன் - Essen - 480-00 யூரோ
சிறீ சண்முகா பெண்கள் இல்லம் - திருகோணமலை
உதவி பெறுபவர் நல்லரெட்ணம் துர்க்கா பிதி 25.11.2003

..........................................................................................................................

15- திரு, திருமதி சண்றா கீர்த்திக் - Duisburg - 480-00 யூரோ
சிறீ சண்முகா பெண்கள் இல்லம் - திருகோணமலை
உதவி பெறுபவர் நிசாந்தன் லதுமிக்கா பிதி 23.02.2015

..........................................................................................................................

16- திரு ரகுப்பிரியன் ஏகானந்தராசா - Duisburg - 480-00 யூரோ
ஞானசம்பந்தர் குருகுலம் - மட்டக்களப்பு
உதவி பெறுபவர் சத்தியசீலன் சாயிரிதன் பிதி 07.06.2010

..........................................................................................................................

17- மேரி விஜயகுமார் + மங்கை சிவராசன் - Bietigheim - 2.400-00யூரோ
நல்லாயன் சிறுவர் இல்லம் - மாங்குளம்(1200-00 +1200-00)
உதவி பெறுபவர் இல்லப் பிள்ளைகள் அனைவரும்

--------------------------------------------------------------------------------------------------------------.

**பொறுப்பெடுத்தவர்கள் 14 பேர்.. (ஜேர்மனி, லண்டன்)**

**உதவி பெறுவோர் 16 பிள்ளைகள் + மாங்குளம் நல்லாயன் சிறுவர் இல்லம் (தாயகம் - சிறீலங்கா)**

# ஆதரவற்றோர் நிதி உதவிக் கணக்கு..

ஆரம்ப இருப்பு 30-04-2025 **(மேலதிகச் செலவு)** -- 494-58

அன்பளிப்புகள்:-

01. திருமதி. சிவதர்சினி பிராங்ளின் - Viersen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
02. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - Essen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)
03. திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா - Weeze + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
04. திரு. Johannas Gruendler - Köln + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
05. திருமதி பிங்கலை செந்திலன் - Kitzingen +100-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு-
06- திரு பொ மகாலிங்கம் - Oberhausenen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
07- திரு திருமதி ஜெய்டா கீதன் - Oberhausenen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
08- திரு, திருமதி சண்றா கீர்த்திக் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
09- திரு ரகுப்பிரியன் ஏகானந்தராசா - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
10- மேரி விஜயகுமார் + மங்கை சிவராசன் - Bietigheim+ 400-00
(நல்லாயன் சிறுவர் இல்லம் கல்வி மேம்பாட்டு மாதாந்த உதவி)-------------

\+ 1.140-00+1.140-00

---------------

\+ 645-42

**அன்பளிப்புகள்...**

11- திரு சின்னையா வேலும்மயிலும் - München + 200-00
(தாயாரின் நினைவு உதவி)
12- திருமதி சிறீமதி ஆனந்தன் - Italy - +200-00
( 4 நண்பிகள் அன்பளிப்பு)
13- திருமதி பிங்கலை செந்திலன் - Kitzingen + 150-00
(தாயாரின் நினைவுநாள் அன்பளிப்பு)
14- திரு சிவகாந்த் சிவராசா - Viersen +155-06
(மகளின் பிறந்தநாள் அன்பளிப்பு)
15- திரு சிவாஸ்கர் சிவராசா - London + 155-38
(பிறந்தநாள் அன்பளிப்பு)
16- திருமதி இராஜேஸ் சிவராசா - -Duisburg + 92-60-------------------------

\+ 953-04 + 953-04

-------------

+1.598-46

முற்பக்கப்படி + 1.598-46

திருமதி ராணி சம்பந்தர் - Everswinkel 50-00

-----------------

1.648-46

**அனுப்பியது...**

ரூபா யூரோ

1)ஒளிரும் இல்லம்"மல்லாவி-துணுக்காய் - 65.091-95- 200-00
(23.05.2025 சிறீமதி இத்தாலி பிறந்தநாள்)

2) நல்லாயன் சிறுவர் இல்லம் - மாங்குளம்1.36.868-67- 400-00
(27.06.2025 மேரி + மங்கை கல்வி நிதி உதவி)
நல்லாயன் சிறுவர் இல்லம் - மாங்குளம் 64.953-35 - 200-00
(28.5.2025வேலும்மயிலும் சின்னையா பிறந்தநாள் அன்பளிப்பு)

3) விழிப்புலன் வலுவிழந்தோர் இல்லம் - கிளிநொச்சி - 451-10
(23.05.2025 அமல்,ஜெயராசா,நாதன்,வரதன்)1.50.000-00

4) சாந்தோம் முதியோர் இல்லம் - மன்னார் 48.082-35- 150-00
(28.5.2025 பிங்கலை தாயார் நினைவு)
(03.07.2025 இராஜேஸ்)தந்தை நினைவு) 30.000-00- 92-60

5) செபமாலை இரக்கத்தின் இல்லம்-
தலைமன்னார் 50.000-00 -155-06
(ஜியா சிவகாந்த் பிறந்தநாள் அன்பளிப்பு

6) ஒளிரும் வாழ்வு இல்லம்-புதுக்குடியிருப்பு 50.000-00 -155-38
(சிவாஸ்கர் பிறந்தநாள் அன்பளிப்பு )

---------------.

- 1.804-14 -1.804-14

-----------------

- 155-68

மண் சஞ்சிகை வக்கிக்கணக்கு வங்கிவரி

01.05.2025 - 31.05.2025 - 26-19
01.06.2025 - 30.06.2025 -19-09.................................... - 45-28

-----------------------

30.06.2025 மீதி கையிருப்பு **மேலதிகச் செலவு** - 200-96

--------------------

# வன்னி விழிப்புலனற்றோர் சங்கம்
# වන්නි දෘෂ්‍යාබාධිත සංගමය
# Vanni Association For Visually Handicapped

இல 5455
விவேகானந்தநகர்
கிளிநொச்சி

Reg.No:NP/KN/KV/DS/VSSO/2016/23
Mail ID:vannivissually@gmail.com
Facebook ID:vannivissually@gmail.com
Contact No:0212283080, 0771763915
A/C No:BOC Kilinochchi:- 76003813

No – 5455,
Vivekananthanagar,
Kilinochchi

**Advisor**

Mr.V.Piremkumar
(Humanitarian volunteer)

Mr.T.Nanthakumar
(Grama niladhari)

Mr. K.Paleswaran

**President**

Mrs.s yasotha

+94764377790

**Vice President**

Mr.k mahinthakumar
+94776744651

**Secretary**

Mr.P.Gananakumar

+94773638533

**Vice Secretary**

Mr.K.Srikaran
+94770699043

**Treasurer**

Mr.R.Sivakumar
+940771246734

**Committee Members**

Mrs. K.Nanthiny

Mrs. K.Ranjanadevi

Mr.K.Lavakumaran

Mr. Seyon

திகதி 26/05/ 2025

**நிர்வாகத்தினர்,**

**"மண்" கல்வி, கலை, இலக்கிய ,சமூக சஞ்சிகை,**

**யேர்மனி.**

**வணக்கம்!**

**நன்றி தொடர்பானது**

**பார்வையற்ற சமூகத்தினரும் உலக வாழ்வியல் நீரோட்டத்தில் அனைத்து செயல்முறைகளிலும் இணைநிலைத் தன்மையோடு பண்புடைய மனிதர்களாக தன்மதிப்புடன் வாழ வழிசெய்யும் நோக்கத்தை அடிப்படையாகக்கொண்டு வன்னி விழிப்புலனற்றோர் சங்கமானது செயற்பட்டு வருகிறது.**

மேற்கண்ட குறிக்கோளினை அடையும் வழிவகைகளில் ஒன்றாக பார்வையற்றவர்களினதும் அவர்களது குடும்பங்களிலுள்ள சாதாரண பிள்ளைகளினதும் கல்வி மேம்பாடும் அமையப்பெற்றிருக்கிறது. அந்த வகையில் எமது சங்க கட்டமைப்பில் வடக்கு, கிழக்கு மாநிலங்களை சேர்ந்த 278 பார்வையற்ற குடும்பங்களிலும், வறுமை உறுதிசெய்யப்பட்ட மாற்றுத்திறனாளிகளது குடும்பங்களிலும், வறுமைக்கோட்டுக்குள் வாழும் சாதாரண குடும்பங்களிலும் கல்வி கற்கும் 200 மாணவர்களில், 2025ஆம் ஆண்டு எமது இயலுமைக்கேற்ப கொடையாளிகளது பங்களிப்போடு, 140 பிள்ளைகளின் எதிர்கால கனவினை நிறைவேற்றும் பொருட்டு செயற்பட்டுவருகின்றோம்.பொது நலனிற்காய் தமது கல்வியையும் பொருண்மியத்தையும் உடலுறுப்புக்களையும் இழந்த பெற்றோர்கள் தமது பிள்ளைகளது எதிர்காலத்திற்காய் ஏங்கும் சூழலறிந்து, கல்விச்செயற்பாட்டினை மேம்படுத்தும் நன்னோக்கில் மாணவர்களுக்கும் கொடையாளிகளுக்கும் இடையே ஒரு உறவுப்பாலமாக நாம் செயற்பட்டு வருகின்றோம்.

அந்தவகையில், புலத்திலும் தாயகத்திலும் சமூக பொருண்மிய கட்டமைப்புக்களை மேம்படுத்த தாயக பற்றோடு 35ஆண்டுகளாக, செயற்பட்டுவரும் **"மண்" கல்வி, கலை, இலக்கிய , சமூக சஞ்சிகை,** ஊடாக லண்டனைச்சேர்ந்த திரு கிறிஸ்ரி அமலதாஸ் குடும்பம் , ஜேர்மனியைச்சேர்ந்த திரு செ ஜெயராசா குடும்பம் , ஜேர்மனியைச்சேர்ந்த திரு ச. யோகநாதன் குடும்பம், ஜேர்மனியைச்சேர்ந்த திரு அ வரதராசன் குடும்பம் ஆகியோர் இணைந்து வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தின் மாசிலாமணி கல்விமேம்பாட்டுத்திட்டத்திற்கு (150,000) ஒருலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவினை (451.10யூரோ) வழங்கி உதவியமைக்கு மாணவர் சார்பிலும், பெற்றோர் சார்பிலும் வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தின் சார்பிலும் மனப்பூர்வமான நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

**"நன்றி"**

**தலைவர்** **செயலாளர்**

**S.YASOTHA**
**President**
**Vanni Association For visually Handicapped**
**No-5455,Vivehananthanagar**
**Kilinochchi**

**P.GNANAKUMAR**
**Secretary**
**No-5455,Vivehananthanagar**
**Vanni Association For visually Handicapped**
**Kilinochchi**

**Good Shepherd Child Development center,**
**Mullai Road, Mankulam,**
**Srilanka.**
E-mail – mankulamcdc@gmail.com
Tel. No. – 0212060077/+94 775924582
Date: 07.05.2025

அன்பின் மண் சஞ்சிகை உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றி

பல உள்ளங்களுக்கு புதுவாழ்வு அளித்திட ஒன்றிணைந்து இயங்கும் உங்களை வாழ்த்தி மடல் மூலம் சந்திப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம். பிள்ளைகளை குறையின்றி நிறைவுடன் அரவணைத்து அவர்களின் குறிக்கோளை நிறைவேற்ற எமக்கு ஒத்துழைப்பு நல்கி வரும் அன்புள்ளங்கள் உங்கள் ஒவ்வொருவரையும் பாராட்டுகின்றேம்.

எம் அரவணைப்பை நாடி வரும் பிள்ளைகளின் வாழ்வு வளம் பெற உங்களின் நிதிப் பலம் எமக்கு பலமாகவுள்ளது. அயராது உழைக்கும் எமது பணி சிறுவர்களின் கல்வியில் கரைகாணச் செய்துள்ளது. எனவே தொடர்ந்தும் எமது பணி பலரின் வாழ்வை ஒளியேற்றும் என்ற ஒரே வாஞ்சையுடன் செயல்ப்படுகின்றோம்.

2025.04.24 திருமதி மேரி விஜயகுமார் மற்றும் திருமதி மங்கையற்கரசி சிவராசன் அவர்கள் மண்சஞ்சிகை அமைப்பினூடாக அனுப்பிவைத்த ரூபா 132930.64 (400 யூரோ) கிடைத்தது. இந்நிதியை எம் இல்லத்தில் இருந்து கல்வியை தொடரும் மாணவர்களின் மேலதிக வகுப்புகளுக்காக பயன்படுத்துதினோம். ஏம் பிள்ளைகள் கல்வியறிவில் முன்னோக்கி செல்ல உங்களின் நிதியுதவி பெரும் பலமாக அமைகின்றது. மாணவர்களை பரீட்சைக்கு தயார் படுத்தினோம். இத்தொகைக்கான கணக்கறிக்கைகளை இத்துடன் அனுப்பி வைக்கின்றோம்.

தொடர்ச்சியான நிதிப்பலம் தந்து பிள்ளைகள் கல்வியறிவில் முன்னேற்றம் அடைய நாம் எடுக்கும் முயற்சிக்கு பக்க பலமாக இருக்கும் ஒவ்வொருவருக்கும் மீண்டும் ஒருமுறை நன்றி கூறி சமூகத்தை முன்னேற்ற நீங்கள் எடுக்கும் ஒவ்வொரு முயற்சிகளும் வெற்றி பெற இறைவன் உங்கள் ஒவ்வொருவரையும் நிறைவாக ஆசீர்வதித்திட ஆசித்து விடைபெறுகின்றேன்.

நன்றி

இப்படிக்கு
என்றும் உங்கள் அன்பு சேவையை மறவாத
பிள்ளைகள் மற்றும் அருட்சகோதரிகள்.

Sr. Sumithra
Sister In Charge
Good Shepherd Children's
Mankulam.

Sr. Subani

ஒளிரும்வாழ்வு அமைப்பு - துணுக்காய்
ඔළිරුම්වාළ්වු සංවිධානය - තුණුක්කායි
Olirumvaalvu Organization - Thunukkai

.No:- MU/DS/TNK/RVSS/22/2015 T.P:- 0212060620 Fax:-0774868085 FarmNo:-0213204790 Viber:-0774868085 Mobile:-0774868085

திகதி 26.05.2025

திரு.வை.சிவராஜா,
யேர்மனி.

அன்புடையீர்!

**மகிழ்வு இல்லப் பிள்ளைகளுக்கான அன்பளிப்பு நிதி வழங்கியமை தொடர்பானது.**

மேற்படி விடயம் தொடர்பாக விசேடநிகழ்விற்கான மதியஉணவு எமது மகிழ்வு இல்லப் பிள்ளைகளுக்கு வழங்குவதற்காக 26.05.2025 தங்களால் வழங்கப்பட்ட அன்பளிப்பு நிதி அறுபத்து ஐயாயிரத்து தொண்ணூற்று ஒரு ரூபாய் தொண்ணூற்றைந்து சதம் (65091.95/-) பெற்றுக் கொண்டோம் என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம்.

இன்றைய நாளில் முல்லைத்தீவை சேர்ந்த ஆசிரியர் திரு ச.இந்திரன் அவர்களின் பிறந்த தினத்தில் எமது மகிழ்வு இல்லம் பிள்ளைகளுக்கான விசேட உணவினை வழங்கியிருந்தார்கள். திரு ச.இந்திரன் அவர்களுக்கு பிறந்ததின நல்வாழ்த்துகளை கூறிக்கொள்வதோடு நிகழ்வுக்கான நிதியனுசரனை வழங்கிய யேர்மனி சுவிஸ்லாந் பிரித்தானியா இத்தாலி நாட்டை சேர்ந்த பழையமாணவர்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

தொடர்ந்தும் மண்சஞ்சிகை ஊடாக தங்களின் இதயபூர்வமான நல்லாதரவினையும் பேரன்பினையும் எமது அமைப்பினர் சார்பாக வேண்டிக் கொள்வதோடு, மேற்படி கருணையுள்ளம் கொண்ட தங்களுக்கு மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன்

குறிப்பு:-

தங்களால் வழங்கப்பட்ட பணத்தினைப் பெற்றுக்கொண்டமைக்கான எமது அமைப்பின் 4075ம் இலக்க பணவரவுப் பற்றுச்சீட்டை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

**"தங்களின் உதவிக்கும் ஆதரவிற்கும் என்றும் எமது நன்றிகள்"**

இவ்வண்ணம்,
சி.சிவரூபன்.
தலைவர்,
ஒளிரும்வாழ்வு அமைப்பு,
துணுக்காய்.

"ஒளிமயமான வாழ்வு"

www.olirumvaalvu.com olirumvaalvuthunukkai2012@gmail.com olirumvaalvu thunukkai

# ஆவணப்படுத்தல் முயற்சியில் (6) ஆறு மில்லியன் பக்கங்களைக் கடந்த ஈழத்து எண்ணிம நூலகம்'

இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் எழுத்தாவணங்களை எண்ணிமப்படுத்தி ஆவணப்படுத்தும் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்ற நூலக நிறுவனம், 31.055.2025 இன்றுடன் ”6,069,660” பக்கங்களை ஆவணப்படுத்தியிருக்கிறது.

நூலகம் மற்றும் பல்லூடக நூலக வலைத்தளங்களில் ஆவணப் பாதுகாப்பை முன்னெடுத்து வரும் நூலக நிறுவனத்தின் செயற்பாடுகளில், இதுவரை 6 மில்லியன் பக்கங்களை எண்ணிம வடிவில் பதிவுசெய்து பாதுகாத்திருப்பது என்பது ஒரு மிக முக்கியமான விடயமாகும்.

2005 ஆம் ஆண்டிலிருந்து 122 செயற்றிட்டங்கள் வாயிலாக இத்தனை ஆவணங்களையும் ஆவணப்படுத்தியிருப்பதுடன் சிறப்புச் சேகரங்கள், நிகழ்ச்சித் திட்டங்கள், பிராந்திய சேகரங்கள் என தனது செயற்றிட்டங்களை பல கோணங்களில் நகர்த்திச் சென்று தற்போது 14 தொடரும் செயற்றிட்டங்கள் மூலமாக தனது ஆவணப்படுத்தற் பணியை முன்னெடுத்துச் செல்கிறது.

இந்த அடைவினை எட்டுவதில் நிதி வழங்கல், இடவசதி ஏற்பாடு, உபகரணங்கள் வழங்கல், தொழில்நுட்ப உதவி, ஆலோசனை, ஒருங்கிணைப்பு, மற்றும் சமூக விழிப்புணர்வு ஏற்படுத்தல் என எல்லா விதத்திலும் தங்களது ஒத்துழைப்பை வழங்கிய நூலகப் பங்களிப்பாளர்கள், நூலக பணியாளர்கள், மற்றும் தன்னார்வலர்கள் அனைவருக்கும் நூலக நிறுவனம் தனது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றது.

மேலதிக தகவல்களுக்கு : www.noolaham.org

**மேலும் விபரம் 80ம் பக்கத்தில்.....**

**குறிப்பு:-**

நூலக சேவையினரின் அரிய பணி சிறப்பானது... வாழ்த்துகள்!..

யேர்மனிவாழ் எழுத்தாளர்களே!..படைப்பாளிகளே!. உங்களால் எழுதப்பட்ட நூல்களை இந்த நூலக நிறுவனத்துக்கு அனுப்புங்கள். PDF வடிவத்திலும் கணனி மூலம் அனுப்பலாம்..

காலாதி காலம் அங்கே கணனிமயப்படுத்தி வைக்கப்படும். நாம் இல்லாமல் போனாலும் அங்கே வரலாற்றுப் பதிவாக பல நூற்றண்டுகளுக்குப் பத்திரப்படுத்தி வைக்கப்படும் ஆகவே உங்கள் படைப்புகளைத் தாமதியாமல் அனுப்பி வையுங்கள்!... மண் சஞ்சிகையின் வெளியீடுகளை நூலக இணையத்தில் (www.noolaham.org) பார்வையிடலாம்...**ஆசிரியர்......**




மேலதிக விபரங்கள் 79 ம் பக்கத்தில்






யேர்மனியில் வசிக்கும் எமது வாசகர் செல்வி ஜியா சிவகாந்த் அவர்களின் பிறந்தநாளில் மன்னார் “செபமாலை இரக்கத்தின் இல்லம்” சிறுவர்களுக்கு உணவளித்தல் 13.06.2025






லண்டனில் வசிக்கும் எமது வாசகர் திரு சிவராசா சிவாஸ்கர் அவர்களின் பிறந்தநாளில் புதுக்குடியிருப்பு “ஒளிரும் வாழ்வக இல்லம்“ சிறுவர்களுக்கு உணவளித்தல் 12.06.2025

Wissen, Kultur & Literatur • கல்வி, கலை, இலக்கிய சமூக இருமாத இதழ்

# ERDE

MANN
Germany / Ausgabe 232











## இஸ்ரேல் - ஈரான் போர்க்களம்
## 3ம் உலக யுத்தமாக மாறுமா?

| | | |
|---|---|---|
| வருட சந்தா | ஜேர்மனி | 20€ |
| | ஏனைய நாடுகள் | 25€ |